# விடுதலைப்புலிகள்

குரல்: 127 | கார்த்திகை – 2005 | அன்பளிப்பு: 12/=



03 வாக்களிக்காமலே ஒரு வாக்களிப்பு
05 புதிய சனாதிபதியும்...
07 தமிழீழத்திற்கான...
08 மாவீரர் விதைப்பும்...
10 தமிழர் தேசமும் சிங்கள...


# குறுகியகால இடைவெளியில் நியாயமான தீர்வு
# அன்றேல் தன்னாட்சியை நிறுவும் போராட்டம் அடுத்த ஆண்டில் தீவிரம்பெறும்

## மாவீரர்நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் தெரிவிப்பு

**எமது போராட்ட இலட்சியத்தை அடையும் அனுகுமுறை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய காலத்தை நாம் நெருங்கிவிட்டோம்.**

**பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து, விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகியகால இடைவெளிக்குள், எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்திசெய்யும் வகையில், ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்கவேண்டும். இது எமது இறுதியான, உறுதியான, அவசர வேண்டுகோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும்போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப் படுத்துவோம்.**

**இவ்வாறு இலங்கையில் புதிய அரசுத்தலைவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள,இலங்கையில் அரசியல் நெருக்கடி மிக்க இக்காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் கொள்கை நிலைப்பாடாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரையை அனைத்துத் தரப்பினரும் எதிர்பார்த்திருந்த வேளையில் தமதுரையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

**மாவீரர்நாள் உரையின் முழுவிபரம் வருமாறு:**

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று வணக்கத்துக்குரிய நாள்.

சுயநல இன்பங்களைத் துறந்து பொதுநல இலட்சியத்திற்காகப் போராடி வாழ்ந்து, அந்தச் சத்திய இலட்சியத்திற்காகச் சாவைத்தழுவிய உத்தமர்களை நாம் நினைவு கூரும் புனித நாள்.

இன்றைய நன்னாளில், அந்த மகத்தான மனிதப் பிறவிகளின் நினைவாக நாம் ஏற்றும் தீபங்களில், அந்த அக்கினி நாக்குகளின் அபூர்வ நடனத்தில், எமது மாவீரர்களின் சுதந்திரத் தாகம் அணையாத சுடராக ஒளிவிட்டு எரிவதை நாம் எமது நெஞ்சில் நினைவு கொள்வோமாக.

சத்தியம் மீது கட்டப்பட்ட இலட்சியத்திற்காக மடிபவர்கள் என்றுமே சாவதில்லை. அவர்கள் ஒவ்வொருவருமே தனிமனித சரித்திரங்களாக என்றும் வாழ்வார்கள்.

மாவீரர்களே, உங்களது ஒப்பற்ற தியாக வரலாறுகளின் ஒன்றிணைப்பாகவே எமது தேசத்தின் வீர விடுதலைக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது மாவீரன், எனது பிரியமான தோழன் சத்தியநாதன் எனது மடியில் உயிர்நீத்து இன்றுடன் இருபத்துமூன்று ஆண்டுகளாகக் காலநதி ஓடிவிட்டது. இந்தக் கால நீட்சியிற் கட்டவிழ்ந்த போராட்ட வரலாற்றில் பதினேளாயிரத்துத் தொள்ளாயிரத்து மூன்று (17,903) மாவீரர் தேச விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். இந்தப் பெருந்தொகைப் போராளிகளைவிடப் பலமடங்கு தொகையில் பொதுமக்களும் எதிரியாற் கொன்றொழிக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டு மொத்தத்தில் எமது தேசத்தின் விடுதலைக்காக நாம் கொடுத்த உயிர்ப்பலி மிகப்பெரியது. அளப்பரியது.

தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காகத் தமிழ்மக்கள் புரிந்துள்ள மாபெரும் தியாகத்தை, அதன் ஆன்மீக மகத்துவத்தை, அதன் வரலாற்று முக்கியத்துவத்தைச் சிங்களத் தேசம் மட்டுமன்றிச் சர்வதேசச் சமூகமும் உணர்ந்து கொள்ளாதது எமக்கு ஏமாற்றத்தையும் வேதனையையும் தருகிறது.

அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரின் உணர்வுகளை, அவர்களது வாழ்நிலை அவலங்களை, அவர்களது தேசிய அபிலாசைகளைச்


(02ஆம் பக்கம் பார்க்க)




மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் உரையாற்றியபோது...


www.eelamview.com

# அரசியல் தீர்வா! தன்னாட்சிப் போராட்டமா!
# முடிவெடுக்கவேண்டிய நிலையில் புதிய சனாதிபதி

புலிகளின் குரல்

2005ஆம் ஆண்டு மாவீரர்நாள் செய்தியை தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

கடந்த மூன்றரைவருட சமாதானகால அரசியலில் சிங்கள அரசு காட்டிவரும் கடும்போக்கையும் - புலிகளின் எல்லைகடந்த நெகிழ்வுப்போக்கையும் தலைவர் பிரபாகரன் தெளிவாக விளக்கியுள்ளார்.

தமிழர்களுடன் சமாதானமாக வாழ்வது மற்றும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை மதிப்பது என்ற விடயங்களில் சிங்கள அரசு வர வர தனது கடும்போக்கு நிலைப் பாட்டைத் தீவிரப்படுத்துவதை தனது அரசியல் செய்தியில் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழினத்திற்கு அரசியல்தீர்வு வழங்க மறுக்கும் சிங்களத்தின் கடும்போக்கு - இராணுவவாத அரசியலை சர்வதேச சமூகமும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

சமாதானம் - பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாட்டை இறுகப் பற்றிப்பிடிக்க சர்வதேச சமூகம் முனைகின்றதே யல்லாமல் யதார்த்த ரீதியாக சிங்கள அரசு அவற்றை நிராகரித்துவருகின்றது என்பதை புரிந்துகொள்ள அது தொடர்ச்சியாக மறுத்துவருகின்றது. தமிழரின் அரசியல் கையறுநிலையைப் புரிந்துகொள்ள சர்வதேச சமூகமும் மறுக்கின்றது என்பது 'கவலை அளிக்கும் செயலாக உள்ளது' என்று தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய நிலையில் அமைதி அரசியல் என்பது தமிழ்மக்களுக்கு விரக்தியும் - வேதனையும் தருவதாகவே உள்ளது. "சமாதானம் - போர்நிறுத்தம் - பேச்சுவார்த்தை என்பன எல்லாம் தமிழ்மக்களைப் பொறுத்தவகையில் அர்த்தமற்ற சொற்பதங்களாக யதார்த்த மெய்நிலைக்குப் பொருந்தாத வார்த்தைப் பிரயோகங்களாக மாறிவிட்டன". என்று தமிழ்மக்களின் மனநிலையைத் தலைவர் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளை சிங்கள அரசு மனப்பூர்வ மாக நடாத்தும் என்று தமிழ்மக்கள் என்றுமே நம்பிய தில்லை. சமாதானம் என்றாலே சதி அரசியல் என்றே சிங்கள அரசு அர்த்தப்படுத்திக்கொள்கின்றது. அனாலும், தமிழரின் போராட்ட நியாயங்களை உலகமக்களுக்கு எடுத்து துரைக்கும் வாய்ப்புகளாக சமாதானப் பேச்சுக்காலத்தை புலிகள் இயக்கம் பயன்படுத்துகின்றது என்றும் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது நடைபெற்ற டோக்கியோ மாநாட்டை (2003 யூன்) புலிகள் ஏன் புறக்கணித்தார்கள் என்பதையும் தலை வர் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

நிதி உதவிகளையும் - ஆயுதக் களைவையும் ஒன்றிணைத்து புலிகளுக்கு அழுத்தம்கொடுக்க நடந்த ஒரு கூட்டுச்சதியை முறியடிக்கும் நோக்குடனேயே அம் மாநாட்டை புலிகள் பகிஸ்கரித்தனர் என்று அவர் விளக்க மளித்துள்ளார்.

பேச்சுவார்த்தை - போர்நிறுத்தம் என்று கூறிக் கொண்டே போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முரணாக சிங்களப் படைகள் புலிகள் இயக்கம்மீது ஒரு நிழல் யுத்தத்தை நடாத்திக்கொண்டிருக்கின்றது என்றும் அவர் குற்றம் சாட்டி யுள்ளார்.

இப்போது, போர்நிறுத்தத்தை ஏற்காத - தமிழரின் தாயகத்தை அங்கீகரிக்காத - ஒற்றையாட்சியே (சிங்களவர் ஆட்சியே) இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றுகூறி சிங்கள மக்களின் ஆணைபெற்ற புதிய சனாதிபதி பதவிக்கு வந்துள்ளார். எல்லோரும் அறிந்த இன்னொரு கடும் போக்காளர் (ரட்ணசிறி விக்கிரமநாயக்கா) பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசியல் மீண்டும் இரத்தக்களரி யுகத்திற்கு நகர்த்தப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மையாக உள்ளது. புதிய சனாதிபதியின் அரசியல் கூட்டாளிகளாக அதிதீவிர சிங்கள இனவெறிக் கட்சிகள் சேர்ந்துள்ளன. புலிகள் இயக்கத் துடன் பேசுவதையே அவர்கள் நிராகரிக்கின்றனர்.

இருந்தபோதும் தலைவர் பிரபாகரன் அவர்கள் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் ஒரு சமாதானத் திற்கான சந்தர்ப்பத்தை மாவீரர்நாள் செய்தியூடாக வழங்கி யுள்ளார்.

"சனாதிபதி ராஜபக்சவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சிறிதுகாலம் நாம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவுசெய்துள்ளோம்". என்று தலைவர் கூறியுள்ளார்.

சமாதானம் என்று கூறி காலத்தை இழுத்தடித்து - அதன்மூலம் தமிழரின் தேசிய எழுச்சியை நசுக்க சிங்கள அரசு எடுக்கும் சூழ்ச்சிக்கு புலிகள் இயக்கம் இடங் கொடுக்கமாட்டாது. அதேசமயம், புதிய சனாதிபதிக்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதன்மூலம் சர்வதேச சமூகத்திற்கும் தலைவர் அவர்கள் ஒரு செய்தியை கூறியுள்ளார். சமாதானத்திற்காக புலிகளை வற்புறுத்துவதில் எந்தப் பயனுமில்லை, புலிகள் சமாதான அரசியலில் போதுமான அளவு பங்கெடுத்து விட்டார்கள். இனி, சமாதானத்தை நோக்கி ஆக்கபூர்வமான வகையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது சிங்கள அரசுதான். இதை சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும்.

சமாதானம் தொடர்பான தமிழ்மக்களின் கற்பனை கள் அனைத்தும் தகர்ந்துவிட்டன. இப்போது அவர்கள் கோபத்துடனும் - விரக்தியுடனும் உள்ளனர். இந்த மக்கள் உணர்வை மதிக்கவேண்டிய தேசியக்கடமை புலிகள் இயக்கத்திற்கு உண்டு. இந்த யதார்த்தத்தையும் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது மாவீரர்நாள் செய்தியில் குறிப் பிட்டுள்ளார்.

"பொறுமையிழந்து - நம்பிக்கையிழந்து - விரக்தி யின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே வரையறுக்கப்பட்ட ஒரு குறுகியகால இடை வெளிக்குள், எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்திசெய்யும் வகையில், ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்கவேண்டும். இது எமது இறுதியான - உறுதியான அவசர வேண்டு கோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிரா கரித்து, கடும்போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து, எமது சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேச சுதந்திரப்போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்". என்று தலைவர் பிரகடனம் செய்துள் ளார்.

தலைவர் விடுத்துள்ள மாவீரர்நாள் செய்தியின் முக்கிய பகுதியாக மேற்குறித்த வாக்கியங்கள் உள்ளன. கடந்த மூன்றரை வருடகால சமாதான அரசியலில், வரப் போகின்ற 2006ஆம் ஆண்டு ஒரு தீர்மானகரமான ஆண்டாக இருக்கப்போகின்றது. •

## 2005 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

சிங்களப் பெரும்பான்மை இனம் புரிந்துகொள்ளவில்லை. புரிந்துகொள்ள எத்தனிக்கவுமில்லை. புரிந்துகொள்ளும் ஆற்ற லும் அறிவுத்திறனும் ஆன்ம பக்குவமும் அவர்களிடம் இருப்ப தாகவும் தெரியவில்லை.

சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்துபோய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத் துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்களமக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள். அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப்போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்களத் தேசம் விடுபடப் போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங் கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமு தாய மெய்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கைத்தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக்கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்துகொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை. தமிழரது இருப்பு நிலைபற்றிய உண்மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசை களைப் புரிந்துகொள்ளச் சிங்களத்தேசம் மறுத்து வருவதா லேயே தமிழ்மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர்வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர் களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துல கில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்க வில்லை. சிங்கள - பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்துபோகவில்லை. மாறாக, அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது. தென் னிலங்கை அரசியற் களத்தில் அதன் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இப்படியான புறநிலையில், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி, நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர, சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நாம் என்றுமே

(15ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

தொடர்புடைய அனைவரும் அதிர்ச்சியால் உறைந்துபோயுள்ளார்கள். இப்படியும் நடக்குமா என ஏங்கித்தான் போய்விட்டார்கள். **அடக்குமுறையாளர் கையிலிருக்கும் அனைத்து ஆயுதங்களும் ஒன்றில் பயனற்றுப்போகச் செய்யப்படுகின்றன; அல்லது அடக்குமுறையாளருக்கு எதிராகத் திருப்பப்படுகின்றன.** வரலாற்றின் அபூர்வ கணங்களாக இவை பதிவாகின்றன. மானிட விடுதலையின்பால் பற்றுக்கொண்டோர் மகிழ்வடையும் காலமிது. சனநாயகம் என்பது பெரும்பான்மையோர் முடிவு என்கிற நிலைக்கப்பாலும் சென்று நாடாளுமன்றத்தையே இணக்கப்பாட்டிற்குப் பதிலாக அடக்குமுறைக்கு பயன்படுத்தியோர் தமது செயற்பாடுகள் செல்லாக் காசாகிவிட்டது கண்டு அச்சமடைகின்றனர். தீவிரவாதம், பயங்கரவாதம் என தந்திரமாக வடிவமைத்து விடுதலைப்போராட்டங்களை திசைதிருப்ப அல்லது மென்மைப்படுத்த சனநாயக வழிமுறைகளை நம்பிய மேற்குலகிற்கோ இது வொரு சவாலாகிவிட்டது. தமிழீழமக்கள் இது வரை தமது மனப்பொந்தில் அணையாது காத்த தீப்பொறியைப் பற்றவைத்துவிட்டார்கள். அடைந்த அனைத்து அவமானங்களையும் துடைத்தெறிந்து சம்பந்தப்பட்டோருக்கு கடும் தண்டனையும் பாடங்களையும் வழங்கிவிட்டார்கள். ரணிலுக்கு மட்டுமல்ல மகிந்தருக்கும் கட்சியும் மனம் புகைந்த நிலையை தேர்தல் முடிவுகள் உருவாக்கிவிட்டன. சமாதானம், பேச்சு என்கிற சிறு சீசாவிற்குள் தமிழ்மக்களை விடுதலையுணர்வினை அடைத்துவிட்டோம். எனவே வெற்றுக் காசோலையில் போட்ட கையெழுத்தாக தமிழ்மக்கள் வாக்குகள் பற்றி கனவிலிருந்தார் ரணில். அக்கனவை நனவென நினைத்து புலிக்கும் யானைக்கும் இரகசிய தொடர்பென கதைவிட்டார் மகிந்தர். (எது எப்படியானாலும் சென்ற சனாதிபதித் தேர்தலில் (1999) 36இலட்சம் வாக்குகள் (42.71%) பெற்ற ரணில் இம்முறை அதிகமாக மட்டக்களப்பில் 79.51%, அம்பாறையில் 55.81%, திருமலையில் 61.33%, கண்டியில் 54.33%, நுவரெலியாவில் 70.37% எனப் பெற்றதற்கு யார் காரணம் என்பது புள்ளிவிபரம் தரும் தகவல்) இவ் வாக்குகளும் கிடைக்காவிட்டால் ரணிலின் வீழ்ச்சி எவ்வளவு மோசமானதாக இருந்திருக்கும். இருந்தும் இத்தேர்தல் தனக்கு மணிமகுடம் சூட்டும் என எதிர்பார்த்தவருக்கு கிட்டியது முட்கிரீடமே. அவரது அரசியல்வாழ்வு மட்டுமல்ல சேனநாயக்க / ஜே.ஆர் குடும்ப ஆட்சியும் அத்தமன


நன்றி: டெய்லிமிரர்

# வாக்களிக்காமலே ஒரு வாக்களிப்பு

தோல்வியையே எம் மக்கள் தம் வாக்குகளால் வாக்களியாது வாக்களித்துவிட்டார்கள். **எனவே வென்றவரும் எம் மக்கள்முன் தோற்றவராகிவிட்டார். எவ்வாறு நோக்கினும் வரலாற்றில் முதன்முறையாக தமிழீழ மக்களே இத்தேர்தல் முடிவுகளை தீர்மானித்துள்ளனர்.**

ஒருமுறை மேலோட்டமாக சிறிலங்காவின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தல் முடிவுகளை நோக்கலாம். 1 கோடியே 33 இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களில் 73.74 விழுக்காடு அதாவது 98 இலட்சத்திற்கு மேற்பட்டோர் வாக்களித்தனர். மகிந்தர் 50.29 விழுக்காடு வாக்குகளையும் ரணில் 48.40 விழுக்காட்டளவு வாக்குகளையும் பெற்றனர். வெற்றியின் மயிரிழை இடைவெளி வெறுமனே ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம் மட்டுமே. (இதுவரை நடைபெற்ற சனாதிபதித் தேர்தல்களில் மிகக் குறைவாகப் பெறப்பட்ட பெரும்பான்மையிது) யாழ் தேர்தல்மாவட்ட வாக்களிப்பு 1.21 விழுக்காடு - முல்லைத்தீவில் எவரும் வாக்களிக்காத போதும் வெலி ஓயா சிங்களவர் வாக்கும் சேர்க்கப்பட்டதால் 891 வாக்குகள் பதிவாகின. வன்னித் தேர்தல்மாவட்டத்தின் வாக்களிப்பு 34.30 விழுக்காடாகவும் மட்டக்களப்பில் 48.51, திருமலையில் 63.84, திகாமடுல்ல எனச் சிதைக்கப்பட்ட அம்பாறையில் 72.70 விழுக்காடாகவுமுள்ளன. திருமலையிலும் அம்பாறையிலும் தமிழ்மக்கள் வாக்களிக்காத நிலையிலும் வாக்களிப்பு விழுக்காடு கூடுதலாக இருப்பதற்கு காரணம் தெரிந்ததே. சிங்களக் குடியேற்றங்களால் சிதைந்த தமிழரின் சனத்தொகைப் பரம்பலின் பாதக நிலையிது.

ஒரு சாதாரணமான சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வரலாற்றினையே திருப்பிப் போடுமளவிற்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தப்போகும் நிலையில் மிக நீண்டகாலத்திற்கு எதிரொலிக்கப்போகும் முடிவிது. தாமாகப் போடுவார்கள் என எண்ணிய கட்சியும் போடாவிட்டாலென்ன என எண்ணிய

**mile j midj ;J mt khdq fisAk ; Jilj njwpe;J rk gejg gl NlhUf F fLk ; jz I idAk ; ghlq fisAk ; toq fp tpl lhh fs ; uzpYf F kl Lky y kfpejUf Fk ; Njhy tpiaNa vk ; kf fs ; jk ; thf Ffshy ; thf fsp ahJ thf fspj ;J tpl lhh fs ; vdNt ntd wtUk ;vk ;kf fs Kd ; Njhw wtuhfptpl lhh ; vt thW Nehf fpDk ; tuyhw wpy Kjd ; Kiwahf jkpo P kf fNs ,j ; Njhjy ; KbTfis j P khdpj ; Js sdh ;**

மாகிவிட்டது. உடனடியாகவே ரணிலின் கையாளான கட்சித் தலைவர் மலிக் பதவி விலகிவிட்டார். இனி பதவிவிலகல் அங்கு தொடர்கதை. ஆகவே ரணிலின் வீழ்ச்சியென்பது குறிப்பதென்ன?

சமாதானம், இயல்பு நிலையென கதையளந்து மேற்குலகம் என் பக்கம், இந்தியப் பின்புல ஆதரவென பயம் காட்டி மிக நவீன அரசியலுதவிகள் / அழுத்தங்கள் என்பவற்றினைப் பிரயோகித்து மேட்டிமைக் குடும்பத்தின் வலுவாக்கல் கோட்பாட்டிற்கு வீழ்ச்சி - எமது தாயகத்தின் அரிய வளமிக்க தாய் நிலங்களை விழுங்கி ஏப்பமிட்டு சிங்கள மயமாக்கிய நில அபகரிப்பிற்கு, தந்திரத்திற்கும் இனப்படுகொலைகளை மகிழ்ச்சியோடு ஏவி வெலிக்கடையில் குட்டிமணியின் தமிழ்க் கண்களை குதறி, இந்தியப் படைகளை ஏவி எம் மக்களை கொன்றொழித்து குமரப்பா,

**- க.வே.பாலகுமாரன் -**

புலேந்திரன் தொட்டு ஈழத்தின் இமயம் திலீபம் வரை தேசிய விடுதலை வீரரின் வீரச்சாவுகளுக்கு வினை விதைத்து வெறியாட்டம் போட்ட கொடுமைக்கும் குரூரத்திற்கும் வீழ்ச்சி என நீளும் இவ்வீழ்ச்சிக் கதை முடிவிலி.

ஒரு கணக்கு - நெடுநாள் கணக்கு எம் மக்களால் தீர்த்தாகிவிட்டது. இன்னொரு கணக்கு தீர்க்கப்பட வேண்டியுள்ளது. இத்தேர்தல் முடிவு உண்மையில் வழங்கியது ரணிலுக்கல்ல பெருவீழ்ச்சி. அது மகிந்தருக்கே உரியது. இற்றைவரையான எம் மக்கள் மீதான அனைத்து அடக்குமுறைகளினதும் திரட்சியின் பிணச்சுமையைத் தாங்க தாமாகவே முன்வந்த மகிந்தர் இவற்றிற்கான கணக்குகளை தீர்க்கும் போது அதனையேற்கப் போகின்றார். அதாவது தன் முன்னோர் விதைத்த வினைகள் யாவற்றிற்குமான மொத்த அறுவடையைச் செய்ய ஆயத்தமாகின்றார். அவசரம், அவசரமாக எங்கே பதவி பறிபோய்விடுமோ என்கிற அச்சத்தில் பதவியேற்று மகிந்தர் அப்பதவியை மாதக் கணக்கிலல்ல நாட்கணக்கிலல்ல மணித்துளிக் கணக்கில் காக்கும் நிலையிலுள்ளார். ஏதோ எதிர்க்கட்சித் தலைவர் பதவியேற்றது போல அவரது கட்சியின் ஆட்களே விரட்டப்படுகின்றனர். நாம் ஏலவே விடுதலைப்புலிகள் ஏட்டில் குறிப்பிட்டது போலவே பண்டா குடும்பத்திற்கெதிரான ராசபக்ச குடும்ப ஆட்சியை முன்னிறுத்த வந்தவர் "சேனா"க்கள் நாயக்க, "பண்டாக்கள்" நாயக்க குடும்ப ஆட்சிக்கு குழிதோண்டிய பின் செய்யப்போவதென்ன?

சிங்களத்திலே தனது குடும்ப ஆட்சியைத் தொடங்கும்போதே அதன் வீழ்ச்சியையும் கூடவே உறுதிப்படுத்திய மகிந்தர் எப்படியான அரசியல்வாதி? அவரது தளம், பலம், வெற்றி எல்லாமே அவருக்கு மட்டுமே உரியதல்ல. அது ஜே.வி.பியினர்க்கும் பொதுவானது. ஒரு உறையில் இரு வாட்களா? முதலில் எவர் வாளை உருவக்கூடும்? அவ்வாறு உருவும் போது உருவாகப்போகும் கொந்தளிப்பிற்கு வரலாறு பின்னால் என்ன பெயர் சூட்டும்? கிளர்ச்சியா? புரட்சியா? சதிப்புரட்சியா? உள்நாட்டுப் போரா? மூன்றாவதும் இறுதியுமாக தன் புதல்வர்களான ஜே.வி.பி மீதான சிங்கள ஆட்சியமைப்பின் பலியெடுப்பா? ஜே.வி.பியினரின் கதை முடிவா? புதிய தொடக்கமா? சிங்களத்தில் அமைதி காக்கவென தலையீடுகள் நிகழுமா? நாமொன்று மட்டும் கூறமுடியும். இராசபக்ச குடும்ப வீழ்ச்சியாக மட்டும் இந்நிகழ்வு அமையப்போவதில்லை. முழுச் சிங்களக் குடும்பங்களுக்குமே இது வீழ்ச்சியாகும். இங்கே நாம் சாபமூட்டவில்லை, கலம்பகமும் பாடவில்லை. வரலாற்றின் தருக்க விதிகளின் இயக்கத்தை உணர்த்தி மட்டும் நிற்கின்றோம்.

இருவேறு தேசங்களின் அடிப்படைப் பகைமுரண்பாடுகள் உச்ச அளவிற்குக் கூர்மையடைகின்றன. அவை முற்றி வெடிக்கும்போது விளையும் விளைபொருட்கள் வெவ்வேறாகின்றன. சிங்களத்தில் அது வேறாகவும் தமிழீழத்திலோ அது வேறாகவும் அமையும். ஆனால் துரதிட்டவசமாக தமது அடிப்படை பகைமுரண்பாடுகளை இன்னமும் சிங்களம் சரியாக இனம்காணவில்லை. மகிந்தர் எவ்வாறு வென்றார்? சிங்கள மக்களின் கும்பி கொதிக்கின்றது. அதனை தணிவிக்கவேண்டும் என்கிற உண்மையையும் (இந்தளவில் இது முற்போக்கான தேசியமே) ஆனால் அதேவேளை பேரினவாத அடிப்படைவாத சிந்தனைகளின் விளைவாக தமது இயலாமையை, பதவியாசையை மறைக்க, திசைதிருப்ப தமிழரை பகடையாக அவர் பயன்படுத்தியது வரலாற்றின் மிகப்பாரிய தவறாகப்போகின்றது. (மகிந்தரது வாக்குவங்கி - கம்பகாவில் 54.70%, காலியில் 58.41%, மொனறாகலையில் 57%, மாத்தறையில் 61.85%, அம்பாந்தோட்டையில் 63.43%). இந்தளவில் அவர் "தவறான சுவரில் சாத்தி வைக்கப்பட்டுள்ள ஏணி." இப் பாரிய சிக்கலை ஆய்வாளர் முதிருநாவுக்கரசின் வார்த்தைகளில் சொல்ல விரும்புகின்றோம். மிக விரைவில் வெளிவந்து மிகப் பரபரப்பைத் தோற்றுவிக்கப் போகும் 'இலங்கை - 2007' என்கிற நூலிலிருந்து அவரது அனுமதியோடு சில வரிகள், **"காலத்திற்குக் காலம் இலங்கை அரசியலானது நரபலியெடுக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. அந்த நரபலி ஒரு பொருளாதாரப் பொறிமுறையிலிருந்து பிறக்கின்றது."** இங்கேயுள்ள முக்கிய பட்டறிவு என்ன வென்றால் அது தமிழரை பலியெடுக்க முடியாவிட்டால் சிங்களவரை பலியெடுக்கும் என்கிற முக்கிய தகவலை நூலாசிரியர் விளக்கியமை தான். இங்கே பல வினாக்கள் வாசகர் மனதிலே எழும். சிங்களத்திற்கும் தமிழீழத்திற்குமான அடிப்படை பகைமுரண்பாடு எப்போது தீர்க்கப்படும்? அதேபோல் சிங்களவரும் சிறிலங்கா ஆட்சியாளர்க்குமான முரண்பாடு எப்போது தீர்க்கப்படும்? எது முந்தும்? எது பிந்தும்? இரண்டும் சமகாலத்திலா? இக் கேள்விகளுக்கான விடை அனைத்தையும் இலங்கைத்தீவின் தீர்மானிப்பாளரும் தமிழீழத் தின் நம்பிக்கைப் பொறுப்பாளருமான ஒருவரிடம் விட்டுவிடுகின்றோம். "எல்லாருக்கும் விழிகள் உண்டு உலகினைப் பார்க்க, ஆனால் ஒரு சிலருக்கே தரிசனமுண்டு, காலத்தினைக் கடந்து உலகினைப் பார்க்க." என கவிஞர் மு.பொ பாடிய அந்த ஒருவரின் (நன்றி - விடுதலைப் பேரொளி) முடிவுகளை அறிய முயல்வதே எம்மாலியன்றது.

இது கட்டுரையின் இறுதிப் பகுதி: வாக்களிக்காமல் வாக்களித்த எம் மக்கள் உலகிற்குச் சொல்லும் "வாக்குகள்" எவை? முதலில் சிங்களத்தாருக்குக் குறிப்பாக ஜே.வி.பி யினர்க்கு - "வரலாறு தரும் வாய்ப்பைத் தவறவிட்டு விடாதீர்கள்." உங்களது நல்வாழ்விற்கு எவர் எதிரியோ அவரே எமக்குமான பொது எதிரி. உங்களது வாழ்வை அபகரித்த நிலப் பிரபுத்துவ, முதலாளிய, மேட்டிமைத்தன குடும்பக்குழு ஆட்சியாளரே எம்மையும் ஒடுக்கினர். ஒரு குடும்பக்குழு இப்போது அத்தமனம் கண்டுள்ளது. மறு குடும்பக் குழுவோடு கூட்டுச் சேர்ந்திருப்பது ஆட்சியதிகாரத்தினைப் பங்கு போடவா? அல்லது கூடவிருந்து குழிபறிக்கவா? தெளிவாக தீர்மானித்தால் நிழற்றிரை அகலும். இயலாமையால் திசைதிரும்பலை, பதவியாசையைப் பற்றிநின்றால் விளைவது "நரபலியே". தமிழர் தலையை உருட்டுவதை இனிமேலாவது விட்டுவிடுங்கள்.

அதுபோலவே ஏனைய எம் தமிழ் பேசும் மக்களின், மலையக மக்களின் தலைமைகளுக்கு தமிழ்மக்கள் கொடுக்கும் வாக்கு சற்றுக் கடுமையானது. எமக்குமான உங்கள் எல்லாருக்குமான பொது எதிரியை பலமிழக்கச் செய்து வீழ்த்தும்போது முண்டுகொடுக்க முற்படாதீர். உங்கள் சூழல், இருப்பு, சனநாயக செயற்பாட்டில் வேறு தெரிவின்மை என்பதை நாம் புரிந்தாலும் இலக்குகளைக் கைவிட்டும் சொந்தநலன் கருதியும் தடம்புரள்வது இறுதியில் கசப்பான பாடங்களையே கற்றுத்தரும்.

**xU fzf F - neLehs ; fzf F vk ; kf fshy ; j P ; jhfp tpl lJ. ,d dhU fzf F j P ; fg gl Ntz bAs sJ. ,j ; Njhjy ; KbT cz ikapy ; toq fpaJ uzpYf fy y ngU tP o r rp. mJ kfpe jUf Nf chpaJ. ,w wtiuahd vk ; kf fs ; kPhd midj ;J mlf FKiwfspdJk ; jpul rpapd; gpzr Rikiaj ; jhq f jhkhfNt Kd te j kfpe ; jh ; ,tw wpwfhd fzf Ffis j P h f Fk ;NghJ mjidNaw fg ; Nghfpd whh ; mjhtJ jd Kd Ndhh tpijj j tpidfs ; ahtw wpw F khd nkhj j mWtiliar nra a Maj jkhfpd whh ;**

இனிமேல் நிகழவிருக்கும் புதிய பரிமாணத்தினைப் புரிந்துகொள்ளுங்கள்; அரசியல் நுண்ணுணர்வுடன் நிகழ்வதை அவதானியுங்கள். தன்னலமின்றி பொறுமையுடன் செயற்படுங்கள்.

இறுதியாக சருவதேசத்திற்கும் எம் மக்கள் வாக்கொன்று சொல்கின்றார்கள். ஆளும் தரப்பு ஒத்துழைக்காத அபூர்வமான அமைதி முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நீங்கள் முன்னர் இந்தியாவினை /அதன் படையை ஜே.ஆர் கையாண்ட கதை (நடுவரை ஆடும் தரப்பாக மாற்றிய கதை)யை அறியுங்கள். தமிழ் மக்களை கொன்றொழிக்கவும், அவர்கள் அடிப்படை உரிமைகளைப் பயங்கரவாதத்தின் பெயரால் உங்களைக் கொண்டுவித்து மறுக்கவும் பயன்படும் பகடையாகாதீர். போகிற போக்கில் உங்கள் முதுகுகளுக்குப் பின்னால் சிங்களத்தில் உருவாகும் பேரினவாத, இனவெறி பிடித்த, மத அடிப்படைவாதம் வளர்வதை அவதானியுங்கள். இன்றேல் அமைதி முயற்சிகள் இருந்த அமைதியினையும் குலைத்தன என்கிற பழியே மிஞ்சும்.

இவைதான் வாக்குகள். எங்கள் அன்பிற்குரியவர்களே: தேர்தல் புறக்கணிப்பென தமிழீழ மக்கள் வீசிய சாட்டை எவரெவர் முதுகில் பட்டதோ அவரவர் உணரவேண்டியது.

வலியையல்ல
வரலாற்றின் தீர்ப்பை. ●



www.eelamview.com

# தமிழீழம் சிறுவர்களின் காப்பரண்

-- அ.தீபன் --



**சிறுவர்கள்** மானுடத்தின் அதி அக்கறைக்கு உரியவர்கள். அந்த முளைகளிலிருந்துதான் மானுடத்தில் பேணிடவேண்டியவையும் அழித்திட வேண்டியவையும் உருவாக்கப்படுகின்றன. மானுடவாழ்வு செழித்து ஓங்கிட அந்த முளைகளின் வாழ்வு பேணிக் காக்கப்பட்டு பண்படுத்தப்படவேண்டியதாகிறது. ஆதனால்தான் சிறுவர்கள் தொடர்பான உரிமைச் சட்டங்கள் உலகின் எல்லா மனித உரிமைச் சாசனங்களிலும் இடம்பெற்றுள்ளன. உலகில் எப்போதும் அக்கறையுடன் பேசப்படும் விவகாரமாகவும் அது இருக்கிறது.

ஆனால் இன்றைய உலகில் சிறுவர்களின் நிலை எவ்வாறு உள்ளது? அவர்களுக்கென உரித்தான உரிமைகளை அவர்களால் அனுபவிக்கத்தான் முடிகிறதா? இத்தகைய வினாக்கள் எழுப்பப்படுவதிலேயே அர்த்தமில்லை என்று கூறுமளவிற்கு சிறுவர்களின் வாழ்வு சிதைக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்கா, பிரான்சு, ஜேர்மனி, இந்தியா உட்பட்ட எல்லா நாடுகளினதும், உலகின் எல்லாப் புனிதப் பிரதேசங்களினதும் மூலை முடுக்குகளிலெல்லாம் சிறுவர்கள் வதைக்கப்படுகிறார்கள். பாலியல் வக்கிரங்களுக்கு உள்ளாக்குதல், போரில் ஈடுபடுத்துதல், போரின்மூலம் துன்புறுத்துதல், தொழிலாளர்களாக்கி வேலைவாங்குதல், உளவியல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குதல் உட்பட்ட பல்வேறு கொடுமைகளை உலகின் எல்லா இடங்களிலும் சிறுவர்கள் இன்றும் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

வரலாறு இல்லை. போர் எங்கெங்கெல்லாம் நடந்ததோ அங்கங்கெல்லாம் சிறுவர்களின் வாழ்வு கறை படிந்ததாகவே இருந்திருக்கிறது.

எமது மண்ணும் அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. சிங்களப் பேரினவாதம் தமிழ்ச் சிறுவர்கள் மீது திணித்த இருண்ட வாழ்வு என்பது தமிழ்மக்கள் மீது கொடியபோர் திணிக்கப்பட்ட கடந்த மூன்று தசாப்தங்களில் நடந்தவை மட்டுமல்ல,

அது அதனிலும் நீண்டது. அகிம்சைப் போராட்டத்தைத் தமிழர்கள் நடாத்திய ஆரம்ப காலங்களில் சிங்களத்தால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளின் போதெல்லாம் தமிழ்ச் சிறுவர்களின் எல்லா உரிமைகளும் பலியெடுக்கப்பட்டன.

கிட்லரையும், முசொலினியையும், பிய்த்தெடுத்துக் கொதிக்கும் தார்ப் பீப்பாய்களுக்குள் போட்டபோதும், ஆண்களையும் பெண்களையும் நிர்வாணப்படுத்தி வன்கொடுமை புரிந்தபோதும் ஈழத்தமிழினம் எழுப்பிய அவலக்குரலை உலகில் எவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. எவரின்



இதயத்தையும் எட்டாத தமிழ்க் குழந்தைகளின் அவலக்குரல்கள் ஆதிவெளியில் அநாதரவாய் அலைந்து கொண்டிருந்தன.

தமிழர் போராட்டம் ஆயுதப்போராய் பரிணாமம் பெற்றபோது சிறுவர்கள் மீதான சிங்களத்தின் வன்முறைகளும் உக்கிரம் பெற்றன.

உறவுகளோடு கூடிக் குதூகலிக்கும் உரிமையைப் பறித்தெடுத்தது. அப்போதெல்லாம் எங்கள் சிறுவர்களின் அவலக்குரல்கள் உலகில் சிறுவர் நலன்களில் அக்கறை கொண்டதாகக் கூறிக்கொள்ளும் எவரது காதுகளிலும் கேட்கவேயில்லை.

தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பை முன்னெடுப்பதற்காகத் தமது மண்ணில் 30,000 சிறுவர் பாலியல் தொழிலாளர்கள் உருவாக அனுமதித்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்ச் சிறுவர்கள் விடயத்தில் எவ்வாறு நடந்துகொண்டிருப்பார்கள் என்பதை எவருக்கும் சொல்லித்தான் புரியவைக்க வேண்டியதல்ல.

ஆனால் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போரைத் தலைமைதாங்கி முன்னெடுத்துச் செல்லும் தேசியத் தலைவ திரு.வே.பிரபாகரன் அவர்கள் சிறுவர்களை அனைத்துக் கொடுமைகளினின்றும் பேணிக் காப்பதில் முழு அளவிலான அக்கறைகொண்டு செயற்பட்டார். உலகில் நடந்த ஏனைய விடுதலைப் போராட்டங்களின்போது கூட இருந்திராத புதிய முன்மாதிரியாக தலைவரின் இச்செயற்பாடுகள் அமைந்தன. போரின் கொடுமைகளிலிருந்து மட்டுமல்லாமல் சமூகரீதியான ஏனைய கொடுமைகளிலிருந்தும் கூட தனது சிறுவர்களைக் காத்து வளர்த்தெடுப்பதில் தலைவர் அவர்கள், விடுதலைப்போரைத் தீவிரமாக முன்னெடுத்த சமகாலத்திலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

பாடசாலை போகாத சிறுவர்கள், அநாதைகளாகியதால் கையேந்தி நிற்கும் சிறுவர்கள், போசாக்கின்றி நோய்களால் தவிக்கும் சிறுவர்கள் என சிறுவர்கள் பாதிக்கப்படாதவாறு விடுதலைப்புலிகள் அமைப்பினால் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. போரின்போது தமது தாய் தந்தையரைப் பறிகொடுத்த சிறுவர் சிறுமியருக்காக செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை போன்ற அமைப்புகளை உருவாக்கி, நூற்றுக்கணக்கான சிறுவர்களை உள்வாங்கி, அவர்களைப் பராமரித்துக் கல்வியூட்டி வளர்த்ததுடன், தானே தாயாகவும் தந்தையாகவும் நின்று தனது கணிசமான நேரத்தை அதற்காகச் செலவுசெய்துவருகின்றார் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள்.

அதுபோலவே வறுமையில் வாழ்ந்த சிறுவர்களுக்காக சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டுக் கல்வியும் உணவும் நன்நடத்தையும் ஊட்டப்பட்டுச்

> "எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப் பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் கண்ணியமும் உள்ளவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்றவேண்டும். அந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக உருப்பெறவேண்டும்."
>
> தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

மனிதனின் ஆக்கிரமிப்பு உணர்வு என்பது எல்லா உரிமை மீறல்களினதும் அடிநாதமாய் இருப்பதுபோலவே சிறுவர்கள் விடயத்திலும் இருந்துவிடுகிறது. அத்தகைய உணர்வு போர்மூலம் பிரயோகிக்கப்படும்போது சிறுவர்கள் எல்லாவிதமான வக்கிரங்களுக்கும், சீரழிவுகளுக்கும் உள்ளாகிறார்கள். உலகின் எந்தவொரு நாடுங்கூடத் தமது நலன்களின் பொருட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது சிறுவர்கள் மீது அக்கறை கொண்டதாக

இடி அமீனையும் கண்டுகொண்ட சர்வதேசத்தின் கண்களால் "தமிழர்களின் தோலில் செருப்புத் தைத்துப்போட ஆசை கொண்டுள்ளேன்" என்றும் அதுபோன்ற தமிழ் வெறியூட்டும் சுலோகங்களையும் பகிரங்கமாகவே பிரகடனம் செய்து ஆட்சிபுரிந்த சிங்கள ஆட்சியாளர்களின் கீழ் இலங்கைத்தீவில் தமிழர்கள் வதையுண்டிருந்ததைக் காணமுடியவில்லை. நமது பெண்களின் மார்பினிலே சிங்களச் 'சிறி' எழுத்தைக் குறியாகச் சுட்டபோதும், குழந்தைகளைத் தாயிடமிருந்து

சிங்களப் படைகளின் துப்பாக்கிகளும், பீரங்கிகளும், போர் விமானங்களும் சிறுவர்களை ஈவிரக்கமின்றிப் பலிகொண்டன. அவர்களைப் பெற்றவர்களிடமிருந்து கொடூரமாகப் பிரித்தெடுத்து அநாதைகளாக்கின, பிஞ்சுகளின் உள்ளங்களைப் பாழ்படுத்தின. சிங்கள ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்ட வாழ்வியல் தடைகள் மக்களின் குடியிருப்புகளைப் பறித்துச் சிறுவர்களை வீதிகளில் அநாதரவாக விட்டது. அவர்களின் கல்விகற்கும் உரிமையை,

சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். போசாக்கற்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கா தாய் சேய் பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பாடசாலைகள் தோறு சத்துணவுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழீழக் கல்வி வளர்ச்சிக் கழகம், தமிழீழ மாணவ அமைப்பு போன்றவற்றினூடாகச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அளப்பரிய பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

(தொடர்ச்சி 14ஆம் பக்கத்தில்)

# புதிய சனாதிபதியும் சமாதானத்தின் தலைவிதியும்



நடந்துமுடிந்துள்ள சிறி லங்காவுக்கான சனாதிபதித் தேர்தல் சிங்கள - தமிழ் இன முரண்பாட்டைப் பொறுத்த வகையில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தாகும்.

தமிழர் அபிலாசைகள் வேறு - சிங்களவர் நலன்கள் வேறு என்பதை தேர்தல் முடிவுகள் நிரூபித்துவிட்டன. சிங்களவரின் சிந்தனை வேறு - தமிழரின் எண்ணப்பாடுகள் வேறு என்பதும் தெளிவாக்கப் பட்டுள்ளது.

இலங்கைத்தீவில் இரு அரசுகள் என்ற இராணுவ யதார்த்தம் ஒருபுறம் இருந்துவர மறுபுறத்தில் அரசியல் ரீதியிலும் இருவேறு துருவங்களாக தமிழரும் - சிங்களவரும் பிரிந்துபோய் உள்ளனர் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் புதிய சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ச தனது இனவாத நிலைப்பாட்டை - தமிழருக்கு எதிரான கொள்கையை வெளிப்படையாகவே முன்வைத்து சிங்களவரின் அமோக ஆதரவைப் பெற்று அதிகாரத்திற்கு வந்துள்ளார்.

தமிழரின் அரசியல் அபிலாசைகள் கருத்தில் எடுக்கப்படாது நடாத்தப்பட்ட

***மகிந்தராஜபக்ச புதிய சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதத்தை ஒற்றை ஆட்சிமுறையை அமுல்ப்படுத்த ஆணைகேட்ட ஒரு சிங்களத் தலைவரை சிங்களவர் சனாதிபதியாக்கி விட்டுள்ளனர். தமிழருக்கு எந்த ஒரு உரிமையும் வழங்கக்கூடாது என்ற கொள்கையில் விடாப்பிடியாக உள்ள ஜே.வி.பியும், கெலஉறுமயவும், பிக்குகள் முன்னணியும் மகிந்த ராஜபக்சவிற்கு பக்கபலமாக உள்ளனர்.***

சனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் நிராகரிக்க முடிவெடுத்தனர். தேர்தலை நிராகரித்து - வாக்கெடுப்பை புறக்கணித்து தமிழ்மக்களும் உறுதியான அரசியல்த் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

சிங்களத்தில் அமோகமான வாக்களிப்பு. தமிழர் தேசத்தில் முழுமையான தேர்தல் நிராகரிப்பு. அரசியல் ரீதியில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள அம்சங்கள் இவை.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலும், இப்போது (2005) நடந்து முடிந்துள்ள சனாதிபதித் தேர்தலும் ஒரேவிதமான அரசியல் செய்திகளையே வெளிப்படுத்தியுள்ளன.

2004 தேர்தலில் சிங்கள இனவாதக் கூட்டணியே வெற்றிபெற்றது. மூன்றுவருட சமாதான காலத்திற்குப் பின்னர், இப்போதும், அதே இனவாதக் கூட்டணியே அதிகாரத்தைப் பற்றியுள்ளது.

2004இல் தமிழ்மக்கள் ஒருங்கு திரண்டு வாக்களித்து தம் அரசியல் அபிலாசைகளை நிலைநாட்டியிருந்தனர். இம்முறை வாக்களிப்பை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து அதே அரசியல் செய்தியையே உலகிற்கு காட்டியுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி - ஹெல உறுமய அரசியல் கூட்டணி மகாவம்சக் கருத்துக்களை வலியுறுத்தி - சிங்கள, பௌத்தர்களுக்குத்தான் இலங்கைத்தீவு சொந்தம் என்று இனவெறிப் பிரச்சாரம் செய்தனர். ஒற்றை ஆட்சிதான் அதாவது சிங்களவர் ஆட்சிதான் இலங்கைக்குத் தேவை என்று பரப்புரை செய்தனர். தமிழர் தாயகத்தை - தமிழர் தேசியத்தை - தமிழர் தன்னாட்சியை முற்றுமுழுதாக நிராகரித்தனர்.

தமிழரின் அரசியல் தனித்துவத்தை மறுதலித்த இந்த இனவாத நிலைப்பாட்டை சிங்கள மக்களும் ஆதரித்து வாக்களித்தனர்.

இந்த நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் - அரசியல்த்தீர்வு முயற்சிகளுக்கும் இனியும் இடமுண்டா! என்ற கேள்வியே எழுந்துள்ளது.

அமைதிவழியில் தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்க்க சிங்கள அரசு முன்வரமாட்டாது என்பது தமிழர் தரப்பிற்கு ஏற்கனவே தெரிந்த உண்மைதான்.

எனினும், இந்த அரசியல் யதார்த்தங்களைப் புரிந்துகொள்ள இன்னமும் சர்வதேச சமூகம் முன்வராதது தமிழ்மக்களுக்குக் கவலை அளிப்பதாகவே உள்ளது.

எவர் சனாதிபதியாக வந்தாலும் அவர் சமாதானப் பேச்சிற்கு வரவேண்டும் என்று சர்வதேச சமூகம் அறிவுறுத்தியுள்ளது.

உலக அரசுகளிடமிருந்து உதவி நிதிகளைப் பெறுவதற்காக சர்வதேசத்தின் சமாதானக் கருத்துக்களை புதிய சனாதிபதி உள்வாங்கியே தீரவேண்டும் என்று சர்வதேச சமூகம் நம்புகின்றது.

ஆனால் உதட்டளவில் சமாதானம் பேசி சர்வதேசத்தை ஏமாற்றி - உதவி நிதிகளைப் பெறும் விடயத்தில் சிங்கள அரச தலைவர்களுக்கு நிகர் அவர்களேதான்.

கடந்த மூன்றுவருட சமாதான காலத்தில் சர்வதேச அழுத்தத்திற்குப் பணிந்து - சமாதானச் சூழலை நிலைநிறுத்த - சிங்கள அரசு என்ன செய்தது! எதுவுமே செய்யவில்லை. புலிகள் இயக்கத்தின் இடைவிடாப் பொறுமைதான் இன்றுவரை சமாதானச் சூழலை தக்கவைத்துள்ளது.

அபிவிருத்தி பற்றிய கனவுகளுடனும் - சமூக மேம்பாடு என்ற எண்ணங்களுடனும் ஆட்சி நடாத்தும் அரச தலைவர்களைத்தான் வெளிநாட்டு உதவிகளுடன் இணைந்த சர்வதேச அழுத்தங்கள் கட்டுப்படுத்தும்.

சிங்களத் தலைவர்களிடம் அப்படியான உயர்ந்த சிந்தனைகள் இல்லை. பெரும்பாலான சிங்கள மக்களிடமும் அத்தகைய எதிர்பார்ப்புகள் இல்லை.

சிங்கள மேலாதிக்கச் சிந்தனை என்ற இனவெறிக் கோட்பாட்டிற்கு அடுத்ததாகவே அபிவிருத்தி - சமூகமேம்பாடு என்ற விடயங்களை சிங்களவர் கருதுகின்றனர்.

***தமிழர் அபிலாசைகள் வேறு - சிங்களவர் நலன்கள் வேறு என்பதை தேர்தல் முடிவுகள் நிரூபித்துவிட்டன. சிங்களவரின் சிந்தனை வேறு - தமிழரின் எண்ணப்பாடுகள் வேறு என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.***

***இலங்கைத்தீவில் இரு அரசுகள் என்ற இராணுவ யதார்த்தம் ஒருபுறம் இருந்துவர மறுபுறத்தில் அரசியல் ரீதியிலும் இருவேறு துருவங்களாக தமிழரும் - சிங்களவரும் பிரிந்துபோய் உள்ளனர் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.***

சிங்களத் தலைவர்களினதும் - சிங்கள மக்களினதும் அரசியல் மனநிலை இவ்வாறாக இருக்கும்போது இவர்களுடன் தமிழர் தரப்பு எவ்வாறு சமாதானம் பற்றிப் பேசமுடியும். சமாதானம் பேசும்படி தமிழர்தரப்பை எவ்வாறு சர்வதேச சமூகம் வற்புறுத்த முடியும்!

சமாதானத்தை வலியுறுத்தி 2004இல் ஆட்சி அமைத்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தவிர சமாதான முயற்சியில் வேறெதைச் சாதித்தது. போர்நிறுத்த ஒப்பந்தமும் தமிழர்க்குச் செய்தது என்ன!

"புலிகள் இயக்கத்தை நசுக்க சர்வதேச வலைப் பின்னலைத் தனது அரசாங்கம் உருவாக்கி வந்தது" என்று ரணில் தம்பட்டம் அடித்திருந்தார்.



புறக்கணிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு சனாதிபதித் தேர்தல் 2005

சமாதான முயற்சியிலும் சதிஅரசியலை நடாத்தும் மனநிலையுடனேயே அவர் இருந்தார் என்பது அம்பலமாயிற்று.

இம்முறை சனாதிபதித் தேர்தலின்போதும் சமாதானம் பற்றி சாதித்தமைகளைக் கதைத்தார். எல்லா கட்சிகளையும் இணைத்து - எல்லா இன மக்களையும் இணைந்தது என்று சிறுபிள்ளைத்தனமாக சமாதானம் கதைத்தார். தமிழர்கள் அவரை நம்பவில்லை.

சமாதானத்தை வலியுறுத்தி - நேர்மையான அரசியல் நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக எடுத்திருப்பாரேயானால் தமிழரின் வாக்குகள் மூலம் அவரின் வெற்றிவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆனால், ரணில் அதைச் செய்ய விரும்பவில்லை. தோல்வி ஏற்பட்டாலும் பரவாயில்லை தமிழருக்கு எதுவும் வழங்கிவிடக்கூடாது என்ற இனவாத உணர்வுடனேயே ரணில் விக்கிரமசிங்க உள்ளார்.

மகிந்த ராஜபக்ச புதிய சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதத்தை, ஒற்றை ஆட்சிமுறையை அமுல்ப்படுத்த ஆணைகேட்ட ஒரு சிங்களத் தலைவரை சிங்களவர் சனாதிபதியாக்கி விட்டுள்ளனர். தமிழருக்கு எந்த ஒரு உரிமையும் வழங்கக்கூடாது என்ற கொள்கையில் விடாப்பிடியாக உள்ள ஜே.வி.பியும், ஹெல உறுமயவும், பிக்குகள் முன்னணியும் மகிந்த ராஜபக்சவிற்கு பக்கபலமாக உள்ளனர்.


அடுத்த ஆறு வருடகாலம் எப்படி நகரப்போகின்றது என்று தமிழர்களுக்கு நன்கு தெரியும். தமிழரின் ஒற்றுமையும் - தமிழரின் பலமும்தான் தமிழ்மக்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடியது.

இனிவரும் நாட்களில் சமாதானம் பற்றிய எதிர்பார்ப்பு தமிழர்களிடம் இருக்கப்போவதில்லை. தம்மீது திணிக்கப்பட்டிருக்கும் இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றி தமது சுதந்திர வாழ்வை உறுதிசெய்யும் வழிமுறைகளை நாடுவதற்கான திடசங்கற்பத்தைக் கொள்வதாகவே இருக்கும்.

- எல்லாளன் -

# தமிழீழத்திற்கான என்.எம்.பெரேராவின் தீர்க்கதரிசனமும் இனவாதத்திற்கான ராஜபக்ஸாவின் தீர்க்கதரிசனமும்

- சாரணன் -



**தமிழ்பேசும்** மக்களின் பிரச்சினைக்கு ''மகிந்த சிந்தனைதான்'' தீர்வு என்று சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் தீர்ப்பளித்துள்ளார்கள். இலங்கைத் தீவு ஓர் "ஒற்றை யாட்சி'' நாடுதான் என்று அடித்துக் கூறியவர்களைப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஆதரித்திருக்கின்றார்கள். சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து தமிழ் பேசும் மக்கள் நல்லதாக எதனையும் எதிர்பார்க்க முடியாதென்பதை இத்தேர்தல் தெளிவாகப் பறை சாற்றி நிற்கின்றது.

இருபெரும் பேரினவாத ஜனாதிபதி வேட்பாளர்களான திரு.மகிந்த ராஜபக்ஸவும் திரு. ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே இனவாதத்தை இருவேறு கோணத்தில் நின்று அணுகினர். முதலாவது நபர் எதிர்த்து அழிக்கும் கொள்கையைக் கொண்டவர். இரண்டாவது நபர் அணைத்து அழிக்கும் கொள்கையைக் கொண்டவர். இரண்டினதும் இறுதி இலக்கு ஒன்றுதான். இதில் சிங்கள மக்கள் வெளிப்படையாக அழிக்க ஆணை கோரியுள்ள முதலாவது சக்தியை ஆதரித்து ஆணையளித்துள்ளனர். இத்தகைய மனநிலையைக் கொண்ட சிங்களப் பேரினவாதிகளிட மிருந்து சமாதானபூர்வ வழியில் தமிழ்பேசும் மக்களுக்கு விமோசனம் கிட்டமுடியாது.

**பண்டாரநாயக்காவின் ''பஞ்ச பலரீவகய'' சிந்தனை இனவாதத்தின் இளம்பராயத்தைக் குறித்து நிற்கின்றது. ''மகிந்த சிந்தனை'' இனவாதத்தின் முதிர்நிலையைக் குறித்துநிற்கின்றது. இந்த இடத்தில் மகிந்த ராஜபக்ஸா தனது வெற்றியை 1956ஆம் ஆண்டு நிகழ்ந்த பண்டாரநாயக்காவின் வெற்றியுடன் ஒப்பிடுவதைக் கவனித்தல் நலம்.**

பண்டாரநாயக்காவின் "பஞ்ச பலரீவகய'' சிந்தனை இனவாதத்தின் இளம் பராயத் தைக் குறித்து நிற்கின்றது. ''மகிந்த சிந்தனை'' இனவாதத் தின் முதிர்நிலையைக் குறித்து நிற்கின்றது. இந்த இடத்தில் மகிந்த ராஜபக்ஸ தனது வெற்றியை 1956ஆம் ஆண்டு நிகழ்ந்த பண்டாரநாயக்கா வின் வெற்றியுடன் ஒப்பிடு வதைக் கவனித்தல் நலம். பண்டாரநாயக்கா வெற்றி பெற்றது உண்மைதான், ஆனால் அவர் தானே தனது வெற்றியின் கைதியாகிப்போன கதையையும் கவனிக்க வேண்டியது அவசியம். புத்தரகித்த தேரோ தலைமையிலான பிக்கு பெரமுன உட்பட அனைத்து இனவாதச் சக்தி களினாலும் தூக்கி நிறுத்தப் பட்ட பண்டாரநாயக்காவை அச்சக்திகளே தொண்டைக் குழியில் பிடித்தன. அவர்களாலேயே அவர் கொல்லவும் பட்டார். அவரைக் கொன்ற கொலைக்குற்றத்தின் பேரில் புத்தரகித்த தேரோ ஆயுட் காலச் சிறைத் தண்டனையையும், சோமராம தேரோ தூக்குத் தண்டனையையும் பெற்றனர். பண்டாரநாயக்காவின் வெற்றியுடன் தனது வெற்றியை ஒப்பிடும் ராஜபக்ஸவின் ஒப்பீட்டை நோக்கு கையில் ராஜபக்ஸவைத் தூக்கி நிறுத்தியுள்ள ஜே.வி.பியின ருக்கும் ராஜபக்ஸவிற்கும் மேற்படி பண்டாரநாயக்கா - புத்தரகித்த தேரோ கதை அச் சொட்டாகப் பொருந்துமோ என்று கேட்கத் தோன்றுகின்றது. இந்த வரலாற்று விதியின்படி பார்க்கையில் ராஜபக்ஸவின் எதிரி ராஜபக்ஸவே அவரின் எதிரி அவரும் அவரின் நண்பர்களுமே. பிற்போக்குத் தனங்களின் வளர்ச்சி என்பது தம் கழுத்தில் தாமே தூக்குக் கயிறுகளை மாட்டுவதாக அமையும். ஆதலால் இப்போது ராஜபக்ஸ தனது கொள்கையினதும் தனது நண்பர்களினதும், தனது வெற்றியினதும் கைதியாய்த் தானே உள்ளார். ராஜபக்ஸ தன்னைப் பண்டாரநாயக்காவுடன் ஒப்பிட்டதன் மூலம் தன்னைப் பற்றித் தானே ஒரு தீர்க்கதரிசம் கூறியுள்ளார் என்றுதான் எடுக்கத் தோன்று கின்றது அத்துடன் தன் னைத் தூக்கி நிறுத்தியுள்ள சகாக்களைப் பற்றியும் அவர் தீர்க்கதரிசனம் கூறியுள்ளார் என எடுக்கலாம்.

ராஜபக்ஸவின் தீர்க்க தரிசனம் இவ்வாறு அமைகையில் இது தொடர்பாக கலாநிதி என்.எம்.பெரேரா கூறிவைத்த இன்னொரு தீர்க்கதரிசனத் தையும் இங்கு நோக்குதல் அவசியம்.

**சிங்கள ஆட்சியாளர்களிடமும், சிங்கள மக்களிடமும் இருந்து தமிழ்பேசும் மக்கள் தமக்காக எத்தகைய பாதுகாப்பையும் எதிர்பார்க்க முடியாது. சிங்களமக்கள் பெரும்பான்மையாக ராஜபக்ஸாவிற்கு வாக்களித்து ஒற்றையாட்சி முறையை உறுதிப்படுத்தியுள்ளதன் மூலம் தமிழீழத்தைத் தவிர வேறு மாற்றுவழியில்லை என்பதை இது நிருபித்து நிற்கின்றது.**

பண்டாரநாயக்காவின் தனிச்சிங்களக் கொள்கையை எதிர்த்து கலாநிதி என்.எம். பெரேரா பின்வருமாறு கூறினார். ''எதிர்காலத்தில் தமிழ் மக்கள் முதலாவதாகப் பண்டார நாயக்காவிற் குத்தான் சிலை எழுப்பி மாலை போடுவார்கள். ஏனென்றால் தமிழர் பிரிந்து சென்று தனிநாடமைக்க அத்திவாரம் இட்டவர் இவர் என்பதால்'' என்.எம்.பேரேரா வின் தீர்க்கதரிசனம் உண்மையாகப் போகின்றது என்பதை எழுச்சி பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் நிரூபித்து நிற்கின்றது. இந்தவகையில் என்.எம். பெரேராவின் வார்த்தையிற் சொல்வதானால் இரண்டாவது சிலையைத் தமிழ் பேசும் மக்கள் ராஜபக்ஸவிற்கு எழுப்புவார்கள் என்பது திண்ணம். ராஜபக்ஸவின் மேற்படி ஒப்பீடு பற்றிய திரு. க.வே.பாலகு மாரனின் விளக்கமும் இவ்வகையாய் அமைந்து செல்வது குறிப்பிடத் தக்கது.

பண்டாரநாயக்கா பற்றிய கலாநிதி என்.எம்.பெரேராவின் தீர்க்கதரிசனம் செயலுருப்பெறும் என்பது அரசியல், வரலாற்று, இராஜதந்திர மாணவர்களுக்கு ஏற்கனவே தெரிந்ததோர் உண்மைதான். அதேவேளை புதியதோர் தீர்க்க தரிசனத்துடன் வந்துள்ள ராஜபக்ஸவின் வருகையானது முதலாவது தீர்க்கதரிசனத்தை விரைவுபடுத்த வல்லதாயும் அமைந்துள்ளது.

என்.எம்.பெரேராவின் தீர்க்கதரிசனம் நிறை வேறும் என்பது தெரிந்த விடயம். ஆனால் அது எப்போது என்பதே கேள்வியாய் இருந் தது. இப்போது ராஜபக்ஸவின் தீர்க்கதரிசனத்தை நோக்கு கையில் முதலாவது தீர்க்க தரிசனம் நிறைவேறப்போகும் காலம் எது என்பது தெரிந்து விட்டது. அதாவது அது ராஜபக்ஸவின் காலமென்பதே.

அதாவது தமிழீழ மண்ணில் பண்டாரநாயக்காவின் சிலைக்கு ஒரு மூதாட்டி மாலை போடட்டும் ராஜபக்ஸவின் சிலைக்கு மூதாட்டியின் பூட்டக் குழந்தை மாலை போடட்டும். வேண்டிய எந்த நேரத்திலும் சிங்கள மக்களில் பெரும்பாலானோரைப் பச்சை இனவாதத்தின் பக்கம் இழுத்துச் செல்லலாம் என்பதை ராஜபக்ஸவின் வெற்றி எடுத்துக் காட்டுகின்றது. இந்நிலையில் சிங்கள ஆட்சியாளர்களிடமும், சிங்கள மக்களிடமும் இருந்து தமிழ்பேசும் மக்கள் தமக்காக எத்தகைய பாதுகாப்பையும் எதிர்பார்க்க முடியாது. சிங்கள மக்கள் பெரும் பான்மையாக ராஜபக்ஸவிற்கு வாக்களித்து ஒற்றையாட்சி முறையை உறுதிப் படுத்தியுள்ளதன் மூலம் தமிழீழத்தைத் தவிர வேறு மாற்றுவழியில்லை என்பதை இது நிரூபித்து நிற்கின்றது.

ஒரு தர்க்கத்திற்காக தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று திரு. ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றதாக வைத்துக் கொள்வோம். அப்படியாயின் அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் பெரும்பான்மையான சிங்கள மக்களின் எதிர்ப்பின் மத்தி யிற்தான் அவர் பதவிக்கு வந்திருக்க முடியும். அதன்படி சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் தெளிவான ஒற்றையாட்சி முறைக்குத்தான் ஆதரவானவர்கள் என்ற களநிலை உண்மையைக் கருத்திலெடுக்கத் தவற முடியாது, அந்த வகையில் ரணிலால் அவர்கூறும் ஏமாற்றுகரமான அரைகுறைத் தீர்வைக்கூடக் கொண்டுவந்திருக்க முடியாது.

சிங்களத் தலைமைகள் எதுவாயினும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை களைத் தீர்க்கவேண்டும் என்பதில் எத்தகைய சிரத்தையும் அற்றவர்கள். அவர்கள் இப்பிரச்சினைகளைத் தமது பதவி நலன்களுக்கான பெரு விருந்தாகவே பார்க்கிறார்கள். இவ்விவகாரத் தில் ராஜபக்ஸ ஒரு நேர்மையான எதிரியாக உள்ளார். ஆனால் தமிழ்மக்களின் உரிமைகளில் தனக்கு அக்கறை உள்ளதாகக் கூறிக்கொண்ட ரணில் திரை மறைவில் போராட்டத்தை நசுக்கவல்ல செயல்களில் ஈடு பட்டார் என்பதை அவரது நெருங்கிய சகாக்களான திருவாளர்கள் மிலிந்த மொறகொடவும், நவீன் திஸநாயக்காவும் வெளிப்படையாகவே கூறி விட்டனர். குறிப்பாக வெளிநாடுகளின் இராணுவங்களைக் கொண்டுவந்து தமிழீழப் போராட்டத்தை நசுக்கு வதற்கான ஏற்பாடுகளை ரணில் பூர்த்தியாக்கி விட்டார் என முதலாவது நபரும், புலிகளை வெளிநாட்டு வியூகத்தால் ரணில் சுற்றிவளைத்துள்ளார் என இரண்டாவது நபரும் மிக வெளிப்படையாகவே கூறியுள்ளனர்.

மேற்படி பின்னணியையும் இரகசியத் திட்டங்களையும் நோக்குகையில் சிங்களத் தலைவர்களினது இறுதி இலட்சியம் என்பது வெளிப்படையாக உள்ளது.

நடந்துமுடிந்த தேர்தலானது சிங்கள வெகுஜனங் களின் மனோநிலையைப் பற்றியும், எத்தரப்பினராயினும் சிங்களத் தலைவர்களினது உண்மையான நிலைப்பாடு என்ன என்பதைப் பற்றியும் தெளிவான செய்தியைத் தெரிவித்துள்ளது.


இப் பின்னணியில் ராஜபக்ஸவின் தீர்க்கதரி சனத்திற்கும் என்.எம்.பெரேராவின் தீர்க்க தரிசனத்திற்கும் தமிழ்பேசும் மக்கள் நன்றி கூறுவர் என்பது திண்ணம்.

○



www.eelamview.com





# மாவீரர் விதைப்பும் இறுதிச் சடங்கும்

*"உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன."*

*- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -*

**கலாநிதி க.சோமாஸ்கந்தன்**

நீத்தாரைச் சிறப்பிக்கும் இயல்பு மனித இனத்தின் பொதுப்பண்பு. மனிதகுலம் தோன்றிய காலத்திலேயே இறுதிச் சடங்குகளும், கிரியைகளும் ஓரளவு தொடங்கிவிட்டன. காலப்போக்கில் அவை விரிவடைந்து மனித நாகரிகத்தின் முக்கிய பகுதியாக இன்று இடம்பெறுகின்றன. நீத்தாரின் உற்றார், உறவுகள் நிறைவேற்றும் கட்டாயச் செய்கடனாகவும் சரம கிரியைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. வாழ்விடம், மதநம்பிக்கை, இனப் பாரம்பரியம், வாழ்க்கைநிலை போன்றவை இவ்விதிமுறைகளின் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. அவற்றில் காலத்திற்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் உயிர்பிரிந்த மனித உடலுக்கு காட்டப்படும் அஞ்சலி வணக்கத்தில் மாத்திரம் மாற்றம் ஏற்படவில்லை.

நீத்தார் உடலுக்கு மனிதன் காட்டும் உளமார்ந்த மரியாதையும் சாவிற்குப்பின் மறுவாழ்வும் பார்த்தபடி இருக்கும் நிலையில் புதைத்தனர். சூரியோதயத்தோடு மீள்பிறப்பு ஆரம்பிக்கும் என்ற அர்த்தத்தில் இவ்வாறு செய்யப்பட்டது.

புத்த மதத்தினர் தமது சடலங்களை ஒரு காலத்தில் புதைத்திருக்கிறார்கள். அப்போது தலையை புத்தர் பிறந்த வடக்குப் பக்கமாக வைத்துப் புதைத்தார்கள். ஆபிரிக்கவாழ் பழங்குடி மக்கள் பலர் இறந்த உடலை கருப்பையில் கிடக்கும் சிசுவைப்போல் முழந்தாளை மார்புவரை இழுத்து மடக்கிய பின் புதைக்கின்றனர். பிறப்பும் இறப்பும் தொடர் நிகழ்ச்சிகள் என்ற அரிய தத்துவம் இதனால் உணர்த்தப்படுகின்றது. இன்னும் சில பழங்குடி மக்கள் உடல்களை பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உணவாக்கும் நோக்கில் வெளியில் போட்டுவைக்கின்றனர். தீயை வணங்கும் பார்சி மதத்தினர் அமைதிக்கோபுரம் என்று (TOWER OF SILENCE) அவர்கள் அழைக்கும் உயரமாக கட்டிடத்தில் அதேநோக்கில் தமது சடலங்களை விட்டுச் செல்கின்றனர்.

மனிதவாழ்வு நிலையானதல்ல, ஆனால் மனித உடல்மீது எழுப்பப்படும் நினைவுக் கட்டிடங்களும், உடலை அடக்குவதற்காக ஒதுக்கப்பட்ட புனித நிலங்களும், இவைபற்றி எழுந்த பன்மொழி இலக்கியங்களும் காலத்தை வென்று நிற்கின்றன. புராதனகால ஏழு அதிசயங்களில் ஆறு அழிந்துவிட்டன. எஞ்சியது எகிப்தின் கூபூ (KHUFU) மன்னனின் கீசா(GIZA) பிரமிட் கல்லறை மாத்திரமே. பதின்மூன்று ஏக்கர் அடிப்பாகத்தைக் கொண்ட எகிப்தின் கீசா பிரமிட் உலகின் மிகப்பெரிய கற்கட்டிடமாகக் கணிப்பிடப்படுகிறது. இதன் காலம் 5,000 வருடத்திற்கு முந்தியது. எகிப்திற்குப் புகழ் தொடர்ந்தன. 10ஆம் நூற்றாண்டில் அவற்றின் இருப்பை மக்கள் மறந்துவிட்டார்கள். 16ஆம் நூற்றாண்டில் அவை தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ரோமாபுரியிலும் பிற ஐரோப்பிய நகரங்களிலும் காணப்படும் கற்றகோம்ஸ் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கணிப்பிடப்படுகின்றன.

உலகம் பூராகவும் இடு நிலங்களும் சுடுகாடுகளும் தேசிய உடமையாகவும் வணக்கத்தலங்களாகவும் மதிப்பிடப்படுகின்றன. இறந்த உடல்களுக்குமேல் எழுப்பப்பட்ட கோயில்கள் இந்தியா, தமிழீழம் உட்பட உலகின் பல பாகங்களில் உள்ளன. மகாத்மா காந்தி எரிக்கப்பட்ட இடத்தில் வருடாவருடம் ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. பிறநாட்டு முக்கியஸ்தர்கள் அங்குசென்று வணக்கம் செய்வதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளனர்.

தொடர்ச்சியான பிறப்பும் இறப்பும் உண்டு என்ற தளராத நம்பிக்கையும் இறுதிச் சடங்குகளும் சரம கிரியைகளுக்கும் மூலகாரணமாக அமைகின்றன. புதைத்தல், எரித்தல் என்ற இருவிதமாக மனித உடல் சிறப்பிக்கப்படுகின்றது. எது முதற் தொடங்கியது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இரண்டுமே சமகாலத்தில் தோன்றியிருக்கலாம். புதைத்தல் முறைதான் மிகக்கூடுதலாக உலக மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. புதைத்தல், எரித்தலைவிட வேறுமுறைகளும் கைக்கொள்ளப்பட்டாலும் அவை விதிவிலக்காகவே உள்ளன.

உலகின் முக்கிய மதங்களில் சாவீட்டிலும் அடக்கம் செய்யும் இடத்திலும் இறந்தவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கான விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடத்தப்படுகின்றன. இவை மனிதர்களுக்கு ஆன்மா உண்டு என்ற அடிப்படையில் செய்யப்படுகின்றன. மனிதன் புதைக்கப்படுவதற்கும் இக்கோட்பாடு காரணமாக அமைகின்றது. உலகின் மிகப் பழைமை வாய்ந்த நாகரிகத்தைக் கொண்டிருக்கும் சீனர்கள் புதைக்கப்பட்ட உடலுக்குமேல் எழுப்பப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கும் அதன் ஆன்மாவுக்கும் இடையில் நேரடித்தொடர்பு இருப்பதாக நம்புகின்றனர். இக்கட்டிடத்திற்குச் சேதம் ஏற்பட்டால் அந்த ஆன்மாவுக்குச் சஞ்சலம் ஏற்படும் என்று அவர்கள் நம்புகின்றனர். சீனர்கள் மண்ணில் தமது சடலங்களைப் புதைத்து அதன்மேல் மிகவும் ஆடம்பரமான நினைவுக் கட்டிடங்களை எழுப்புகின்றார்கள். செஞ்சீனாவின் தோற்றத்தின்பின் ஆடம்பரத்தைக் குறைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று எரிப்பதற்கும் புதைப்பதற்கும் பிரத்தியேகமான நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் தமது புதைநிலங்களை தேவாலயங்களுக்கு அருகாமையில் வைத்திருக்கின்றனர். இட நெருக்கடி காரணமாக தூர இடங்களிலும் புதைக்கின்றனர். யூதர்களும், இஸ்லாமியர்களும் புதைக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இறந்த அதேநாளில் அல்லது இயன்றளவு வேகமாக முஸ்லிம்கள் தமது சடலங்களை அடக்கம் செய்கின்றனர். முஸ்லீம்களின் சடலங்கள் வலதுபக்க உடல் சரித்துக் கீழ்ப் புறமாகவும் முகம் மெக்காவை நொக்கிய திசையிலும் சரித்துக் கிடத்தி அடக்கம் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் முதுகுப்புறம் நிலத்தில் படும்படி அடக்கம் செய்கிறார்கள். கிறிஸ்தவமதம் ஆரம்பித்த காலத்தில் சடலத்தின் கால்கள் கீழ்த்திசையைப் சேர்க்கும் பிரமிட்டுக்கள் யாவும் கல்லறைகளே.

ஜோர்தான் நாட்டின் பெற்றா (PETRA) நகர்ப்புறத்திலுள்ள பாறை மலை உச்சியில் குடையப்பட்ட கற்குழிகளில் புராதன கால உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதை 1812இல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கிறிஸ்தவமதம் தொடங்கிய காலத்தில் அதற்கு அரச அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் மிகவும் மறைவாக கிறிஸ்தவர்கள் தமது சடலங்களைப் புதைத்தனர். நிலத்தின் கீழ் மூன்றடி அகலமான சுரங்கப் பாதைகளை வெட்டி, பாதைச் சுவர்களில் குடைந்த பகுதிகளில் அவர்கள் சவப்பெட்டிகளை மறைத்துவைத்தனர். சுரங்கப் பாதைகள் கிளைவிட்டு நெடுந்தூரம் சென்றன. படிக்கட்டுக்களை அமைத்தவாறு மென்மேலும் ஆழமான சுரங்கப் பாதைகளை அவர்கள் வெட்டினார்கள். இந்த அதிசய புதைப்புச் சுரங்கங்கள் 'கற்றகோம்ஸ்' (CATACOMBS) என்று அழைக்கப்படுகின்றன. கி.பி 313இல் கிறிஸ்தவத்திற்கு அரச அங்கீகாரம் கிடைத்தாலும் கி.பி 410 வரை சுரங்கப் புதைப்புக்கள்

இங்கிலாந்தின் வெஸ்ற்மினிஸ்ரர் அபே (WEST - MINISTER ABBEY) என்ற பிரமாண்டமான கிறிஸ்தவ தேவாலயத்தின் உட்புறத்தே 3000 வரையிலான கல்லறைகள் இடம்பெறுகின்றன. அரச பரம்பரையினரின் முடிசூட்டுவிழா தொடக்கம் நல்லடக்கம் வரை இத்தேவாலயத்தில் நடைபெறுகின்றன. இங்கிலாந்தின் புகழ்பெற்ற அரசினர், அரசுத் தலைவர்கள், விஞ்ஞானிகள், புலவர்கள், படைத் தலைவர்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

போர்வீரர்களுக்கென்று பிரத்தியேகமான இடு நிலங்களை ஒதுக்கி மிகவும் உன்னதமான நிலையில் பராமரிக்கும் வழமை 1860இல் நடந்த உள்நாட்டுப் போரின்பின் அமெரிக்காவில் ஆரம்பமாகியது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் அமெரிக்கப் போர்வீரர்களின் இடுநிலங்கள் பராமரிப்பதற்குப் பொறுப்பாக ஒரு திணைக்களம் அமெரிக்காவில் இயங்குகிறது. அமெரிக்கப் போர்வீரர்களின் சடலங்கள் அடங்கிய பேழைக்கு செய்யும் மரியாதைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பேழையும் தேசியக்கொடியினால் போர்த்தப்பட்டு, பேழைக்கு நான்கு போர்வீரர்கள் என்ற விகிதத்தில் மரியாதைக் காவல் செய்யப்படுகின்றது. இடுகுழியில் இடமுன்பு மிகவும் உணர்வு பூர்வமாகத் தேசியக்கொடி அகற்றப்பட்டு இறந்தவரின் உரித்தாளருக்கு வழங்கப்படுகிறது.

உடலைத் தகனம் செய்யும் மின்சார அடுப்பு கண்டுபிடிக்கப்பட்டபின் புதைத்தல் பெருமளவில் குறைந்துள்ளது. உலகின் முதலாவது

→

---

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர், உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாருமென்றெண்ணி
உம்வாசலில் வந்துமே வணங்குகின்றோம்.
உங்கள் கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்.
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் - அதை
நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்.
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிர்வோம், உங்கள்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.





www.eelamview.com

*"உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன."*

*- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -*





# மாவீரர் விதைப்பும் இறுதிச் சடங்கும்

**கலாநிதி க.சோமாஸ்கந்தன்**

நீத்தாரைச் சிறப்பிக்கும் இயல்பு மனித இனத்தின் பொதுப்பண்பு. மனிதகுலம் தோன்றிய காலத்திலேயே இறுதிச் சடங்குகளும், கிரியைகளும் ஓரளவு தொடங்கிவிட்டன. காலப்போக்கில் அவை விரிவடைந்து மனித நாகரிகத்தின் முக்கிய பகுதியாக இன்று இடம்பெறுகின்றன. நீத்தாரின் உற்றார், உறவுகள் நிறைவேற்றும் கட்டாயச் செய்கடனாகவும் சரம கிரியைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. வாழ்விடம், மதநம்பிக்கை, இனப் பாரம்பரியம், வாழ்க்கைநிலை போன்றவை இவ்விதிமுறைகளின் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. அவற்றில் காலத்திற்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் உயிர்பிரிந்த மனித உடலுக்கு காட்டப்படும் அஞ்சலி வணக்கத்தில் மாத்திரம் மாற்றம் ஏற்படவில்லை.

நீத்தார் உடலுக்கு மனிதன் காட்டும் உளமார்ந்த மரியாதையும் சாவிற்குப்பின் மறுவாழ்வும் தொடர்ச்சியான பிறப்பும் இறப்பும் உண்டு என்ற தளராத நம்பிக்கையும் இறுதிச் சடங்குகளும் சரம கிரியைகளுக்கும் மூலகாரணமாக அமைகின்றன. புதைத்தல், எரித்தல் என்ற இருவிதமாக மனித உடல் சிறப்பிக்கப்படுகின்றது. எது முதற் தொடங்கியது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இரண்டுமே சமகாலத்தில் தோன்றியிருக்கலாம். புதைத்தல் முறைதான் மிகக்கூடுதலாக உலக மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. புதைத்தல், எரித்தலைவிட வேறுமுறைகளும் கைக்கொள்ளப்பட்டாலும் அவை விதிவிலக்காகவே உள்ளன.

உலகின் முக்கிய மதங்களில் சாவீட்டிலும் அடக்கம் செய்யும் இடத்திலும் இறந்தவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கான விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடத்தப்படுகின்றன. இவை மனிதர்களுக்கு ஆன்மா உண்டு என்ற அடிப்படையில் செய்யப்படுகின்றன. மனிதன் புதைக்கப்படுவதற்கும் இக்கோட்பாடு காரணமாக அமைகின்றது. உலகின் மிகப் பழைமை வாய்ந்த நாகரிகத்தைக் கொண்டிருக்கும் சீனர்கள் புதைக்கப்பட்ட உடலுக்குமேல் எழுப்பப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கும் அதன் ஆன்மாவுக்கும் இடையில் நேரடித்தொடர்பு இருப்பதாக நம்புகின்றனர். இக்கட்டிடத்திற்குச் சேதம் ஏற்பட்டால் அந்த ஆன்மாவுக்குச் சஞ்சலம் ஏற்படும் என்று அவர்கள் நம்புகின்றனர். சீனர்கள் மண்ணில் தமது சடலங்களைப் புதைத்து அதன்மேல் மிகவும் ஆடம்பரமான நினைவுக் கட்டிடங்களை எழுப்புகின்றார்கள். செஞ்சீனாவின் தோற்றத்தின்பின் ஆடம்பரத்தைக் குறைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று எரிப்பதற்கும் புதைப்பதற்கும் பிரத்தியேகமான நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் தமது புதைநிலங்களை தேவாலயங்களுக்கு அருகாமையில் வைத்திருக்கின்றனர். இட நெருக்கடி காரணமாக தூர இடங்களிலும் புதைக்கின்றனர். யூதர்களும், இஸ்லாமியர்களும் புதைக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இறந்த அதேநாளில் அல்லது இயன்றளவு வேகமாக முஸ்லிம்கள் தமது சடலங்களை அடக்கம் செய்கின்றனர். முஸ்லீம்களின் சடலங்கள் வலதுபக்க உடல் சரித்துக் கீழ்ப் புறமாகவும் முகம் மெக்காவை நொக்கிய திசையிலும் சரித்துக் கிடத்தி அடக்கம் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் முதுகுப்புறம் நிலத்தில் படும்படி அடக்கம் செய்கிறார்கள். கிறிஸ்தவமதம் ஆரம்பித்த காலத்தில் சடலத்தின் கால்கள் கீழ்த்திசையைப் பார்த்தபடி இருக்கும் நிலையில் புதைத்தனர். சூரியோதயத்தோடு மீள்பிறப்பு ஆரம்பிக்கும் என்ற அர்த்தத்தில் இவ்வாறு செய்யப்பட்டது.

புத்த மதத்தினர் தமது சடலங்களை ஒரு காலத்தில் புதைத்திருக்கிறார்கள். அப்போது தலையை புத்தர் பிறந்த வடக்குப் பக்கமாக வைத்துப் புதைத்தார்கள். ஆபிரிக்கவாழ் பழங்குடி மக்கள் பலர் இறந்த உடலை கருப்பையில் கிடக்கும் சிசுவைப்போல் முழந்தாளை மார்புவரை இழுத்து மடக்கிய பின் புதைக்கின்றனர். பிறப்பும் இறப்பும் தொடர் நிகழ்ச்சிகள் என்ற அரிய தத்துவம் இதனால் உணர்த்தப்படுகின்றது. இன்னும் சில பழங்குடி மக்கள் உடல்களை பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உணவாக்கும் நோக்கில் வெளியில் போட்டுவைக்கின்றனர். தீயை வணங்கும் பார்சி மதத்தினர் அமைதிக்கோபுரம் என்று (TOWER OF SILENCE) அவர்கள் அழைக்கும் உயரமாக கட்டிடத்தில் அதேநோக்கில் தமது சடலங்களை விட்டுச் செல்கின்றனர்.

மனிதவாழ்வு நிலையானதல்ல, ஆனால் மனித உடல்மீது எழுப்பப்படும் நினைவுக் கட்டிடங்களும், உடலை அடக்குவதற்காக ஒதுக்கப்பட்ட புனித நிலங்களும், இவைபற்றி எழுந்த பன்மொழி இலக்கியங்களும் காலத்தை வென்று நிற்கின்றன. புராதனகால ஏழு அதிசயங்களில் ஆறு அழிந்துவிட்டன. எஞ்சியது எகிப்தின் கூபூ (KHUFU) மன்னனின் கீசா(GIZA) பிரமிட் கல்லறை மாத்திரமே. பதின்மூன்று ஏக்கர் அடிப்பாகத்தைக் கொண்ட எகிப்தின் கீசா பிரமிட் உலகின் மிகப்பெரிய கற்கட்டிடமாகக் கணிப்பிடப்படுகிறது. இதன் காலம் 5,000 வருடத்திற்கு முந்தியது. எகிப்திற்குப் புகழ் சேர்க்கும் பிரமிட்டுக்கள் யாவும் கல்லறைகளே.

ஜோர்தான் நாட்டின் பெற்றா (PETRA) நகர்ப்புறத்திலுள்ள பாறை மலை உச்சியில் குடையப்பட்ட கற்குழிகளில் புராதன கால உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதை 1812இல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கிறிஸ்தவமதம் தொடங்கிய காலத்தில் அதற்கு அரச அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் மிகவும் மறைவாக கிறிஸ்தவர்கள் தமது சடலங்களைப் புதைத்தனர். நிலத்தின் கீழ் மூன்றடி அகலமான சுரங்கப் பாதைகளை வெட்டி, பாதைச் சுவர்களில் குடைந்த பகுதிகளில் அவர்கள் சவப்பெட்டிகளை மறைத்துவைத்தனர். சுரங்கப் பாதைகள் கிளைவிட்டு நெடுந்தூரம் சென்றன. படிக்கட்டுக்களை அமைத்தவாறு மென்மேலும் ஆழமான சுரங்கப் பாதைகளை அவர்கள் வெட்டினார்கள். இந்த அதிசய புதைப்புச் சுரங்கங்கள் 'கற்றகோம்ஸ்' (CATACOMBS) என்று அழைக்கப்படுகின்றன. கி.பி 313இல் கிறிஸ்தவத்திற்கு அரச அங்கீகாரம் கிடைத்தாலும் கி.பி 410 வரை சுரங்கப் புதைப்புக்கள் தொடர்ந்தன. 10ஆம் நூற்றாண்டில் அவற்றின் இருப்பை மக்கள் மறந்துவிட்டார்கள். 16ஆம் நூற்றாண்டில் அவை தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ரோமாபுரியிலும் பிற ஐரோப்பிய நகரங்களிலும் காணப்படும் கற்றகோம்ஸ் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கணிப்பிடப்படுகின்றன.

உலகம் பூராகவும் இடு நிலங்களும் சுடுகாடுகளும் தேசிய உடமையாகவும் வணக்கத்தலங்களாகவும் மதிப்பிடப்படுகின்றன. இறந்த உடல்களுக்குமேல் எழுப்பப்பட்ட கோயில்கள் இந்தியா, தமிழீழம் உட்பட உலகின் பல பாகங்களில் உள்ளன. மகாத்மா காந்தி எரிக்கப்பட்ட இடத்தில் வருடாவருடம் ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. பிறநாட்டு முக்கியஸ்தர்கள் அங்குசென்று வணக்கம் செய்வதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளனர். இங்கிலாந்தின் வெஸ்ற்மினிஸ்ரர் அபே (WEST - MINISTER ABBEY) என்ற பிரமாண்டமான கிறிஸ்தவ தேவாலயத்தின் உட்புறத்தே 3000 வரையிலான கல்லறைகள் இடம்பெறுகின்றன. அரச பரம்பரையினரின் முடிசூட்டுவிழா தொடக்கம் நல்லடக்கம் வரை இத்தேவாலயத்தில் நடைபெறுகின்றன. இங்கிலாந்தின் புகழ்பெற்ற அரசினர், அரசுத் தலைவர்கள், விஞ்ஞானிகள், புலவர்கள், படைத் தலைவர்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

போர்வீரர்களுக்கென்று பிரத்தியேகமான இடு நிலங்களை ஒதுக்கி மிகவும் உன்னதமான நிலையில் பராமரிக்கும் வழமை 1860இல் நடந்த உள்நாட்டுப் போரின்பின் அமெரிக்காவில் ஆரம்பமாகியது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் அமெரிக்கப் போர்வீரர்களின் இடுநிலங்கள் பராமரிப்பதற்குப் பொறுப்பாக ஒரு திணைக்களம் அமெரிக்காவில் இயங்குகிறது. அமெரிக்கப் போர்வீரர்களின் சடலங்கள் அடங்கிய பேழைக்கு செய்யும் மரியாதைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பேழையும் தேசியக்கொடியினால் போர்த்தப்பட்டு, பேழைக்கு நான்கு போர்வீரர்கள் என்ற விகிதத்தில் மரியாதைக் காவல் செய்யப்படுகின்றது. இடுகுழியில் இடமுன்பு மிகவும் உணர்வுபூர்வமாகத் தேசியக்கொடி அகற்றப்பட்டு இறந்தவரின் உரித்தாளருக்கு வழங்கப்படுகிறது.

உடலைத் தகனம் செய்யும் மின்சார அடுப்பு கண்டுபிடிக்கப்பட்டபின் புதைத்தல் பெருமளவில் குறைந்துள்ளது. உலகின் முதலாவது

→

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர், உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாருமென்றெண்ணி
உம்வாசலில் வந்துமே வணங்குகின்றோம்.
உங்கள் கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்.
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் - அதை
நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்.
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிர்வோம், உங்கள்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.





www.eelamview.com

இந்த அடுப்பு அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் 1876ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சிறிலங்காத் தலைநகர் கொழும்பிலும் இந்த அடுப்பு இன்று இயங்குகின்றது. மேற்குநாடுகள் யாவற்றிலும் கிறெமெற்றோறியம் (CREMATORIUM) என்ற இந்தவசதி காணப்படுகின்றது. புதைப்பதைத் தேசியப் பாரம்பரியமாகக் கொண்ட சீனாவில் வசதி குறைந்த மக்கள் எரிக்கும் அடுப்புக்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த அடுப்புக்களில் 3000 பரன்கைற் பாகை வெப்பம் ஏற்றப்படுகிறது. ஒரு மணிநேரத்தில் பெட்டியும் உடலும் எரிந்து சாம்பராகின்றன. மேற்குலகில் இந்தவகை எரிப்பு பொது வழமையாகிவிட்டாலும் கத்தோலிக்க மதபீடம் தனது மதத்தினருக்கு இதற்கான அனுமதியை வழங்க மறுத்துள்ளது.

தமிழினத்தின் மூத்த குடிகள் இறந்தோரை ஈமத்தாழியில் இட்டுப் புதைத்தனர். ஈமத்தாழிகள் முதுமக்கட்டாழி என்றும் அழைக்கப்படுவதுண்டு. பெரும்பாலான ஈமத்தாழிகள் நெல் பயிரிடப்பட்ட நதியோரங்களில் வாழ்ந்த விவசாயச் சமூகத்தினரின் எச்சமாக இருக்கலாம் என்பது ஆய்வாளர் முடிவு. ஈமத்தாழி வசதி அற்றவர்கள் மண்ணில் புதைத்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. காவேரி, பொன்னையாறு, பாலாறு போன்ற நதியோரங்களில் பெருமளவு ஈமத்தாழிகள் கிடைத்துள்ளன. அடுத்ததாகத் தென்தமிழ் நாட்டின் தாமரபர்ணி, சித்தாறு, வைப்பாறு போன்றவை ஓரமாகவும்



ஈமத்தாழிகள் மீட்கப்பட்டுள்ளன. வைப்பாறின் ஓரமாகவுள்ள சிவகிரி, பனையூர், வாசுதேவ நல்லூர் என்ற கிராமங்களிலும், சித்தாறின் அண்மையிலுள்ள இலஞ்சி, குற்றாலம் பகுதிகளிலும், தாமரபரணியின் சிவசைலம், அகஸ்தியமரை வெளிகளிலும், இதே நதி வந்துசேரும் பாம்பன் கரையோரத்திலும் ஈமத்தாழிகள் வெளிவந்துள்ளன. உலகப் பிரசித்திபெற்ற ஆதிச்ச நல்லூர் ஈமத்தாழிக் கிராமம் பாம்பன் கரையோரத்தில் காணப்படுகிறது.

பாம்பன் கரையோரத்திற்கு நேராக இருக்கும் இலங்கையின் புத்தளம் தொடங்கி மன்னார் வரையிலான வடமேற்கில் பெருமளவு ஈமத்தாழிகள் காணப்படுகின்றன. பாம்பனில் வாழ்ந்தோர் இங்கும் வாழ்ந்தார்கள் என்பதை இது காட்டுகிறது. புத்தளத்தின் பொம்பரிப்பில் 8000வரையிலான ஈமத்தாழிகள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. வடமராட்சி வல்லிபுரப் பகுதியிலும் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வில்பத்து சரணாலயத்திற்கு உட்பட்ட தேக்கம், அளுத்பொம்பை, கரம்பன்குளம் பகுதியிலும் பெருமளவு ஈமத்தாழிகள் புதையுண்டு கிடக்கின்றன. ஆதிச்ச நல்லூருக்கும் பொம்பரிப்புக்கும் இடையில் மிகநெருக்கமான பண்பாட்டுத் தொடர்பு இருப்பதை ஆய்வுகள் உறுதிசெய்கின்றன.

யாழ்ப்பாணத்து ஆனைக்கோட்டையில் ஈமத்தாழிகளும் மண்ணில் புதைக்கப்பட்ட உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. வேலணை சாட்டியில் ஈமத்தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் இரகுபதி குழுவினர் ஆனைக்கோட்டையில் செய்த ஆய்வின்போது 2500 வருட பழைமை வாய்ந்த இரு எலும்புக்கூடுகள் மத ஆசாரங்களுடன் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு எலும்புக்கூட்டின் கைவிரலொன்றில் பிரம்மி எழுத்தில் பொறிக்கப்பட்ட இலச்சினை மோதிரம் வெளிக்கொணரப்பட்டது. யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத்துறையின் பாதுகாப்பில் இருந்த இந்த மோதிரம் இப்போது காணாமற்போய்விட்டது. மோதிரத்திலுள்ள தமிழ் பிரம்மி எழுத்துக்கள் அதுவொரு அரசனுக்குரியது என்ற செய்தியைக் கூறுகின்றன. மோதிரத்தைப்போல் மேற்கூறிய எலும்புக்கூடுகளும் காணாமற்போய்விட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது மாவீரர்களின் வித்துடல்களைப் புதைப்பதற்கு எடுத்த தீர்மானம் எமதினத்தின் முதுபெரும் வரலாற்றை அடியொற்றியது. புதைத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தாது 'விதைத்தல்' என்ற சொல்லையும் உடலுக்கு 'வித்துடல்' என்ற பதத்தையும் நாம் பயன்படுத்துகின்றோம். மாவீரர்கள் மீண்டும் எழுவார்கள் அவர்கள் சடப்பொருள் அல்லவென்ற அர்த்தத்தில் விதைத்தல், வித்துடல் என்பவை பயன்படுகின்றன. 11, 12 நூற்றாண்டுகளில் தோன்றிய தமிழ் வீரத்தையும் தேசியத்தையும் உணர்த்தும் பரணி நூல்களில் 'களம்' என்ற நெற்களத்தையும் போர்க்களத்தையும் குறிக்கும் சொல் பயன்பாட்டில் உள்ளது. ஜெயங்கொண்டார் பயிர்த் தொழிலையும் போர்த்தொழிலையும் கலிங்கத்துப் பரணியில் இணைத்துப் பாடியுள்ளார்.

விடுதலைப்போரின் ஆரம்பகட்டத்தில் களப்பலியான புலிவீரர்களின் உடல்கள் புதைத்தல் எரித்தல் என்ற இரு வகையாகவும் சிறப்பிக்கப்பட்டன. பெற்றாரின் மதநம்பிக்கை மற்றும் தனி விருப்பத்திற்கு அமைவாகவும் போராளிகளின் வித்துடல்கள் எரிக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் வந்தன. பொதுமயானங்களில் அப்போது போராளிகளின் வித்துடல்கள் தகனம் செய்யப்பட்டன. அல்லது நல்லடக்கம் செய்யப்பட்டன. போராட்ட காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வித்துடல்களைப் புதைக்கவேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் போரிட்ட காலத்தில் தேசியத் தலைவரும் அவருடைய புலிப்படையினரும் மணலாறுக் காடுகளில் நிலையெடுத்திருந்தனர். களப்பலியான வீரர்களைத் தகனம் செய்தால் இந்திய இராணுவத்தினர் புகை எழும் திசையையும் புலிகளின் மறைவிடங்களையும் கண்டறிந்து விடுவார்கள் என்ற காரணத்திற்காக ஆங்காங்கே காடுகள்தோறும் வித்துடல்கள் புதைக்கப்பட்டன. இப்போது மணலாற்றில் புதைக்கப்பட்ட புலிவீரர்களின் புனித எச்சங்கள் ஒரே இடத்தில், அதாவது மணலாறு துயிலும் இல்லத்தில் உணர்வு பூர்வமாக மீண்டும் விதைக்கப்பட்டுள்ளன. இத் துயிலும் இல்லத்திற்கு ஒரு தனிப்பட்ட வீரவரலாறு உண்டு என்பது வெளிப்படை.

போர் நடந்த இடங்களில் கைவிடப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட வீரர்களின் எச்சங்களை சாதகமான நிலை தோன்றிய பின்பு மீட்டெடுத்துத் தாயகம் எடுத்துச்செல்லும் இராணுவப் பாரம்பரியம் உலகில் உண்டு. செனற்கெலானா தீவில் இறந்த (1821) நெப்போலியனின் உடல் பலகாலத்தின் பின் பிரான்சு நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. அவருடைய எச்சங்கள் இன்வலிடே கட்டிடத்திலுள்ள தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. வலுவிழந்த போர்வீரர்களின் தங்குமிடமாக 1670இல் பதினான்காம் லூயி மன்னன் இன்வலிடே (INVA - LIDES) கட்டிடத்தை எழுப்பினான். 1950இல் நடந்த கொரிய தீபகற்பப் போரில் வடகொரியாவினால் கைப்பற்றப்பட்ட அமெரிக்க இராணுவத்தினரின் சில உடல்கள் மிக அண்மையில் அமெரிக்க இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. 1975ஆம் ஆண்டு முடிவுற்ற வியற்நாம் போரில் மடிந்த அமெரிக்க வீரர்களின் எச்சங்கள் கடந்த சில வருடங்களாக அமெரிக்காவுக்கு அதியுயர் இராணுவ மரியாதையுடன் அனுப்பப்பட்டன.

'துயிலும் இல்லம்' என்ற சொற்றொடரை தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாக்கியுள்ளனர். புலிவீரர்களின் வித்துடல்கள் ஆண், பெண் வித்தியாசமின்றி இங்கு விதைக்கப்படுகின்றன. மாவீரர் பற்றிய புலிகளின் எண்ணக்கருவை இச் சொற்றொடர் உணர்த்துகிறது. முதலாவது துயிலும் இல்லம் கோப்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் கோப்பாய் துயிலுமில்ல மண்ணில் போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்டதோடு எரிக்கப்பட்டும் வந்தன. 1991இல் வித்துடல்கள் எரிக்கப்படமாட்டாது, புதைக்கப்படும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இதுபற்றி 1991ஆம் ஆண்டின் ஐப்பசி - கார்த்திகை விடுதலைப் புலிகள் ஏடு "மாவீரர்களைத் தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்போது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக்கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும்" என்று கூறுகிறது. "இம்முடிவானது போராளிகளுள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது" என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

வித்துடல்கள் புதைக்கப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டபின் முதன் முதலாகக் கப்டன் சோலையின் வித்துடல் கோப்பாய் துயிலும் இல்லத்தில் 14ஜுலை 1991ஆம் நாள் விதைக்கப்பட்டுள்ளது.

## கல்லறை நினைவுக்கல் விபரம் 2005

| துயிலும் இல்லம் | கல்லறை | நினைவுக்கல் | மொத்தம் |
|---|---|---|---|
| விசுவமடு | 2,118 | 610 | **2,728** |
| முள்ளியவளை | 1,670 | 905 | **2,575** |
| கிளிநொச்சி | 1,213 | 755 | **1,963** |
| வன்னிவிளாங்குளம் | 621 | 235 | **856** |
| ஆலங்குளம் | 533 | 130 | **663** |
| முழங்காவில் | 602 | 357 | **959** |
| ஆட்காட்டிவெளி | 360 | 300 | **660** |
| பண்டிவிரிச்சான் | 208 | 64 | **272** |
| அளம்பில் | 74 | 73 | **147** |
| உடுத்துறை | 14 | 200 | **214** |
| கோப்பாய் | 648 | 1,184 | **1,832** |
| சாட்டி | 04 | 150 | **154** |
| கொடிகாமம் | 463 | 505 | **968** |
| எள்ளங்குளம் | 309 | 486 | **795** |
| ஈச்சங்குளம் | 392 | 315 | **707** |
| மணலாறு | 81 | - | **81** |
| டடிமுகாம் | 90 | - | **90** |
| தரவை | 1,488 | 964 | **2,452** |
| தாண்டியடி | 485 | - | **485** |
| கண்டலடி வாகரை | 284 | - | **284** |
| மாவடி முன்மாதிரி | 62 | - | **62** |
| கஞ்சிகுடிச்சாறு | 686 | - | **686** |
| ஆலங்குளம், திருமலை | 130 | 132 | **262** |
| பெரியகுளம் | 65 | - | **65** |
| தியாகவனம் | 35 | - | **35** |
| **மொத்தம்** | **12,635** | **7,365** | **20,000** |

வித்துடல் கிடைக்காது போனால் நினைவுக் கற்கள் நாட்டும் வழமை புலிகளாகிய எம்மிடம் உண்டு. அதே சமயத்தில் வித்துடல் ஒரு துயிலும் இல்லத்திலும் அவருக்கான நினைவுக்கல் இன்னுமோர் துயிலும் இல்லத்திலும் வைப்பது எமது இன்னுமொரு வழமையாகும். தென்தமிழீழ மாவீரர் பலரின் வித்துடல்கள் விஸ்வமடு மாவீரர் துயிலும் இல்லத்திலும் முள்ளியவளை துயிலும் இல்லத்திலும் விதைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய நினைவுக்கற்கள் தென்தமிழீழத் துயிலும் இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளன. மாவீரர்களான லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் வித்துடல்கள் பாரிஸ் பொது மயானத்தில் விதைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான நினைவுக்கற்கள் விசுவமடு துயிலும் இல்லத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. எமது துயிலும் இல்லங்களின் எண்ணிக்கை 25. மாவீரரின் கல்லறை மற்றும் நினைவுக்கல் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 20,000. மேலதிக விபரத்தை பட்டியலில் பார்க்கலாம்.

களப்பலியான போர்வீரர்களுக்கும் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட பிரத்தியேக இடங்களுக்கும் விசேட மரியாதை செலுத்தப்படுவது உலக வழமை. தலைத்தொப்பியை அகற்றியவாறு சிரம் தாழ்த்தி ஒருகணம் துதிப்பது பொதுவான நடைமுறை. மிகவும் நேர்த்தியாகக் கலையுணர்வோடு பேணப்படும் பொது இடங்களில் ஒன்றாக போர்வீரர்கள் அடக்கம் செய்யப்பட்ட நிலங்கள் அமைகின்றன. இரண்டாம் உலகப்போரில் 9,386 அமெரிக்கன், 17,769 பிரிட்டிக்ஷ், 5,002 கனேடியன் மற்றும் 650 போலந்து வீரர்கள் 1944இல் நடந்த நொர்மண்டி தரையிறக்கத்தில் இறந்தனர். இவர்களுடைய உடல்கள் 27 இடுநிலங்களில் புதைக்கப்பட்டுள்ளன. 2.5 மில்லியன் ஜப்பானிய போர்வீரர்களின் ஆன்மாக்கள் நினைவாக தலைநகர் தொக்கியோவில் யசுக்குனி போர் நினைவாலயம் மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கண்டியில் பிரிட்டிக்ஷ், பிரான்சு, கனடா, கிழக்கு ஆபிரிக்கா, தெற்கு ஆசியாவைச் சேர்ந்த இரண்டாம் உலகப்போர் வீரர்களுக்கான கல்லறைகள் கட்டப்பட்டுள்ளன. எதிரிகளுடைய கல்லறையாக இருந்தாலும் அவற்றிற்கு மரியாதை செலுத்தியவாறு பேணிவருவது உலகப் போரியல் பண்பு. சிங்களப் படைகளின் யாழ்.மீதான ரிவிசெர படையெடுப்பின்போது கோப்பாய், கொடிகாமம் துயிலும் இல்லங்கள் புல்டோசர் மூலம் சிதைக்கப்பட்டன. இது உலகப் பாரம்பரியத்தை மீறிய காட்டுமிராண்டித்தனம் என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக, எமது வீரச்சாவு நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். களப்பலியான மாவீரனின் வித்துடல் கிடைக்கப்பெற்றதும், அது ஓரிடத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. பதனிடப்பட்ட அந்த உடலுக்குச் சீருடை அணியப்படுகிறது. அதேநேரத்தில் அந்த மாவீரனுடைய விவரங்கள் உறுதிசெய்யப்பட்டு அவனுக்கான பதவிநிலை வழங்கப்படுகிறது. பின்பு வித்துடல் பேழையில் வைக்கப்படுகிறது. மாவீரன் பெயரும் பதவிநிலையும் பேழையில் பொறிக்கப்படுகின்றன. மாவட்ட அரசியல்துறை ஊடாக வித்துடல் அடங்கிய பேழை இராணுவ மரியாதையுடன் பெற்றார் அல்லது உறவினர் வீட்டிற்கு எடுத்துவரப்படுகிறது. வீட்டு அஞ்சலி முடிந்தபின் வீரவணக்க நிகழ்வுக்காக வித்துடல் ஒரு பொதுமண்டபம் அல்லது மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

அதன்பின் வீரவணக்கக் கூட்டம் மண்டபத்தில் நடத்தப்படுகிறது. முதற்கண் பொதுச்சுடர் ஏற்றப்படுகிறது. அடுத்ததாக ஈகைச்சுடர். பின்பு வித்துடலுக்கு மலர்மாலை அணிவிக்கப்படுகிறது. பெற்றார், மனைவி, கணவன், பிள்ளைகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. நினைவுக் கல் நாட்டும் நிகழ்வுக்கும் இதுபோன்ற நடைமுறை பின்பற்றப்படுகின்றது. நினைவுக்கல் நிகழ்வில் மாவீரனின் படம் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்ட பின் உரித்தாளரிடம் கொடுக்கப்படுகிறது. வித்துடலுக்கு மலர்மாலை மலர் அஞ்சலி செலுத்தப்பட்ட பின் அகவணக்கம் செலுத்தப்படுகிறது. நினைவுரைகள் அடுத்ததாக நிகழ்த்தப்படுகின்றன.

இறுதியாக இராணுவ மரியாதையுடன் வித்துடல் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு மலர்வணக்கம் செய்யப்படுகிறது. அதன்பின் விசேட பீடத்தில் வைக்கப்பட்ட பேழையும் உடலும் மேடைக்கு கொண்டுசெல்லப்பட்டு அதில் வைக்கப்படுகிறது. இப்போது உறுதிமொழி வாசிக்கப்படுகிறது.

உறுதிமொழி வாசிக்கப்பட்ட பின் இராணுவ மரியாதை வேட்டு தீர்க்கப்படுகின்றது. தாயகக்கனவுப் பாடல் ஒலித்தபின் அனைவரும் அகவணக்கம் செலுத்துகின்றனர். வித்துடல் புனித விதைகுழிக்கு இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்படுகிறது. அனைவரும் கைகளால் மண் எடுத்து விதைகுழியில் போடுகின்றனர். நடுகல்லானால் மலர்வணக்கம் செய்கின்றனர்.

*(தொடர்ச்சி 14ஆம் பக்கத்தில்)*





www.eelamview.com

# தமிழர் தேசமும் சிங்கள தேசமும்



மதுசங்கர்

**தமிழ்த்தேசம்** தனியான தேசமாக உருவாகி நீண்டகாலமாகிவிட்டது. தமிழ்மக்கள் எப்போது தனிநாட்டிற்கான போராட்டத்தினைத் தொடங்கினார்களோ அப்போதே தனியான தேசமாக உருவாகிவிட்டனர். 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியிருந்தனர். அத்தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்திற்கான சர்வசன வாக்கெடுப்பு என்று கூறியே போட்டியிட்டது. தமிழர் தாயகத்தின் 19 தமிழ்த் தேர்தல் தொகுதிகளில் 18 தேர்தல் தொகுதிகளில் வெற்றியடைந்ததன்மூலம் மக்களிடமிருந்து அந்த அங்கீகாரம் கிடைத்திருந்தது. கல்குடா தேர்தல் தொகுதியில் மட்டும் 555வாக்குகளினால் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் தோல்வியடைந்தார்.

மீண்டும் 2004ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ்த்தேசம் தனியான தேசமாக உருவாகியிருப்பதை சர்வதேச சமூகத்திற்கு காட்டுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது. தமிழர் தாயகத்தில் பெறக்கூடிய 23 உறுப்பினர்களில் 22 இனைப் பெற்று தமிழ்த்தேசம் தனது நிலையினை சர்வதேச சமூகத்திற்கு காட்டியிருந்தது.

தமிழ்த்தேசம் தனக்கெனத் தனியான கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், தனியான நிர்வாகத்துறை, தனியான நீதித்துறை, தனியான முப்படைகள், தனியான காவல்துறை என்பவற்றையும் உருவாக்கி சர்வதேசரீதியாக ஒரு அரச அந்தஸ்த்துடன் எழுச்சியடைந்து கொண்டிருக்கின்றது. அரசியலளவில் ஒரு அம்சமாக சிறிலங்காவின் 2005 ஜனாதிபதி தேர்தலையும் புறக்கணித்திருந்தது. அந்தப் புறக்கணிப்புப் போராட்டத்தில் வெற்றியையும் அடைந்திருக்கின்றது.

இந்தவகையில் தமிழர்தேசம் தனியான தேசமாக வரவேண்டியதற்கான காரணங்களை, தர்க்கரீதியாகப் புரிந்துகொள்வது தமிழர் தேசத்திற்கு அவசியமாக இருக்கின்றது. இந்தக் காரணங்களில் பிரதானமானது இலங்கையின் அரசியல் யாப்புகளாகும். காலனித்துவ ஆட்சியாளர்களான பிரித்தானியர்களிடமிருந்து அரசியல்யாப்பு ரீதியாகவே சிங்கள தேசத்திற்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டது என்றவகையிலும், சுதந்திர ஆட்சியாளர்கள் அரசியல்யாப்பு ஏற்பாடுகளைக் கொண்டும் அந்த யாப்புத் தந்த அதிகாரத்தைக் கொண்டும், அந்த அதிகாரங்கள் மூலம் உருவாக்கப்பட்ட அரச இயந்திரங்களைக் கொண்டும் தமிழ்த்தேசத்தை ஒடுக்கினார்கள் என்ற வகையிலும் அரசியல் யாப்புகள் தமிழ்த்தேச வரலாற்றில் முக்கியமாகின்றன. இந்த அனுபவங்களை 1933இல் அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறூக் அரசியல் சீர்திருத்த காலத்திலிருந்து பார்ப்பதே நல்லது.

ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன தாராண்மை அரசாங்க முறைக்கான ஆரம்ப வடிவங்கள் காலனித்துவ ஆட்சியாளர்களினாலேயே 1833இல் கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கைத்தீவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்ப அதிகாரக் கட்டமைப்பு வடிவத்தை உருவாக்கும்போது இலங்கைத்தீவின் பல்லினத் தன்மை, அதன் பல்லின அடையாளங்கள், அந்த அடையாளங்களுக்கான வரலாற்று ரீதியான ஆட்சிமரபுகள் எவையும் போதிய கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. மாறாக, தங்களுடைய சுரண்டல் நலன்களுக்காக இலங்கைத்தீவு முழுவதையும் ஒன்றாக்கி ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்தனர். எல்லாப் பிரதேசங்களும் கொழும்புடன் இணைக்கப்பட்டு கொழும்பு இந்த ஒற்றை அதிகாரக் கட்டமைப்பின் மையநிலையமாக மாற்றப்பட்டது. தமிழர் தாயகத்தின் சுய பொருளாதாரம், சுய ஆளுகை, சுய அடையாளம் என்பன சிதைக்கப்பட்டு கொழும்பு நிர்வாகத்தில் தங்கியிருக்கும் நிலை உருவாக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு என்ற தமிழர் தாயகத்தில் சுய சார்புத் தன்மையுடன் பெரும்பான்மையாக இருந்த தமிழ்மக்கள், தமிழர் தாயகம் இலங்கைத்தீவின் ஏனைய பிரதேசங்களோடு இணைக்கப்பட்டதால் முழு இலங்கைத்தீவிலும் சிறுபான்மையோராக மாற்றப்பட்டனர். சுயசார்புடன் சுய ஆட்சி மரபுடன் வாழ்ந்த ஒரு தேசிய இனத்திற்கு சிறுபான்மை இனம் என்ற முத்திரை குத்தப்பட்டது. கொழும்பு ஆட்சி அதிகாரத்தில் தங்கியிருக்கின்ற ஒரு சிறுபான்மை இனம் என்ற வகையிலேயே தமிழ்த் தேசிய இனம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அணுகப்பட்டன.

கோல்புறூக் சீர்திருத்தத்தில் பிரதேச ரீதியான நிர்வாகப் பிரிப்பின்மூலம் பன்மைத்தன்மை பேணுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இந்தியா போன்று பிரதேச ரீதியான நிர்வாகப் பிரிப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததால் காலனித்துவ ஆட்சியார்கள் விலகுகின்றபோது அந்த நிர்வாகப் பிரிப்பினை அதிகாரப் பிரிப்பாக மாற்றியிருக்க முடியும். எனினும் மைய நிர்வாகத்தில் சட்டத்துறையைப் பொறுத்தவரை இனவாதப் பிரதிநிதித்துவ முறையிலான ஒரு பன்மைத் தன்மை பேணப்பட்டது. இக்காலத்தில் சட்டத்துறையினைப் பொறுத்தவரையிலும் கூட அதிகாரம் பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் இருந்தாலும் சமத்துவமான இனவாதப் பிரதிநிதித்துவம் பன்மைத் தன்மைக்கு அடையாளமாக இருந்தது.

ஆனால் இந்தப்போக்கு நீண்டகாலம் நீடித்திருக்கவில்லை. சிங்களத் தலைவர்கள் இனவாரிப் பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக பிரதேச வாரிப் பிரதிநிதித்துவத்தினை அறிமுகப்படுத்துமாறு வற்புறுத்தினர். 1921இன் மானிங் அரசியல் சீர்திருத்தம் பிரதேச வாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தி தமிழ்த்தேசத்திற்கு சிறுபான்மையினர் என்ற முத்திரையினை யாப்பு ரீதியாகக் குத்தியது. இதன்பின்னர் வந்த அனைத்து யாப்பு நடவடிக்கைகளிலும் சிறுபான்மையினர் என்ற வகையிலேயே தமிழ்த்தேசிய இனம் அணுகப்பட்டது. அவ்வாறு அணுகும்போதுகூட, தமிழ்த் தேசம் சம்பந்தமான விவகாரங்களில்கூட தீர்மானம் எடுக்கக்கூடிய உரிமை தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை. இரட்டை வாக்குரிமை போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். ஆனால் யாப்புச் சீர்திருத்தங்களை உருவாக்கிய காலனித்துவ ஆட்சியாளர்கள் அவை எவற்றிலும் கவனத்தினைக் குவிக்கவில்லை. பெரும்பான்மையினத்தை அடிப்படையாகக்கொண்ட மைய நிர்வாக அமைப்பு தனது அதிகாரத்தை தமிழ்த்தேசம் மீது திணிக்கும் வகையிலேயே மைய அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழ்மக்களைப் பொறுத்தவரை பெயருக்கு சிறுபான்மையோர் பாதுகாப்புகள் என்றவகையில் சில ஏற்பாடுகளைப் புகுத்துவதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. இதன் விளைவினை டொனமூர் அரசியல் யாப்பின் நடைமுறைச் செயற்பாட்டிலேயே அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியல்யாப்பு அறிமுகமானது இவ்யாப்பின்மூலம் அரைவாசிப் பொறுப்பாட்சி இலங்கையர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. முழுமையான பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையிலமைந்த ஒரு அதிகாரக் கட்டமைப்பிடம் அதிகாரம் கைமாற்றப்பட்டது. இச்செயற்பாடு அதிகாரம் சிங்கள தேசத்திடம் செல்வதற்கான வாய்ப்புக்களைக் கொடுத்தது. சட்ட ஆக்கத்திலும், நிர்வாகச் செயற்பாட்டிலும் சிங்களதேசம் மேலாதிக்கத்தைப் பெற்றது. தமிழ்த்தேசத்தைப் பொறுத்தவரை சிறுபான்மையோர் ஏற்பாடுகள் என்ற வகையிலேயே சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நிர்வாகக்குழு முறையும், தேசாதிபதியிடம் இருந்த மறுப்பாணை அதிகாரமும் தமிழ்த் தேசத்தின் அபிலாசைகளைப் பாதுகாக்கப் போதுமானது என்றவகையில் சிறுபான்மையோர் ஏற்பாடுகளாக சேர்க்கப்பட்டன. தனது விவகாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில்கூட தமிழ்த்தேசம் தீர்மானிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

நிர்வாகக்குழு முறை தமிழ்த் தேசத்திற்குப் போதிய பிரதிநிதித்துவத்தையும் பாதுகாப்பினையும் வழங்கி வரும் எனக் கூறப்பட்டது. ஆனால் நிர்வாகக் குழுக்களில் போதிய பிரதிநிதித்துவமும் கிடைக்கவில்லை. தீர்மானங்களில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய உரிமை இல்லாததினால் போதிய பாதுகாப்பும் கிடைக்கவில்லை.

நிர்வாகக் குழுக்களே மந்திரிமார்களையும் தெரிவுசெய்தன. இதனால் மந்திரிகளாக வரும் சந்தர்ப்பங்களும் தமிழ்த்தேசத்திற்கு கிடைக்கவில்லை. 1931ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் சிங்களதேசம் தயவு பண்ணியதால் மலையக மக்களின் பிரதிநிதியான பெரிய சுந்தரத்திற்குத் தொழில் அமைச்சராக வரும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் 1936ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் மந்திரிசபை அமைக்கப்பட்டபோது அது தனிச்சிங்கள மந்திரி சபையாகவே அமைந்தது.

சிங்களதேசம் பெற்றுக் கொண்ட அரை ஆட்சி அதிகாரம்மூலம் ஆரம்பத்தில் தமிழ்த்தேசம் ஒடுக்குமுறைகளைச் சந்திக்கவில்லை. மலையக மக்களே ஒடுக்குமுறைகளைச் சந்தித்தனர். மலையக மக்களுக்கெதிராக நெற்காணிச்சட்டம், மீன்பிடிச் சட்டம், போக்குவரத்துச் சட்டம் என்பன கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இலங்கையர் அல்லாதவர்கள் என அவர்கள் முத்திரை குத்தப்பட்டு மேற்குறித்த தொழில்களில் தொழில் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. 1930களின் இறுதிக் காலங்களில் மலையக மக்களுக்கெதிரான இந்த ஒடுக்குமுறை மேலும் அதிகரித்தது. அரசாங்க உத்தியோகங்களிலிருந்த பலர் தாம் பார்த்த வேலைகளிலிருந்து சட்டரீதியாக நீக்கப்பட்டனர். சிங்களத் தலைவர்களில் உயர்வர்க்கத் தலைவர்கள் மட்டுமல்ல தொழிற்சங்கத்தவரான ஏ.ஈ. குணசிங்காவும் மலையக மக்களுக்கு எதிரான இனவாதத்தினைக் கக்கினார். இந்த ஒடுக்குமுறையின் விளைவாகவே 1939ஆம் ஆண்டு நேருவின் ஆலோசனையின் பேரில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதுவே பின்னர் 1950களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

1940களிலிருந்து தமிழ்த் தேசமும் ஒடுக்குமுறைகளைச் சந்திக்கத் தொடங்கியது. யாப்புத் தந்த அரசியல் அதிகாரத்தைச் சிங்களதேசம் தமிழ்த் தேசத்தினர் மீதும் பயன்படுத்தத் தொடங்கியது. தமிழ்த்தேசத்தை ஒடுக்கும் விடயத்தில் தூரநோக்குடனேயே சிங்கள அரசியல்த் தலைமை செயற்பட்டது. ஒரு தேசமாக இருக்கும் தமிழரின் இருப்பு எப்போதும் தனக்கு ஆபத்து என்றே கருதியது. இதனால் தமிழ்த் தேசத்தின் இருப்பினைக் குலைக்கும் வகையில் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதிலேயே அதிகூடிய கவனத்தைச் செலுத்தியது. 1941ஆம் ஆண்டு விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா தமிழர் தாயகத்தின் தென் பகுதியில் கல்லோயாத் திட்டத்திற்கான அத்திவாரத்தை உருவாக்கினார். ஆனாலும் உடனடியாக சிங்களமக்கள் குடியேற முன்வராமையினாலும், அதற்கான வசதிகளைச் செய்வதற்கான முழுமையான அதிகாரம் கிடைக்காததினாலும் சுதந்திரத்தின் பின்னரே அதனை நடைமுறைப் படுத்தினார்.

இவ்வளவிற்கும் ஏனைய இனங்களை ஒடுக்கும்போதும், அதற்கான சட்டங்களை உருவாக்கும்போதும் அதனை மறுதலிக்கக்கூடிய மறுப்பாணை அதிகாரம் ஆங்கிலேயரான தேசாதிபதியிடம் இருந்தது. ஆனால் தேசாதிபதியுட்பட ஆங்கிலேயரின் ஆட்சியிருப்பிற்கான அரசியல் சிங்களத் தலைவர்களிடம் இருந்தமையினால் இந்த மறுப்பாணை அதிகாரத்தினை பிரயோகிக்க தேசாதிபதி ஒருபோதும் முன்வரவில்லை. நடைமுறையில் சிறுபான்மையோர் காப்பீடுகள் என டொனமூர் குழுவினர் வர்ணித்தவையெல்லாம் செயலற்றுப் போயின.

1944இல் தமிழர் தரப்பிலிருந்து சமவாய்ப்புக் கோரிக்கையான 50:50 கோரிக்கையுடன் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் உருவாக்கப்பட்டது. இதே ஆண்டு சோல்பரி குழுவினர் புதிய யாப்பினை உருவாக்குவதற்காக இலங்கை வந்தபோது தமிழ்க் காங்கிரஸ் கட்சி 50:50 கோரிக்கையை முன்வைத்தது. காலனித்துவ ஆட்சியாளரின் பிரதிநிதிகளான சோல்பரி குழுவினர் தமிழ்த் தேசத்தின் பிரச்சினையை சிறுபான்மையோர் என்ற கண்ணோட்டத்துடனேயே பார்த்தனர். சிங்கள தேசத்திற்கு முழுமையான பொறுப்பாட்சியை வழங்கிய அதே வேளை, தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரை டொனமூரின் தொடர்ச்சியாக சிறுபான்மையோர் காப்பீடுகள் என்ற வகையில் ஒட்டு ஏற்பாடுகளையே செய்தனர். தமிழர்கள் ஒரு தேசமாக உள்ளனர் என்ற கருதுநிலை மீண்டும் ஒரு தடவை புறக்கணிக்கப்பட்டது.

ஒட்டு ஏற்பாடுகளில் அரசியல் யாப்பின் 29ஆவது பிரிவும், நீதித்துறைக்கு இருந்த நீதிப்புனராய்வு அதிகாரமும் பிரித்தானிய உயர்நீதிமன்றமான கோமறைக் கழகத்திற்கு முறையிடும் உரிமையும் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. அதேவேளை அதிகாரக் கட்டமைப்பில் முழுமையான அதிகாரத்தைச் சிங்கள தேசத்திடம் ஒப்படைத்துவிட்டு காலனித்துவ ஆட்சியாளர்கள் பெயரளவு அதிகாரத்தை மாத்திரம் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டனர். 1948இல் சுதந்திரம் கொடுத்த பின்னரும் இந்நிலையே தொடர்ந்தது. சிங்கள தேசத்திற்கு காவலாக இருக்கக்கூடிய வகையில் பாதுகாப்பு ஒப்பந்தங்களை செய்துகொண்ட பிரித்தானிய ஆட்சியாளர்கள் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு வினைதிறன் உடைய எவற்றையும் செய்யவில்லை.

சிங்களதேசம் ஆட்சி அதிகாரம் முழுமையாகக் கிடைத்தவுடனேயே இலங்கைத்தீவை முழுமையான சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இந்தச் செயற்பாட்டில் இரட்டைத் தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்பட்டது. அரச இயந்திரத்தை முழுமையாக சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகளையும் அதற்கேற்ற வகையில் சிங்கள அடையாளங்களை அரச இயந்திரத்திற்குப் பொறிக்கும் நடவடிக்கைகளும் முதலாவது தந்திரோபாயமாக அமைந்தன. மலையக மக்களின் இருப்பையும் தமிழர் தேசத்தின் இருப்பையும் சிதைக்கும் தந்திரோபாயம் இரண்டாவது தந்திரோபாயமாக அமைந்தன.

முதலாவது தந்திரோபாயம் இலங்கைக்கான தேசியக்கொடி உருவாக்குவதுடன் ஆரம்பமானது சிங்களக் குறியீடான வாளேந்திய சிங்களம் தேசியக்கொடியில் பிரதான இடத்தினைப் பிடித்துக்கொண்டது. இலங்கையில் வாழும் இனங்களைக் குறிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட நிறக்கோடுகள் சமாந்தரக் கோடுகளாக வரையப்பட்டன. இதன்மூலம் இனங்கள் என்றுமே இணையக்கூடாது என்பது வெளிக்காட்டப்பட்டதுடன் சிங்கத்திற்குக் கீழேயே அவை வாழுவேண்டும் எனவும் நிர்ப்பந்திக்கப்பட்டன. தமிழ்த் தலைவர்கள் இந்தக் கொடியினை காரசாரமாக எதிர்த்தபோதும் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை.

> சுய ஆளுகை, சுய அடையாளம் என்பன சிதைக்கப்பட்டு, கொழும்பு நிர்வாகத்தில் தங்கியிருக்கும் நிலை உருவாக்கப்பட்டது. வட - கிழக்கு என்ற தமிழர் தாயகத்தில் சுயசார்புத் தன்மையுடன் பெரும்பான்மையாக இருந்த தமிழ்மக்கள் தமிழர் தாயகம் இலங்கைத்தீவின் ஏனைய பிரதேசங்களோடு இணைக்கப்பட்டதால் முழு இலங்கைத் தீவிலும் சிறுபான்மையோராக மாற்றப்பட்டனர். சுயசார்புடன், சுய ஆட்சிமரபுடன் வாழ்ந்த ஒரு தேசிய இனத்திற்கு சிறுபான்மை இனம் என்ற முத்திரை குத்தப்பட்டது. கொழும்பு ஆட்சி அதிகாரத்தில் தங்கியிருக்கின்ற ஒரு சிறுபான்மை இனம் என்ற வகையிலேயே தமிழ்த்தேசிய இனம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அணுகப்பப்பட்டன.

இக்கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த இதழில் பிரசுரமாகும்

www.eelamview.com

(6ஆம் பக்கத்தொடர்ச்சி..)
மிகக்குறைவு. அப்படி அருப்புத்துருப்பாக வீடு சென்றாலும் அங்கு வசதியாக பொழுதைக் கழிக்க அவன் விரும்புவதில்லை. படுப்பதற்கு பாயும் தலையணையும் கொடுத்தால் அதற்கும் கதை சொல்வான். களத்தில் நிற்போருக்கு உதெல்லாம் கிடைக்கவா போகிறது என்று விட்டு தானும் வெறும் நிலத்திலேயே படுத்துத் தூங்கிவிடுவான். நல்ல உணவு கொடுத்தாலும் இப்படித்தான் சொல்லுவான்.

1993இல் பூநகரி படைத்தளம் மீதான தவளை நடவடிக்கையின்போது ஜெரியும் ஒரு அணியினை வழிநடத்திச் சென்றான். இந்தச் சண்டையில் ஒரு இறுக்கமான சூழ்நிலையில் எதிரியின் எதிர்ப்பை முறியடிக்க முடியாதிருந்த பகுதியில் ஜெரி தனது அணியுடன் சென்று எதிரியுடன் சமரிட்டு அந்தப் பகுதியைப் பிடிப்பதற்கு காரணமாயிருந்தான்.

சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்றபின் 1995இல் யாழ்குடாநாட்டினைக் கைப்பற்றுவதற்காக சிறிலங்கா இராணுவம் பல தாக்குதல்களை நடாத்தியது. இடிமுழக்கம், சூரியகதிர் என நடந்த தொடர்தாக்குதல்களிலும் ஜெரி பங்கேற்றான். இந்த நடவடிக்கைகளில் ஜெரி அடுத்தடுத்து இரு தடவைகள் காயடைந்தான். காயங்களை அவன் பெரிதாக பொருட்படுத்திக் களத்திலிருந்து அகன்று விடுவதில்லை. ஜெரி ஒரு சிறந்த வேவுவீரன். அவனின் வேவுப்பணி சூரியகதிர் நடவடிக்கைக் காலப்பகுதியில் ஆரம்பமாகின்றது. ஒரு வேவுவீரனுக்குரிய சிறப்பம்சங்கள் அவனிடமிருந்தன.

1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிதுகாலம் யாழ் தென்மராட்சிக் கோட்ட சிறப்புத் தளபதியாக இருந்த ஜெரி 1996ஆம் ஆண்டு வன்னியில் இருந்து திருகோணமலை சென்ற தாக்குதல் அணியில் ஒருவனாகச் சென்றான். கேணல் சொர்ணம் அவர்களின் தலைமையில் இந்த அணி சென்றதும் அங்கு இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றன. திருகோணமலைச் சூழல் ஜெரிக்கு முன்னைய மணலாற்றுச் சண்டைகளை நினைவுபடுத்தின. அங்கும் எல்லா வளங்களையும் வெளியிலிருந்தே கொண்டுவரவேண்டும். சாப்பாட்டிற்கான உணவுகள், சண்டைக்கான வெடிபொருட்கள் என எல்லாப்பொருட்களையும் பொருள் வந்து சேரும் இடத்திலிருந்து கம்பாலா மூலம் இருப்பிடம் கொண்டு செல்லவேண்டும். கொஞ்சநாள் சண்டை என்றால் கொஞ்சநாள் பொருட்கள் சேகரிக்க கம்பாலா அடிக்க வேண்டும். இவ்வாறு பல நெருக்கடிகளை எதிர்நோக்கினாலும் அங்கு பலதாக்குதல்கள் வெற்றிகரமாக, நடந்தேறின. மொறவேவ பொலிஸ் நிலையத் தாக்குதல், பன்குளம் சண்டை, புல்மோட்டை மினிமுகாம் தாக்கியழிப்பு, என அங்கு நடந்த பல தாக்குதல்களில் ஜெரி தனது அணியுடன் பங்குபற்றினான். ஒவ்வொரு தாக்குதலிற்கு முன்பும் தாக்கவிருக்கும் முகாமினை வேவுபார்க்க வேண்டும். வேவுப்பணி ஜெரிக்கு பிடித்தமான பணி. அவன் வேவுப்பணியிலும் ஈடுபட்டான். மொறவேவ பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது. சண்டையின் தொடக்கத்தில் பாதைகள் உடையவில்லை. களச்சூழல் மாறும் நிலையிருந்தது. ஜெரி சென்ற பகுதியும் நிலமை அவ்வாறே இருந்தது. ஆனால் ஜெரி அந்தச் சூழலுக்கு ஏற்றவாறு திட்டங்களைப்போட்டுத் தான் சென்ற பாதையை உடைத்து திறந்து பின் பகுதியால் உள்நுழைந்தான். அன்றைய தாக்குதல் வெற்றிக்கு ஜெரியின் திறமையான செயற்பாடு அதிக துணையாய் இருந்தது. எந்தப் பதட்டமான சூழ்நிலையிலும் தான் பதட்டமடையாமல் உறுதியாக நிதானமாக நின்றபடி கட்டளைகளை வழங்கி அணியை வழிநடத்தும் திறன் அவனிடமிருந்தது.

1997ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை திருகோணமலை மாவட்டத்தில் செயற்பட்ட அவன் மீண்டும் வன்னி திரும்பினான். வன்னியில் அவனுக்கு விரும்பமான பணி காத்திருந்தது. விசேட வேவுப்பிரிவில் ஜெரி இணைக்கப்பட்டான். இந்தக் காலப்பகுதியில் தான் சிறிலங்கா இராணுவம் ஜெயசிக்குறு என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி வன்னியில் பல கிராமங்களை ஆக்கிரமிக்கத்தொடங்கியது. தொடர்ச்சியாகச் சண்டைகள் நடந்துகொண்டிருந்தன. ஜெரிக்கும் நிறையப்பணி காத்திருந்தன.

ஒரு வேவு வீரனின் வாழ்க்கை எப்போதுமே கடினமானது. எதிரியின் முகாமுக்குள் ஊடுருவி அவன் மூச்சுப்படும் இடத்தில் நின்றபடி வேவுபார்த்துத் திரும்புவது என்பது இலேசான வேலையல்ல. புறப்படும் நேரத்திலிருந்து மீண்டும் திரும்பும்வரையும் எந்த நொடிப்பொழுதிலும் சாவு நிகழலாம்.


காட்டு நடவடிக்கை ஒன்றின் போது லெப்.கேணல் ஜெரி

**அது வவுனியா ஜோசப் முகாம் அண்டிய பகுதியில் பறப்பில் ஈடுபடும் சிறிலங்கா உலங்கு வானூர்தியைத் தாக்கி அழிப்பதற்கான வேவு நடவடிக்கை. ஜெரியின் வேவு நடவடிக்கையில் எல்லோருக்கும் நம்பிக்கையிருந்தது. ஜெரி கொண்டு செல்லும் அணி எப்போதும் பாதுகாப்பாகத் திரும்பும். சண்டைகள் ஏற்பட்டாலும் குறைந்த இழப்புடன் அணியைக் காப்பாற்றி வேவுத்தரவுகளைப் பெற்றுவருவான் என்ற நம்பிக்கையிருந்தது. ஏனெனில் ஜெரி ஒவ்வொரு நகர்விற்கும் அவதான முள்ளவன். கடுமையான விழிப்புடன் சூழலை அவதானித்து முன்னேறும் திறன் படைத்தவன். எந்த இக்கட்டிலும் பதட்டமடையாமல் அணியை சிதறவிடாமல் முடிவெடுத்துச் செயற்படக்கூடியவன். எந்த நகர்விலும் அலட்சியப்போக்கால் அணி எதிரியிடம் சிக்கிவிடாது பாதுகாப்பவன்.**

பலமாக போடப்பட்டிருக்கும் எதிரியின் கம்பிவேலிகளை நெருங்கி காவலரணில் விழித்தபடியிருக்கும் சிப்பாய்கள் கண்டுவிடாதபடி தடைகளை வெட்டி எதிரிக்கு ஊடாகவே ஊடுருவி சில நாட்கள் எதிரிக்குத் தெரியாமல் அவனுக்கு அருகிலேயே தங்கியிருந்து வேவுத் தகவல்களைச் சேகரித்து மீள்வது என்பது சாதாரண வேலையல்ல. இந்த வாழ்க்கை மிகக்கடினமானது. ஆனாலும் இந்த கடினமான வாழ்க்கை ஜெரிக்குப் பிடித்திருந்தது.

ஜெரி போராட்ட இலட்சியத்தில் ஊறிவளர்ந்தவன். அவன் மனதில் போராட்ட இலட்சியம் பற்றியதும் தனது கடமையை செய்து முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் எப்போதும் ஓடிக்கொண்டேயிருக்கும். தனக்கென தானே வரையறைகளைப்போட்டு அவற்றை நேர்த்தியாகக் கடைப்பிடிப்பவன். எதையும் யாருடனும் நேருக்கு நேரே கதைக்கும் சுபாவமுடையவன். தன்னைப்போல் மற்றவர்களும் இந்தப்போராட்டத்திற்காக உழைக்கவேண்டும் என்ற எண்ணமுடையவன். இதனால்தான் இவனின் செயற்பாடு சிலருக்கு பிடிப்பதில்லை. உண்மையில் ஒரு இராணுவ வீரன் இப்படித்தான் இருக்க வேண்டும்.

இந்த முன்மாதிரியான அவனின் இயல்பின் காரணமாக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நின்று செயற்படும் அணியை வழிநடத்துவதற்காக ஜெரி தெரிவு செய்யப்பட்டான். ஏனெனில் எத்தகைய நெருக்கடிகள் ஏற்படினும் ஜெரி பதட்டமடையாது நிதானமாக முடிவெடுத்துச் செயற்படுவான் என்ற நம்பிக்கை உருவாகியிருந்தது.

1997இல் ஒன்பதாம் மாதத்தில் இறுதி வாரத்தில் ஜெரியின் தலைமையிலான வேவு அணியொன்று இராணுவம் ஜெயசிக்குறு மூலம் ஆக்கிரமித்த பகுதிக்குள் ஊடுருவுகிறது. இராணுவப் பிரதேசத்தில் நின்றபடி எதிரியின் இருப்பிடங்களை, நகர்வுகளை வேவுபார்த்து எதிரிக்குத் தொல்லைகொடுக்கும் தாக்குதல்களை மேற்கொள்வதே இவ் அணியின் நோக்கமாகும். இந்தப் பணி இலகுவான பணியல்ல. தாக்குதலுக்காக பயன்படுத்தும் வெடிபொருட்களையும், கொஞ்சம் உணவுப்பொருட்களையும் தோளில் சுமந்தபடியே எந்த நேரமும் நகர வேண்டும். ஒவ்வொரு நாளும் நீண்டதூரம் நடக்கவேண்டும் அந்த உடற்களைப்பிற்கேற்றதான உணவும் கிடைக்காது. தங்களிடம் இருக்கும் உலருணவைக் கொஞ்சம் உண்டுவிட்டு கொஞ்சத் தண்ணீரைப் பருகிவிட்டு பொழுதை வேவு பார்ப்பதில் களிக்கவேண்டும்.

இராணுவத்தின் நடுவில் நின்றபடி நிம்மதியாகத் தூங்க முடியாது. அதற்கான இடமும் கிடைக்காது. இந்த கடினங்களையெல்லாம் தாங்கியபடி ஜெரியின் அணி, செயற்பாட்டைத் தொடர்ந்தது எதிரிக்குள் இருந்தபடி தொல்லை கொடுக்கும் தாக்குதல்கள் தொடங்கின. வடகாட்டுப் புளியங்குளத்தில் ரோந்தில் வந்த இராணுவம் மீது தாக்குதல், கண்டிவீதியில் புளியங்குளம் நோக்கிச் சென்ற இராணுவக் கொள்கலன் மீது கிளைமோர்த் தாக்குதல், சேமமடுவிலிருந்து இளமருதங்குளம் நோக்கி வந்த இராணுவத்தின் லக்சறி பஸ் மீது கிளைமோர்த் தாக்குதல், சின்னப் பூவரசங்குளத்திலிருந்து ஆனந்தர் புளியங்குளம் நோக்கிச் சென்ற இராணுவ வண்டி மீது தாக்குதல், நைனாமடுவிலிருந்து குறிசுட்டகுளம்நோக்கி வந்த இராணுவ உழவு இயந்திரம் மீது தாக்குதல் என பலதாக்குதல்கள் ஜெரியின் அணியால் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் பல சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல இராணுவ சொத்திழப்பையும் ஜெயசிக்குறுப்படை சந்தித்தது. இவற்றிற்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் மேற்கொண்ட இத்தகைய தாக்குதல்களால் இராணுவத்தினர் எப்போதும் அச்சத்துடன் காணப்படும் நிலை ஏற்பட்டதுடன் அவர்களின் நகர்வுகளில் முடக்கம் ஏற்பட்டது. இது இராணுவத்திற்கு பெரும் தலையிடியாக அமைந்தது.

இவ்வாறு திறமையாகச் செயற்பட்ட ஜெரிக்கு இன்னுமொரு பணி காத்திருந்தது. அது வவுனியா ஜோசப் முகாம் அண்டிய பகுதியில் பறப்பில் ஈடுபடும் சிறிலங்கா உலங்கு வானூர்தியைத் தாக்கி அழிப்பதற்கான வேவு நடவடிக்கை. ஜெரியின் வேவு நடவடிக்கையில் எல்லோருக்கும் நம்பிக்கையிருந்தது. ஜெரி கொண்டு செல்லும் அணி எப்போதும் பாதுகாப்பாகத் திரும்பும். சண்டைகள் ஏற்பட்டாலும் குறைந்த இழப்புடன் அணியைக் காப்பாற்றி வேவுத்தரவுகளைப் பெற்று வருவான் என்ற நம்பிக்கையிருந்தது. ஏனெனில் ஜெரி ஒவ்வொரு நகர்விற்கும் அவதானமுள்ளவன். கடுமையான விழிப்புடன் சூழலை அவதானித்து முன்னேறும் திறன் படைத்தவன். எந்த இக்கட்டிலும் பதட்டமடையாமல் அணியை சிதறவிடாமல் முடிவெடுத்துச் செயற்படக்கூடியவன். எந்த நகர்விலும் அலட்சியப்போக்கால் அணி எதிரியிடம் சிக்கிவிடாது பாதுகாப்பவன்.

இந்த முன் மாதிரிகைக்காகத்தான் அவனிடம் இந்தப்பணி கொடுக்கப்பட்டது. இராணுவக் காப்பரன்களை ஊடுருவி அணி வேவுத் தகவல்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டு எதிரியின் தளங்களை மிகவும் அண்மையாகச் சென்று பார்த்து தாக்குதலை மேற்கொள்வதற்கான முதற்கட்ட தகவல்களைத் திரட்டியபடி அணி தளம் திரும்பியது. அந்தத் தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டன. மீண்டும் ஜெரியின் வேவு அணி உள்நுழைகின்றது. தாக்குதலுக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அணி மீண்டும் தளம் திரும்ப முனைகிறது. எதிரியின் ஒவ்வொரு பகுதிகளாகக் கடந்து அணி எதிரியின் இறுதி காப்பரன் வரிசையை அண்மிக்கிறது.

எதிரி நிறையத் தடைகளைப் போட்டுவைத்திருந்தான். இந்தத் தடைகளுக்குள்ளால் தனது போராளிகளை கவனமாக வெளியேற்றியபடி தானும் தடையைக் கடந்தான். அப்போதுதான் அது நிகழ்ந்தது. ஜெரி கீழே விழுந்தான். நிலமட்டத்தோடு எதிரியால் பாய்ச்சப்பட்டிருந்த மின் கம்பியில் அவன் சிக்கிவிட்டான். நொடிப்பொழுதில் அவன் உயிர் பிரிந்தது. என்ன நடந்தது என்று ஊகிப்பதற்குள் அவன் வீரச்சாவடைந்து விட்டான். ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு போராளியையும் கவனமாக வழி நடத்துபவன். இன்று அவனுக்கு ஏன்தான் இப்படி நடந்து என்பதை அந்த இரவுப்பொழுதில் போராளிகளால் உணர முடியவில்லை. அவன் வித்துடலைச் சுமந்தபடி அவர்கள் தளம் திரும்பினார்கள்.

அன்றைய நாளில் உயிர்பிரிந்தாலும் அவன் சேகரித்த வேவுத் தகவல்கள் பத்திரமாக இருந்தன. அவன் சேகரித்த வேவுத் தகவல்களின் சுவடுகள் அவனுடன் கூடச்சென்ற வேவுப் போராளிகளும் விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்புப் போராளிகளும் சென்று 26.06.1998இல் அவன் நினைவாகவே எம்.ஐ.24ரக உலங்கு வானூர்தி ஒன்றை சுட்டு வீழ்த்தினர்.

“ஜெரி நல்லொழுக்கமும் இயக்க கட்டுப்பாடுகளை மதித்து நடக்கும் பண்புகொண்டவன் நீண்டகால சண்டை அனுபவமும் சிறந்த வேவு அனுபவமும் உடையவன். எந்த வேலையினையும் தானாகவே முடிவெடுத்துச் செய்யக்கூடியவன். சண்டைகள் திட்டத்திற்கமைய இல்லாவிட்டாலும் நிலைமைக்கேற்ப முடிவெடுத்துச் செயற்படக்கூடியவன். ஜெரி எங்களுடன் இருந்திருந்தால் இன்னும் நிறையச் செய்திருப்பான்” என்று அவனுக்கு இறுதியாகப் பொறுப்பாகவிருந்த கேணல் ஜெயம் அவர்கள் ஜெரியின் நினைவுகளைப் பகிரும்போது குறிப்பிட்டார்.

இந்த தேசவிடிவிற்கான இலட்சியப் போரில் மடியும் ஒவ்வொரு உயிர்களினதும் விலைகளின் பரிசாய் எங்கள் தாயகம் எங்கள் கைகளில் ஒரு பொழுதில் வந்துசேரும்.



www.eelamview.com

காலம் எத்தனை வேகமாக நகருகின்றது. மிதிவண்டித் தாங்கியில் பாயிழைக்கும் புற்களையும், அச்சில் வார்த்த மெழுகுதிரிகளையும், உணவுப் பொதிகளையும் மருந்துப் பெட்டிகளையும் சுமந்து சுதந்திரப் பறவைகள் சிறகு விரித்தது.

வந்த வல்லவரோடு மோதி, எம்மால் முடியுமென்று எம்மை நாமே நம்பி, வல்ல தலைவனோடு வன்னிக் காட்டிலே அடைக் குஞ்சுகளாகப் புடமிடப்பட்டு வெளியேறியது.

எங்கிருந்து வந்தோம் என்ற பேதங்களற்று எல்லோருமே நாட்டுக்காக என்றாகி, வாவி மண்ணின் வண்ணத்தமிழும், மன்னாரின் கொஞ்சும் தமிழும், யாழ்ப்பாணத்தின் தெள்ளிய தமிழும் சேர்ந்தொரு குரலில் விடுதலைப் பாடல்களைப் பாடியது, விரிந்த களங்களெங்கும் மோதியது, காலம் எத்தனை பேரை எம்மிடமிருந்து அள்ளிச் சென்றது?

*******

அப்போது இந்திய இராணுவத்துக்கும் எமக்குமிடையில் சண்டை தொடங்கிவிட்டது. கடும் சண்டை. திரும்பும் திசைகளில் எல்லாம் அந்நிய இராணுவம் பரவத்தொடங்க, தாயகத்தின் மூலை முடுக்கெங்கும் மோதிக்கொண்டோம். பத்துப் பதினைந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து திக்கொரு குழுவாக நகர்ந்தோம். திடீரென மூளும் சண்டையில் இச்சிறு அணி மேலும் சிறு அணியாகவும் பிரிய நேர்ந்தது.

கோப்பாயருகே சண்டை. இந்திய இராணுவ நகர்வை வேவு பார்க்கவேண்டும். நிர்மலாவும் இன்னொருவரும் மக்களின் உடைகளை வாங்கி அணிந்தார்கள். இடம் பெயர்ந்துகொண்டிருந்த மக்களோடு மக்களாகக் கலந்து நீர்வேலியிலிருந்து எல்லை இராணுவ நிலை ஒன்றைக் கடந்துவிட்டார்கள். தோடுகள் அணியாத காதுகளைச் சன நெரிசலுக்குள் இராணுவம் கவனிக்கவில்லை. நடப்பதும் ஊர்திகளில் ஏறுவதுமாகப் பயணித்து நிர்மலாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

வீட்டாருக்கு அதிர்ச்சி. மகள் வீடு வந்துவிட்டாள் என்று பூரிப்பதா? எந்த நேரமும் இந்திய இராணுவம் வீட்டுக்குள் நுழையக்கூடிய வேளையில் வீட்டுக்குள் நுழையக்கூடிய வேளையில் வந்ததற்காகக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதா?

உறவுக்காரர் யாராவது பார்த்து என்ன எது என்று விசாரிப்பதற்குள் இருவரையும் வீட்டுக்குள் கூட்டிப்போய் அறை ஒன்றிலே விட்டுப் பூட்டிவிட்டார்கள். சித்தப்பா அழைக்கப்பட்டார்.

“ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் எல்லாம் நான் ஏற்பாடு பண்ணுகிறேன்” என்றார். நிர்மலா சிரித்தார். தாயைத் தனியாகக் கூப்பிட்டார். கையில் சிறு சரையுடன் வந்தார். காதணிகள்: தோழியிடமும் கொடுத்துத் தாமும் அணிந்துகொண்டார். போய்வருகிறோம் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். வீட்டார் செய்வதறியாது நின்றார்கள்.

இடையில் மறித்து அடையாள அட்டை கேட்டது இந்திய இராணுவம். தாங்கள் மாணவிகள் என்றும், அவசரத்தில் அடையாள அட்டையை எடுக்காமல் வந்து விட்டதாகவும் கூறி நிர்மலா சிரிக்க, தானும் சிரித்தவாறு இராணுவம் வழிவிட்டது.

பழையபடி கோப்பாய் வந்து, எங்கெங்கே இராணுவம் நிற்கின்றது என்று மேஜர் முரளியிடம் சொல்ல, லெப்.கேணல் சறாவின் ஆர்.பி.ஜி அடியுடன் கோண்டாவிலில் இந்திய இராணுவம்மீது தாக்குதலொன்றைச் செய்தார்கள்.

கோப்பாய், நீர்வேலி, கோண்டாவில் பகுதிகளில் நிர்மலாவின் அணி தாக்குதல்களைச் சந்தித்தது.

அன்று ஊரெழுவில் தாக்குதலைச் சந்தித்துக்களைத்துப் போய்வந்த லெப்.துர்க்காவின் அணிக்கு, கரந்தனிலுள்ள தமது மறைவிடத்தைக் கொடுத்துவிட்டு இரவோடிரவாக இவர்கள் உரும்பிராய் செல்வபுரத்திலிருந்த கட்டிமுடிக்கப்படாத வீடொன்றுக்கு இடம் மாறினார்கள்.


எல்லோருக்கும் ஒவ்வொரு ஆயுதம் இல்லாத காலம் அக்காலம். சிலர் குண்டுகள், சிலர் ரவை முடிச்சுக்கள் சுமந்து களமிறங்கிய காலம். இந்திய இராணுவக்காலம். நிர்மலாவின் கைகளில் ரவைகள் சுமந்த ஒரு துணி முடிச்சு. யாருக்கு ரவை முடிந்தாலும் நிர்மலாவின் கைகள் நிரப்பிக்கொடுக்கும்.

நடந்த களை ஆறமுன்னரே இந்திய இராணுவ நகர்வை இனங்கண்டவர்கள் சட்டென இடம் மாறும் முயற்சியில் வீதியைக் கடக்க முயன்றபோது நிர்மலா வீரவேங்கை நிர்மலாவாக, முரளி மேஜர் முரளியாக...

சண்டை கடுமையாகத் தொடங்கியிருந்தபோது எல்லோரையும் ஒன்றுகூட்டிப் “போராட விரும்பாதவர்கள் வீடு செல்லலாம், போக்குவரத்துச் செலவுக்குப் பணம் தரலாம்” என்று சொன்னபோது கூட வீடு செல்ல விரும்பாத நிர்மலா, வித்துடலாகக்கூட வீடு திரும்பவில்லை.

*******

பூநகரிப் படைத்தளம் மீதான தவளை நடவடிக்கையில் அவர் விழிமூடி இப்போது பன்னிரண்டு ஆண்டுகள். ஆனால் இப்போதும் ஜிகிர்தாவை நினைவுபடுத்தினால், மூத்த போராளிகளின் மன ஆழத்திலிருந்து மோற்சொன்ன




கூற்றே சட்டென வருகின்றது.

சுட்டாலும் கெடாத வெண்சங்கு அவர். எத்தகைய நெருக்கடியான சூழலிலும் தன் பெருந்தன்மையில் குறையமாட்டார். அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலைக் காடுகள் வழியாகக் கால்நடையாக நாட்கணக்கில் பயணம் செய்துதான் மணலாற்றுக் காட்டுக்கு வந்து படைய தொடக்கப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். அவர் பயிற்சி பெற்ற நாட்களிலோ, காட்டிலே நடந்த ஏனைய பயிற்சிப் பாசறைகளில் தொடர்ந்து நின்ற நாட்களிலோ யார்மீதாவது அவர் சினந்ததாகவோ, அவர் மீது யாரும் சினக்கும்படி நடந்துகொண்டதாகவே நினைவில்லை.

லெப்.கேணல் ராஜன் தலைமையில் நடாத்தப்பட்ட மேஜர் பசிலன் கல்லூரியில் அதிகாரியாகத்தேறி வெளிவந்தார் ஜிகிர்தா என்றழைக்கப்பட்ட நித்தியா.

இப்போது பூநகரிமீதான இராணுவ நடவடிக்கைக்கு எமது அமைப்புத் தயாரானது. அந்த நேரம் பூநகரிச் சண்டைக்குப் போகாதவர்களை விரல்விட்டு எண்ணலாம் எனும் அளவுக்கு, முழுப்பேருமே பங்குகொண்ட தாக்குதல் அது. விடுதலைப்புலிகள் மகளிர் படையணி யாழ்ப்பாணத்திலும் மணலாற்றுக் காட்டிலுமாக இரு பகுதிகளாகப் பயிற்சியில் இறங்கியது.

மணலாற்றுப் படையணியின் பெண்களணி இப்போது விடுதலைப்புலிகள் மகளிர் படையணியோடு இணைந்துகொண்டது. பூநகரித் தாக்குதலுக்கென அணிகள் மீளமைக்கப்பட்டபோது தமது அணிகளிலே புதிய அணிகளைச் சேர்த்துக்கொள்ள விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் அணி முதல்வர்கள் தயங்கியபோது எல்லோருக்கும் முன்மாதிரியாய் ஜிகிர்த்தா முன்வந்தார்.

“என்னிடம் தாருங்கள் நான் அவர்களோடு சண்டைக்குப் போகின்றேன்” என்றார்.

யார் யார் எந்த வழிகளால் தாக்குவது என இலக்குகள் பிரிக்கப்பட்டே பயிற்சிகள் நடந்தது. காட்டிலே கடும் பயிற்சி. பாரமான முதுகுச் சுமைகளோடு நீரோடைகளைக் கடந்து போய்வந்து, நீண்டதூரம் நகர்ந்து, இரவிரவாகப் பயிற்சிதான். அசையாத நேர்மையுடைய ஜிகிர்தா தன் அணியினரையும் அப்படியே பேணிவந்தார்.

ஆயிரத்துக்கும் மேலான பெண்போராளிகள் பங்கெடுத்த தாக்குதல் அது. முதன் முதலாக விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் வேவுப் பிரிவு, தான் தேர்ந்தெடுத்த பாதைகளூடே தாக்குதல் அணிகளை வழிநடத்திச் சென்றது. அதிகளவில் 50கலிபர் துப்பாக்கிகளையும், முதன் முதலாக வு56 ரக கவசவாகனமொன்றையும், ஐந்து நீருந்து விசைப்படகுகளையும் நாம் கைப்பற்றிய பெருமைமிகு சண்டை அது.

ஆயிரத்துக்கும் மேலான பெண் போராளிகள் ஆயுதம் தரித்து அணிவகுத்து நின்றார்கள். அனைவர் முகங்களையும் உற்றுநோக்கினார் தலைவர் அவர்கள். இவர்களில் பலரை அவருக்கு நன்கு தெரியும்.

“சங்க காலத்துத் தாய் தன் மகனை “சென்றுவா மகனே வென்று வா” என்று கூறிப் போருக்கு அனுப்பினாள். உங்களை நான் “சென்று வா மகளே வென்று வா” என்று வாழ்த்தி அனுப்புகின்றேன்.

என்றார்.

சென்றார்கள். வென்றார்கள். வந்தார்கள். ஜிகிர்தாவைத் தோளேந்தி வந்தார்கள்

*******

வயதுக்கே உரிய குறும்புத்தனம், வயதிலும் மீறிய பெரிய மனிதத்தனம் எல்லாம் கலந்த கலவைதான் லெப்.மாணிக்கம். படைத்துறைப் பள்ளியில் தன் ஆரம்பக் கல்வியை முடித்துவிட்டு, போர்ப் பணி செய்யவென லெப்.மாணிக்கமும் அவரை ஒத்த சிலரும் விடுதலைப் புலிகள் மகளிர் படையணிக்கு வந்திருந்தனர். பூநகரிக் கூட்டுப் படைத்தளம் மீதான ‘தவளை நடவடிக்கையே’ இவருக்கு முதற்களமாக அமைந்தது.

சட்டென எவராலும் கட்டுப்படுத்திவிட முடியாத இயல்பு அவருடையது. ஆனால் யார்மீதாவது பற்று வைத்தால், என்றுமே மாறமாட்டார். தேவைக்கேற்ப அடிக்கடி அணிகளை மீளமைக்கும்போது, மாணிக்கம் தமது அணியில் விடப்படுவதையிட்டு, அணித் தலைவர்கள் தளபதியிடம் போய் குறைப்படுவதற்கிடையில், மாணிக்கம் தனது பெருவிருப்புக்குரிய பிருந்தாவின் அணியில் யாருடனாவது ஒப்பந்தம் பேசி அவரைத் தன்னுடைய அணிக்கு மாற்றிவிட்டு, தான் பிருந்தாவின் அணிக்குப் போய்விடுவார். பிருந்தாவின் அணியிலிருந்த மாணிக்கம் எந்த அணிக்கு இடமாற்றம் செய்யப்பட்டாலும், மறுபடியும் பிருந்தாவின் அணியிலிருப்பது, எப்போதும் சூரியன் கிழக்கிலே உதிப்பதைப்போல் வழமையான ஒன்று, தனக்கு ஏற்ற இடமொன்றை அவர் தேர்ந்தெடுப்பதையிட்டு தளபதிகளும் கருத்து வேறுபடுவதில்லை.

ஒருமுறை கடற்கரையோரப் பாதுகாப்புக்கென மகளிர் படையணியின் அணிகள் யாழ்ப்பாணத்தின் கரையோரங்களில்

**– மலைமகள் –**

நிலைகொண்டிருந்தன. மக்கள் வாழுமிடங்களில் நாம் நமது குறும்புத் தனங்களையும், வாலையும் சுருட்டி காற்சட்டைப் பைகளில் வைத்துவிட்டு, இராணுவ மிடுக்கோடு உலாவவேண்டிய தேவை. நாங்கள் எந்த வயதையுடைய, எத்தகைய இயல்புடையோராயினும்
மக்கள் முன் நாமெல்லோரும் விடுதலைப் புலிகள்தான்.

எல்லோரும் விழிப்போடு நடந்துகொள்ள, எல்லோரது கண்காணிப்பையும் மீறி, சுருட்டி வைத்திருந்த வாலை மாணிக்கம் அவிழ்த்துவிட்டார். அவ்வளவுதான். எல்லாமே பிழைத்துப் போய்விட்டது. அணிக்குப் பொறுப்பாக இருந்தவர் மாணிக்கத்தைக் கடுமையாகக் கண்டித்துவிட்டார்.

மாணிக்கத்தையும் அவரை ஒத்த சிலரையும் காணவில்லை. எல்லோரும் தேடத்தொடங்கியும், காணவில்லை. கடலிலே கண்ணுக்குத் தெரியக்கூடிய தூரத்தில் நீண்ட நேரமாக மிதந்துகொண்டிருந்த கட்டுமரம் ஒன்று கவனத்தை ஈர்த்தது. பகல் நேரம் மீனவர்கள் இவ்வளவு நேரம் கடலில் நிற்கமாட்டார்களே. மேஜர் ரவிக்காவும் சிலரும் நீந்திப் போனார்கள்.

கடலில் மிதக்கும் கட்டுமரத்தில் விசுவாமித்திரத் தவத்தோடு மாணிக்கம். இனி ஒருபோதும் உன்னை ஏசமாட்டோம் என்று மன்னிப்புக் கேட்டபின்னர்தான் மாணிக்கம் கரைக்குத் திரும்பினார்.

கோபம் வந்தால் ஒன்றுமே பேசாமல், மண்டைக் கண்ணால் விழித்துப் பார்க்கும் அந்தக் குழப்படிகாரி, முன்னேறிப் பாய்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் பாய்ந்தபோது, தன் பணியை முடித்துக்கொண்டார்.

எல்லா மனிதர்களுமே ஒரேபோல் இருப்பதில்லை. அப்படியிருந்தால் வாழ்வில் சுவை இருப்பதில்லை. விடுதலைப் போராட்ட வாழ்வும் அப்படியே.

பல தரப்பட்ட மனிதர்களைத் தன்னகத்தே ஈர்த்தபடி இப்போதும் விடுதலை அலை வீச்சாக.

*******


நல்ல சண்டைக்காரர்கள் என்று நாம் எண்ணியிருந்தவர்கள் இன்று எம்மோடு இல்லை. அதனாலென்ன? புதியவர்கள் அவர்களின் வெற்றிடங்களைச் சோர்வில்லாது நிரப்பீடு செய்துகொண்டேயிருக்கிறார்கள்.

இவர்கள் எப்போதுமே எங்களோடிருந்து விடுதலைத் தேரை உந்தித் தள்ளமாட்டார்களா என்று ஏங்கியவர்களும் எம்மோடில்லை. இதுதான் இயற்கையின் நியதி. ஆனாலும் இழந்தவர்களுக்காகவே மனம் ஏங்குகின்றது.

லெப்.நித்தியா, கப்டன் சஞ்சிகா, கப்டன் அஜித்தா, மேஜர் சோதியா, கப்டன் தேனுஜா இன்றும் இருந்தால்...



www.eelamview.com



உலைக்களம்

வியாசன்

# தாகம் சுமந்தவரின் வாசலில் நின்று சத்தியம் செய்வோம்



சொரிந்த மேகக் கண்ணீரால்
நிலமூறிச் சிதம்பிக் கிடக்கிறது.
இப்போது மழையில்லையாயினும்
எப்போதும் உடைப்பெடுக்கலாம் என்பதான
மப்பும் மந்தாரமுமான வானம்.
மயிர்த்துளையூடு புகும் குளிர்காற்று
கூதல் தரவில்லை எமக்கு
மாறாய் நெருப்பாய்த் தகிக்கிறது தேகம்.
பிள்ளைகளின் முகம் தெரியுமெனும்
நம்பிக்கையில்
மணிக்கதவம் தாள்திறக்கும் பொழுதுக்காக
கல்லறைகளுக்கு முன்னே காத்திருக்கிறோம்.
துயிலுமில்லப் பிரகாரமெங்கும்
திரண்டிருக்கிறது தெய்வங்களின் சுற்றம்.
பயிர்களைக் காணவும் பேசவுமென்று
விளைந்து கிடக்கும் விடுதலை வயலில்
விதைத்தவர் கூடியுள்ளோம்.
கையில் பூவுடனும் சுடருடனும்
நீண்டு கிடக்கிறது கிரியைக்கானவரிசை
கபாடம் திறந்ததும் கண்திறப்பார்களே
குழியிருந்து வெளியே வருவார்களே
புன்னகைப்பார்களே
பின்னர் பேசுவார்களே
கொண்டு வந்தீர்களா என்று கேட்பார்களே.
சென்றவருடம் வந்து திரும்பியபோது
அடுத்தவருடம் வரும்போது
அதனுடன் வருவோமென்றல்லவா
சொல்லித் திரும்பினோம்?
இப்போது என்ன சொல்லப்போகிறோம்?
இந்த வருடமும் வரிசைகட்டி விளக்கேற்றி
வாச மலர்தூவி
அந்தப் பாடலையும் பாடுவதற்கான
சம்பிரதாயக் கிரியைகளுக்காகவா இந்தக் கியூ?
குற்றமிழைத்தவர்களாகக் குறுகி
வெற்றுக் கைகளுடன் போவது எத்தனை
வெட்கம்?
சுடரேற்றித் திரும்பும்போதுதான்
அவர்கள் வாய்திறப்பார்கள்
சுட்டெரிக்கப் போகிறது அந்தச் சுடுகேள்வி.
எங்கே தமிழீழம்?
என்னாச்சு தமிழீழம்?
எதிரொலிக்கப் போகும் அசரீரிக்கு
எங்களிடம் என்ன பதில் உண்டு?
மாவீரர் நாள்
சம்பிரதாயங்களுக்குள் இறுகிய
சடங்குநாளல்ல.
திருவண்ணாமலைச் சோதிப்பெருநாளல்ல
இத்தனை பேரையுமா இழந்தோமென்று
இரங்கியழும் நாளுமல்ல.
இன்னும் சொல்வதானால்
இது அவர்களுக்கான நாளல்ல
எங்களுக்கான நாள்.
துயிலுமில்ல வாசல் கடக்கும் ஒவ்வொரு
தடவையும்
உள்ளே ஏதோ ஊதிப்பெருக்கிறதே
அதற்கான நாள்.
கல்லறைகளில் வெய்யில்
விழக்காணும்போது
ஓடிப்போய் கூரைவிரிக்கச் சொல்கிறதே
அதற்கான நாள்.
எத்தனை பிள்ளைகளை
எத்தனை எத்தனை விதமாய்க்
கொடுத்தோம்.
நரம்புகளில் நஞ்சு ஊறியதாய்
மேனியெங்கும் கந்தகம் பூசியதாய்
கூட்டியள்ளி வந்த சதைக்குவியலாய்
வகைமாதிரிக்கு எத்தனை
வழியிற்கொடுத்தோம்.
மௌனத்தில் உறைந்துகிடக்கிறது
பிள்ளைகளின் தொட்டில் பரப்பு.
நேரம் நொடிகளாய்க் கரைய
சுற்றம் விளக்கேற்றத் தொடங்கிறது.
மகனே!
மகளே!
சூழலில் வழிகிறது பிரிவின் கனதி.
கருவறை தாங்கிய உறவல்லவா?
அது பிள்ளையின் திருமுகம் தேடுகிறது.
மமமொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதிடுடு
நெஞ்சுருக்கி உள்ளே நெருப்பேற்றி
விடுகின்ற
அந்தப் பாடலும் தொடங்கிறது.
இனித்தான் கல்லறைக் கதவுகள் திறக்கும்.
இனித்தான் விழிமலர்த்தி
வெளியேவருவார்கள்.
அம்மா!... அப்பா!... எனத் தொடங்கி
தோழரே!... தோழியரே!... என நீண்டு
வழக்கத்திலுள்ள அத்தனை உறவும் சொல்லி
அசரீரிபோல அழைப்பது கேட்கும்.
விழிமூடி விதிர்விதிர்த்து நிற்பவர் முன்னே
அவர்கள் வருவார்கள்
வந்து தொடுவார்கள்
கட்டி அணைப்பார்கள்
பழையன இரைமீட்டிச் சிரிப்பார்கள்.
எங்கே தமிழீழம்?
என்னாச்சு தமிழீழம்?
திரும்பும்போதுதான் கேட்பார்கள்
இம்முறையும்.
பதிலற்றவராகப் பந்தமேற்றப்போவது
எத்தனை பாவம்
எத்தனை குற்றம்.
காட்சிக்கு வைக்கப்பட்டவையல்ல
இந்தக் கல்லறைகள்.
இவை சாட்சிக்கு வைக்கப்பட்டவை என்பதை
கணக்கில் எடுக்கவும்.
தாகம் சுமந்தவரின் வாசலில் நின்று
சத்தியம் செய்யும்போது
உண்மைமனிதராய் ஒளிரவேண்டும்.
அழகான கவிதைகளும் பாடல்களும்
அனல்மூட்டும் பேச்சுக்களும் அல்ல
அவர்கள் வேண்டி நிற்பது.
அழுதழுது விதைத்த அழகுமேனிகளின்மீது
உறுதியெடுத்ததை நினைவிற்கொள்வோம்.
உயிராய் வழியனுப்பி
சடலமாய் வெளியில் எடுத்த
காலத்தை நினைவிற்கொள்வோம்.
தீராக்கனவுகளுடன் திரிந்த காலத்தை
இன்று தொலைத்தா விட்டோம்?
சகல ஊத்தைகளையும் உரஞ்சிக்கழுவி
உண்மைமனிதராய் கல்லறைகளுக்கு முன்னே
நிற்போம்.
அவர்கள் முகம் பார்த்து முறுவல் செய்வோம்.
உங்கள் கனவுகளை நெஞ்சில் புதைத்தே
உறுதிசெய்வதாய் சொல்வோம்.
தாய் மீதும்
தமிழ் மீதும்
தலைவன் மீதும்
உங்கள் கல்லறை மீதும் கனவின் மீதும்
சொல்லும் உறுதியுடன்
தொடருமெம் பயணமெனச்சொல்லி
வெளியே வருவோம்.
சுமைகுறைந்ததுபோலவும்
நமக்கு நாமேபுதியவர் போலவும் தெரிகிறதே.
இதுதான் வழி
இனித்தான் பயணம்.

# பகிரப்படாத பக்கங்கள்

## கரைகாண முடியாத கற்பகதரு

ஆ.ந.பொற்கோ

கார்த்திகை இருபத்தேழு. எங்கும் எழுச்சிக்கோலம். மாவீரர் துயிலும் இல்லம் களைகட்டியிருந்தது. தோழனின் நினைவுக்கல் நோக்கி நடந்தேன். தோழனின் நினைவுகள் மனமடலில் எழுந்துகொண்டிருந்தன.

உயர்தரக் கல்விக்காய் அந்தக் கல்லூரியில் இணைந்திருந்தோம். தொடக்கநாளே எனக்கு அவனையும் அவனுக்கு என்னையும் பிடித்துப்போயிற்று. உறவுப்பாலம் உறுதியாய் நகர்ந்தது.

அவன் அழகாய் பாடுவான். ஆழமாய் பேசுவான். கல்லூரி நிகழ்வுகளும் பட்டிமன்றங்களும் அவனின் ஆற்றலை மெய்ப்பித்தன.



விளையாட்டுத்திடலில் இறங்கிவிட்டால் அவன் களைத்துப்போய் இருந்ததை நான் கனவிலும் கண்டதில்லை. அவனின் ஆளுமையைச் சுவைப்பதற்காய் நான் எப்பொழுதும் எதிரணியில் விளையாடுவது வழமை.

நடத்தையும் திறமையும் எல்லோருக்கும் அவனை இனங்காட்டியது. சமூகத்திலொரு கற்பகதருவாய் அவனிருந்தான்.

கல்லூரி விட்டுக் கடற்கரைவீதியில் பயணிப்போம். முனையில் நின்று கடலை முழுமையாய் இரசிப்பான். கடலோசை காதுகளில் கரைந்துகொண்டிருக்கும். சரக்குக்கப்பல் சரக்குகளை இறக்கிக்கொண்டிருக்கும். இறங்குதுறை தொழிலாளர்களாலும் பாரவூர்திகளாலும் நிறைந்திருக்கும். அவன் தன்னை மறந்து அலையின் இசையில் கலந்து பாடுவான்.

கல்லூரி நாட்களில் இடையிடையே அவனைக் கல்லூரியில் காணக்கிடைக்காது. அப்போது நான் அவன்மீது கோபப்பட்டிருக்கிறேன். அவன் எங்கு செல்கிறான் என அறிந்ததும் அமைதியானேன். அவன் விடுதலைப் போராட்டத்திற்குப் பகுதிநேரமாக வேலைசெய்துகொண்டிருந்தான். கல்லூரிக்கு இடையிடையே அவன் வராவிட்டாலும் உயர்தரத்தேர்வில் கோட்டைவிடவில்லை. பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியிருந்தான். அதன்பின் அவனைச் சந்திக்க முடியவில்லை.

எதிர்பாராதவிதமாக விடுதலை எழுச்சி நிகழ்வொன்றில் அவனைக் கண்டேன். நிகழ்வுக்கு மக்கள் வெள்ளம் அலைமோதிக்கொண்டிருந்தது. அவர்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தான். அவன் தனது திறமையை மீண்டுமொருமுறை நிரூபிப்பதைத் தூரத்தில் நின்று இரசித்துக்கொண்டிருந்தேன்.

பல ஆண்டுகளின் பின் போராளிகளாய் சந்தித்துக்கொண்டோம். அவன் கடற்புலிகளின் படையணியொன்றிற்குப் பொறுப்பாளனாக இருப்பதாக அறிந்திருந்தேன். ஒரு கோப்பையில் இருவரும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். கல்லூரி நாட்களை நினைவுபடுத்திச் சிரித்துக்கொண்டிருந்தான். அவனின் கடின உழைப்பு அவனில் பிரதிபலித்தது.

அதன்பின் அவனைக் காணக்கிடைக்கவில்லை. சிறிது காலத்தின்பின் அந்தச்செய்தி வந்தது. எனக்கு அதிர்ச்சியாகவும் அளவுகடந்த வியப்பாகவுமிருந்தது. சமாதான காலத்தில், சர்வதேச கடற்பரப்பில் வைத்து, சிறிலங்கா கடற்படையால் தாக்கப்பட்டு, அவனும் தோழர்களும் கப்பலோடு காவியமாகியிருந்தார்கள்.

கல்லூரி நாட்களில் அவனுக்கும் எனக்குமிடையில் எந்த ஒழிவுமறைவுகளும் இருக்கவில்லை. ஒருவருக்கொருவர் உள்ளக்கிடக்கைகளை மனம்விட்டு பகிர்ந்துகொள்வோம்.

விடுதலைப்போராட்ட வரலாற்றில் இருவரும் போராளிகளாக இருந்தாலும்கூட ஒருவருக்கொருவர் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ள முடியாதுதான். ஆனால் அவன் எடுத்திருந்த 'கறுப்புநிலா' முடிவுகூட எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவனுக்கு நிகர் அவனேதான். அவனொரு கரைகாணமுடியாத கற்பகதரு.

---

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளின் ஊரக வளர்ச்சிப் பணியினர் மோசமாகப் பின்தங்கிய கிராமங்களில் சிறுவர்கள் விடயத்தில் அக்கறைகொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

தமிழீழக் காவல்துறை, நீதிநிர்வாகத்துறை போன்றன சிறுவர்களின் நலன்களில் அதிக அக்கறையோடு தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இவை எல்லாவற்றினதும் பெறுபேறாகத்தான் புலிகளால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இறுக்கமான பொருளாதார முற்றுகையுடன் கொடும்போர் கட்டவிழ்த்து விடப்பட்ட காலங்களில்கூடக் குழந்தைத் தொழிலாளிகள் என்றோ, ஆதரவற்றவர்கள் என்றோ, சிறுவர் பாலியல் தொழிலாளிகள் என்றோ காண்பதற்கு அரிதானதொரு உன்னதமான நிலை உருவாகியது. தலைவர் அவர்களால் இத்தகைய செயற்பாடுகள் அக்கறையோடு முன்னெடுக்கப்பட்டிருக்காத பட்சத்தில், மிகவும் மோசமான போர் திணிக்கப்பட்ட இந்தத் தேசத்தில் எம் சிறுவர்களின் வாழ்வு எவ்வாறு அமைந்திருக்கும் என்பதைக் கற்பனையில்கூட நினைக்க முடியாது.

விடுதலைப்புலிகளின் இத்தகைய செயற்பாடுகளுக்கு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டும் சர்வதேச அளவிலான தமிழ்மக்களின் ஆதரவுடன் தன்னால் இயன்ற உதவிகளைப் புரிந்தது. ஆனால் சிறுவர்களின் உரிமைகள் பற்றி அதிகம் அலட்டி அலட்டியே பிரபல்யம்பெற்ற சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் அத்தனையுமே தமிழ்ச் சிறுவர்கள் மீது பாராமுகம் காட்டின.

நிலைமை இவ்வாறிருக்க புலிகள் இயக்கத்தின் மீது சிறுவர் உரிமை மீறல்கள் பற்றிய பரப்புரைகள் சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போரெடுத்துச் சிங்கள அரசு சிறுவர் வாழ்வைச் சிதைத்து அழித்து வருவதை நோக்காதுவிடும் சர்வதேசம் "போரில் சிறுவர்களை ஈடுபடுத்துகிறார்கள்" எனப் புலிகள் இயக்கத்தின் மீது குற்றம்சுமத்தி வருகிறது. தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை முறியடிப்பதற்காக அவ்வியக்கத்தின் நியாயப்பாடான இலட்சியம் நோக்கிய செயற்பாட்டின் மீது சர்வதேச அளவில் களங்கம் கற்பித்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் நோக்கம் கொண்ட ஒரு யுத்தச் செயற்பாடு போன்றே அவை செயற்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகள் அமைப்பைப் பொறுத்தவரை அது வெறுமனே ஒரு போரிடும் இயந்திரமல்ல. அது ஒரு தேசத்திற்குரிய அரசியல் நிர்வாகக் கட்டமைப்புடன் இயங்கும் ஒரு பரந்துபட்ட விடுதலையமைப்பு. அதன் ஒரு அங்கமாகவே புரட்சிகர இராணுவக் கட்டமைப்பு உள்ளது. எனவே விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைவதென்பது ஒரு போரிடும் இராணுவத்தில் இணைவதற்கு ஒப்பாகிவிடாது. அத்தோடு ஒரு விடுதலை அமைப்பிற்கான ஆட்சேர்ப்புமுறை ஒரு தொழில்ரீதியிலான படைக்கு ஆட்சேர்க்கும் வழமையான முறையிலிருந்து வேறுபட்டதென்பது அனைவரும் புரிந்திருக்கக் கூடியதொன்றே.

இந்நிலையிலும் தமது அமைப்பில் இணைந்துகொள்ளும் சிறுவர்களை அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் நடைமுறையை விடுதலைப்புலிகள் இயக்கம் நீண்ட காலமாகவே நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலேயே 1570 வரையானோர் பெற்றோர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஆனால் வஞ்சத்தனமான உள்நோக்கத்துடன் உண்மைக்குப் புறம்பான பரப்புரையில் ஈடுபட்டுவரும் அமைப்புகளும், ஊடகங்களும், ஏனையோரும், வறுமையின் பொருட்டும் சமூக ஒடுக்குமுறைகளிலிருந்து தப்பியும் புலிகளிடம் தஞ்சம்புகும் சிறுவர்களின் விபரங்களைக்கூடச் சேகரித்து "புலிகளால் பலவந்தமாக ஆட்சேர்க்கப்பட்ட சிறுவர்கள்" என அறிக்கைகளை விட்டுவருகின்றன.



இவ்வாறு சிறுவர்கள் புலிகள் இயக்கத்தில் விடாப்பிடியாக இணைய விரும்புவதன் காரணம்தான் என்ன? இயக்கத்தில் இணைய முன்வரும் சிறுவர்கள் தமது முடிவிற்காகக் கூறும் காரணங்களை செவிமடுத்து இந்நிலைக்கு எவ்வாறு தீர்வு காணலாம்? என்பவைபற்றிச் சிந்திப்பதே தற்போது அவசியமானதாகும். சிறுவர்களின் உரிமையைக் காக்கும் மகத்தான மானுடப்பணியை மேற்கொள்வோர் இதய சுத்தியுடன், உள்நோக்கங்கள் எதுவுமற்று அக்கறையுடனும் நடுவு நிலைமையுடனும் செயற்படவேண்டும் எனத் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். புலிகள் இயக்கம் காலம் காலமாக முன்னெடுத்துவரும் சிறுவர்நலன் தொடர்பான விடயங்களுக்கு இச் சர்வதேச நிறுவனங்கள் தம்மாலான இதயபூர்வமான உதவிகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குமாக இருந்தால் உலகிலேயே சிறுவர் உரிமைகளைச் சிறப்பாகப்பேணும் நாடு என்ற உன்னத நிலைநோக்கித் தமிழீழம் இன்னமும் வேகமாக முன்னகரும் என்பதில் ஐயமில்லை.

"நான் ஒரு கனவு காண்கிறேன். அந்தக்கனவு நனவாகி நடைமுறை உண்மையாகவேண்டும் என்பது எனது அவா.

"எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப் பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் கண்ணியமும் உள்ளவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்றவேண்டும். அந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக உருப்பெறவேண்டும்.

"இது ஒரு பெரிய ஆசை; அலாதியான கனவு. எனினும் நான் முயற்சிக்கிறேன். முயற்சி ஆக்கம்தரும் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு" என்று கூறும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், எமது இளம் தலைமுறையைப் பலியிட நினைக்கும் எத்தகைய சக்திகளிடமிருந்தும் எமது இனத்தைக் காத்துத் தன் மேன்மையான கனவுகளை ஈடேறவைப்பார் என்பதில் தமிழ்மக்கள் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

---

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தமிழினத்தால் மாவீரர் நாளாகக் கொண்டாடப்படும் நவம்பர் 27, தமிழீழ விடுதலைப் போரில் முதல் களச்சாவடைந்த எமது இயக்க வேங்கை லெப்.சங்கர் (சத்தியநாதனின்) நினைவாக அமைகிறது. 1989ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாட்தொட்டு நாம் ஆண்டுதோறும் மாவீரர் நாளைக் கடைப்பிடித்து வருகிறோம். முதலாவது மாவீரனின் வீரச்சாவுதான் அனைத்து மாவீரர்களின் நாளாகக் கொண்டாடப்படுவதால் அதற்கு மிகப்பெரிய முக்கியத்துவம் உண்டு. தமிழீழத்தின் மிகப்பெரிய நிகழ்வு என்ற சிறப்பு மாவீரர் நாளுக்கு உண்டு.

1990ஆம் ஆண்டு தொடக்கம் 1994ஆம் ஆண்டுவரை நவம்பர் 21தொட்டு 27வரையிலான ஒருவாரம் மாவீரர் வாரமாகச் சிறப்பிக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 25, 26, 27ஆம் நாட்கள் மாவீரர் எழுச்சி நாட்களாகக் கடைப் பிடிக்கப்படுகின்றன. 1994ஆம் ஆண்டுதொட்டு மாவீரர்நாள் நள்ளிரவிலிருந்து மாலை 6.05 மணிக்கு மாற்றப்பட்டது. முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த நேரமும் அதுவாகும். 6.05மணிக்கு தமிழீழம் எங்கணும் அனைத்துத் தேவாலய மணிகளும் ஒரு நிமிடம் ஒலி எழுப்பும். அதன்பின் அகவணக்கம் செலுத்தப்படும். மாவீரர் துயிலும் இல்லங்கள் யாவற்றிலும் ஒவ்வொரு கல்லறைக்கும் நடுகல்லுக்கும் முன்னால் பெற்றார், உரித்தாளர்கள் போன்றோரால் தீபம் ஏற்றப்படும். துயிலும் இல்லத்தின் நடுமேடையிலும் தீபம் ஏற்றப் படும். துயிலுமில்லம் வராத உள்ளூர் மக்களும், புலம்பெயர்ந்த உடன்பிறப்புக்களும் தத்தம் இல் லிடங்களில் விளக்கேற்றி வணக்கம் செய்வார்கள்.

மாவீரர் நாளின்போது அந்த நாளுக் கென்று பாடப்பட்ட மாவீரர் பாடல் துயிலும் இல்லங்களில் ஒலிக்கவிடப்படும். முதலாவதாக இது 1991ஆம் ஆண்டு கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒலித்தது. இதை எழுதியவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.



www.eelamview.com

# 2005 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

கருதியதில்லை. இதுவே, அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்து வருகிறது.

சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து நீதி கிடைக்கப்போவதில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து, எமது உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டும் என உறுதிபூண்டிருந்தபோதும் தவிர்க்கமுடியாத வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாகச் சிங்கள அரசுடன் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்ற நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். பிரதேச வல்லரசான இந்தியாவின் தலையீடு ஒரு காலகட்டத்திலும், சர்வதேச நாடுகளின் அழுத்தம் இன்னொரு கட்டத்திலுமாகச் சமாதான முயற்சிகளில் எம்மை ஈடுபடச்செய்தன. அத்தோடு பேச்சுக்களில் நாம் பங்குபற்றியதற்கு வேறு காரணங்களும் இருக்கவே செய்தன. தமிழீழ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது அமைப்புக்குச் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் பேச்சுவார்த்தை ஒரு சாதனமாக அமைந்தது. அதுமட்டுமன்றி, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை உலகமயப்படுத்தி, சர்வதேசச் சமூகத்தின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்கும் இது அவசியமாக இருந்தது. அடுத்ததாக நாம் ஆயுத வன்முறையிற் காதல்கொண்ட போர் வெறியர் அல்லர் என்பதையும் சமாதான மென்முறையில் நாம் பற்றுறுதி கொண்டவர்கள் என்பதையும் உலகுக்கு உணர்த்திக் காட்ட வேண்டிய தேவையும் எழுந்தது. இறுதியாக, எல்லாவற்றிலும் முக்கியமாகத் தமிழீழ மக்களின் அடிப்படையான அரசியற் கோரிக்கைகளை ஏற்று ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைச் சிங்கள இனவாத ஆட்சியாளர் முன்வைக்கப் போவதில்லை என்ற உண்மையைச் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டுவதும் எமது நோக்கமாக இருந்தது. இப்படியான குறிக்கோள்களுடனேயே நாம் பேச்சுக்களிற் பங்குகொண்டோம்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தொடரும் எமது தேச விடுதலைப்போராட்டத்தில், வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு வரலாற்றுச் சூழ்நிலைகளில், நாம் போருக்கு ஓய்வு கொடுத்துச் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றினோம். எதிரியானவன் கபட நோக்கும் வஞ்சக நெஞ்சும் கொண்டவன் என்பது எமக்குத் தெரியும். அத்தோடு சமரசப் பேச்சுக்களால் பயன் எதுவும் கிட்டப்போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும். சமாதானப் பேச்சு என்பது எமது விடுதலைப்போராட்டப் பாதையில் வைக்கப்பட்ட பொறி என்பதையும் நாம் நன்கு அறிவோம். இத்தனையையும் தெரிந்தும் நாம் நேர்மையுடனும் நேரிய நோக்குடனும் சமாதானப் பாதையில் பயணித்தோம். ஆயினும் நாம் மிகவும் விழிப்புடனும் விவேகத்துடனும் செயற்பட்டோம். சமாதானப் பயணத்தின்போது - சமரசப் பேச்சுக்களின்போது சிக்கலான பல சவால்களையும் நெருக்குவாரங்களையும் நாம் எதிர்நோக்க நேரிட்டது. எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பங்கம் ஏற்படும் வகையிற் பொறிகள் வைக்கப்பட்டன. சதிவலைகள் பின்னப்பட்டன. ஆனால் நாம் நிலைமையைப் புரிந்து சாதுரியமாகக் காய்களை நகர்த்தியதால் பொறிகளுக்குள் மாட்டிக்கொள்ளவுமில்லை சதிவலைப் பின்னல்களுக்குட் சிக்கிவிடவுமில்லை. சிங்கள ஆட்சியாளரும் அவர்களுக்கு முண்டுகொடுத்து நின்ற வல்லரசுகளும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் எமது மக்களின் நலனுக்கும் விரோதமாகச் செயற்பட எத்தனித்த போதெல்லாம் எமது இயக்கம் அம்முயற்சிகளை வன்மையாக எதிர்த்து நின்றது. இந்தியத் தலையீடு நிகழ்ந்த காலத்தில், எமது மக்களின் நலனுக்கும் எமது தேசச் சுதந்திரப் போராட்டத்திற்கும் அச்சுறுத்தல் எழுந்தபோது இந்திய வல்லரசையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் எதிர்த்துப் போராடவும் நாம் துணிந்தோம் என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

எமது விடுதலை இயக்கம், திம்புவில் தொடங்கிப் பல்வேறு கட்டங்களில், பல்வேறு சமாதான முயற்சிகளிற் பங்குபற்றியபோதும் இம்முறையே எமது போராட்ட வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரு நீண்ட கால இடைவெளியை - கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால இடைவெளியைச் சமாதானத்திற்கு நாம் அர்ப்பணித்தோம். இந்த நீண்ட கால விசாலத்தில் எமது மக்களின் பிரச்சினைகளுக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் அயராது மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துமே அர்த்தமற்றுப்போயின.

இம்முறை நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்கள் சாராம்சத்தில் வித்தியாசமானவை, முக்கியத்துவமானவை. மூன்றாம் தரப்பு உலக நாடொன்றின் அனுசரணையில், சர்வதேசச் சமூகத்தின் கண்காணிப்பில் இந்தப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. முதலில் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுடனும் பின்னர் சந்திரிகாவின் ஆட்சிபீடத்துடனும் நிகழ்ந்த பேச்சுக்களின்போது மேற்கொள்ளப்பட்ட முடிவுகள், தீர்மானங்கள், உடன்பாடுகள் எவையுமே செயல்வடிவம் பெறவில்லை. நாம் பொறுமையின் எல்லையைக் கடந்து சகிப்புத்தன்மையின் சிகரம்வரை சென்றோம். எத்தனையோ விடயங்களில் விட்டுக்கொடுத்து, சகல வாய்ப்புக்களையும் நாம் வழங்கியபோதும் சிங்களப் பேரினவாத ஆட்சிப்பீடங்கள் எமது மக்களுக்கு நீதிவழங்க மறுத்துவிட்டன.

2001ஆம் ஆண்டு, டிசம்பர் 24ஆம் நாளன்று, நாமாகவே தன்னிச்சையாகப் போரை நிறுத்திச் சமாதானக் கதவுகளைத் திறந்துவிட்டோம். வன்னிமாநிலத்தை மீட்டெடுத்து, ஆனையிறவுப் படைத்தளத்தை துவம்சம் செய்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாக நிலைநிறுத்தி, பலத்தின் அத்திவாரத்தில் நின்றவாறே சிங்களத் தேசத்திற்கு நாம் நேசக்கரம் நீட்டினோம். நோர்வே அரசு நடுநிலை வகிக்க ரணில் விக்கிரமசிங்காவின் அரசுடன் உலகத் தலைநகர்களில் நிகழ்ந்த பேச்சுக்கள் பற்றி நான் இங்கு விபரித்துக்கூறத் தேவையில்லை. எமது மக்கள் எதிர்கொண்ட அவலமான வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளையுங்கூட ரணிலின் ஆட்சிபீடத்தால் தீர்த்துவைக்க முடியவில்லை. ரணிலின் அரசாங்கமானது பேச்சுக்களை இழுத்தடித்துக் காலத்தைக் கடத்தியதோடு, உலக வல்லரசு நாடுகளுடன் இரகசியக் கூட்டுச்சேர்ந்து எமது விடுதலை இயக்கத்திடமிருந்து ஆயுதங்களைக் களைந்துவிடும் ஒரு சூழ்ச்சிகரச் சதிவலையைப் பின்னுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியது. இந்தச் சதித்திட்டத்தின் ஒரு முக்கிய ஏற்பாடாகவே 2003ஆம் ஆண்டு, ஜுன் மாதத்தில் டோக்கியோ மாநாடு அரங்கேறவிருந்தது. இதனை அறிந்துகொண்ட நாம் டோக்கியோ மாநாட்டைப் பகிஸ்கரித்ததுடன் பேச்சுக்களிலிருந்தும் விலகிக்கொண்டோம். சமாதான முயற்சியில் எதையுமே சாதிக்காது ரணிலின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதனையடுத்து, சமாதானத்திற்கு விரோதமான இனவாத சக்திகளுடன் கூட்டுச்சேர்ந்து புதிய அரசை அமைத்தார் சந்திரிகா. நாம் ஏற்கெனவே முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம்பற்றிப் பேசுவதற்கு எமது இயக்கம் இணக்கம் தெரிவித்தபோதும் சந்திரிகா அதற்கு இணங்காது காலத்தை இழுத்தடித்தார். இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, அரசியல் வெறுமைக்குட் காலம் ஓடியது. இந்த அரசியற் சூனியத்திற்குள், இந்த நிச்சயமற்ற வெறுமைக்குள் எம்மைச் சிக்கவைத்து, எமது விடுதலைப் போராட்டத்தைத் திசைதிருப்பி மழுங்கடிப்பதே சிங்கள ஆட்சியாளரின் வஞ்சக நோக்கம் என்பதை நாம் உணர்ந்துகொண்டோம். இனித் தொடர்ந்தும் சமாதான மாயைக்குள் செயலற்று இருப்பது அபத்தம் என எண்ணிய நாம் எமது தேச விடுதலைப் போராட்டத்தைக் காலதாமதமின்றி முன்னெடுக்கத் தீர்மானித்தோம். அதற்கான செய்திட்டத்தை நெறிப்படுத்திக் கொண்டிருந்த வேளையிலேயே, அதாவது சென்ற ஆண்டுக் கடைசியில், இயற்கையின் அந்தக் கோரத்தாண்டவம் நிகழ்ந்தது.



திடீரென எவருமே எதிர்பாராத் தருணத்தில் இந்தப் பேரவலம் நிகழ்ந்தது. எமது தாயகப்பூமியின் கிழக்குக் கரையோரக் கிராமங்கள், குடியிருப்புகள் மீது சுனாமிப் பேரலைகள் தாக்கி என்றுமில்லாத பேரழிவுகளை ஏற்படுத்தின. இயற்கையின் இரக்கமற்ற இந்த ஊழிக் கூத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் இருபதினாயிரம் பேர் கொன்றொழிக்கப்பட்டனர். மூன்று லட்சம் பேர்வரை வீடுகள், சொத்துக்களை இழந்து அகதிகளாக அல்லற்பட்டனர். ஏற்கெனவே யுத்தத்தினாற் சிதைந்து போயிருந்த தமிழர் தேசம்மீது இன்னொரு பேரழிவு ஏற்பட்டதால், சுமக்கமுடியாத துன்பப் பளுவைச் சுமக்க எமது மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உடனடியாகவே இப்பேரவலத்திற்கு முகங்கொடுக்க எமது விடுதலை இயக்கம் முடிவெடுத்தது. எமது இயக்கத்தின் படைத்துறைப் பிரிவுகளும் மற்றும் நிர்வாக, சமூகசேவைக் கட்டமைப்புகளும் களத்தில் இறங்கிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான, நிவாரணப் பணியில் ஈடுபட்டன.

ஆழிப்பேரலை அனர்த்தம் உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டதால், பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்கெனப் பெரும்தொகையில் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு உலகநாடுகள் முன்வந்தன. அதேசமயம், எமது விடுதலை இயக்கத்துடன் கூட்டுச்சேர்ந்து, ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குச் சந்திரிகா அம்மையார் விருப்பம் தெரிவித்தார். பேரவலத்திற்கு ஆளாகி நிற்கும் தமிழ்பேசும் மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய தேவை அன்று எமக்கு எழுந்தது. இதனால் சந்திரிகா அரசாங்கத்துடன் பேசி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் பெற்றுக்கொடுக்க முடிவெடுத்தோம். நோர்வேயின் அனுசரணையுடன் இருதரப்புச் சமாதானச் செயலகங்கள் மட்டத்திற் பேச்சுக்கள் நிகழ்ந்தன. முடிவின்றி, நீண்டகாலத்திற்கு இப்பேச்சுக்கள் இழுபட்டுச் செல்வதை நாம் விரும்பவில்லை. ஆகையால் நாம் மென்போக்கைக் கடைப்பிடித்து, சில முக்கிய விடயங்களில் நெகிழ்ந்து கொடுத்து, ஒரு நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதற்கு இணங்கினோம். இதற்கான உடன்பாடும் கைச்சாத்தாகியது.

சிறீலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து உருவாக்கிய இந்த நிவாரணக் கட்டமைப்புக்கு அனைத்துலக நாடுகளும் தமது நல்லாதரவை வழங்கின. முரண்பட்டு நின்ற இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படும் நல்லெண்ணச் சூழ்நிலை பிறந்துள்ளதாக நம்பிக்கை தெரிவித்தன. ஆயினும் இந்த நல்லெண்ணச் சூழ்நிலை உருவாகுவதையோ, தமிழருக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதையோ சிங்கள - பௌத்த இனவாதச் சக்திகளாற் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஜே.வி.பி நிவாரணக் கட்டமைப்புக்குக் கடுமையான ஆட்சேபம் தெரிவித்து அரசிலிருந்து விலக்கிக்கொண்டது. ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற தீவிர இனவாதக் கட்சிகள் இந்த நிவாரண உடன்பாடு சிறீலங்கா அரசியலமைப்புக்கு விரோதமானதென உயர்நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்தன. சிங்கள இனவாதச் சக்திகளுக்குச் சார்பான முறையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சுனாமிக் கட்டமைப்பை முழுமையாக முடக்கிச் செயலிழக்கச் செய்தது.

சுனாமிக் கட்டமைப்புக்குச் சாவுமணி அடிக்கப்பட்டதுடன் தமிழ்மக்களுக்கு எஞ்சியிருந்த இறுதி நம்பிக்கையையும் சிங்களப் பௌத்தப் பேரினவாதம் சாகடித்துவிட்டது. சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி சந்திரிகாவினாற்கூட, சிங்கள இனவாதச் சக்திகளை மீறித் தமிழ்மக்களுக்கு ஒரு நிவாரணத் திட்டத்தைத்தானும் நிறைவுசெய்ய முடியவில்லை. நிலைமை இப்படி இருக்கும்பொழுது பேரினவாதச் சகதியில் மூழ்கிக் கிடக்கும் சிங்கள அதிகார வர்க்கத்திடமிருந்து நீதியை எதிர்பார்ப்பது முட்டாள்தனம். சுனாமி நிர்வாகக் கட்டமைப்பானது எந்தவிதமான அரசியல் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அதற்கு உருப்படியான நிர்வாக வலுவும் இருக்கவில்லை. மிகவும் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட ஒரு தற்காலிக ஒழுங்கமைப்புக்கே தென்னிலங்கையில் இத்தகைய எதிர்ப்பு என்றால் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அதிகாரமுடைய ஆட்சியமைப்பைச் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேசிப் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவு. கடந்த நான்கு ஆண்டுகாலச் சமாதான முயற்சியின் பயனாக நாம் பட்டுணர்ந்துகொண்ட மெய்யுண்மை இது. இந்தச் சமாதான நாடகத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்துவந்த உலக நாடுகளுக்கும் இந்த உண்மை தெளிவாகியிருக்கும் என்றே நாம் நம்புகிறோம்.

எனது அன்பான மக்களே,

சிங்கள ஆட்சியாளரின் நயவஞ்சக அரசியலுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக இன்னொரு பாரதூரமான விடயத்தையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். சமாதானத்தின் திரைக்குப் பின்னால், மறைமுகமாக, எமது இயக்கத்திற்கு எதிராக நிகழ்த்தப்படும் ஓர் இரகசிய யுத்தம் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். எமது விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, எமது போராட்டத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்குடன் இந்த நாசகார நிழல் யுத்தம் ஏவிவிடப்பட்டது. எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள், முக்கிய போராளிகள், ஆதரவாளர்கள் எமக்கு ஆதரவான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் என்ற வகையில் பெருந்தொகையானோர் மிகவும் கோழைத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இந்த நிழல் யுத்தத்தின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது எமக்கு நன்கு தெரியும். இராணுவப் புலனாய்வுத்துறையின் வழிநடத்தலில் இந்த வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோதும் இதன் பின்புலத்திற் சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அரூப கரங்கள் செயற்படுவதையும் நாம் அறிவோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில், அரச படையினரின் பாதுகாப்புக் கவசத்துடன் ஒட்டுப் படைகளான தமிழ் ஆயுதக் குழுக்களை கருவிகளாகக் கொண்டு இந்த மறைமுக யுத்தம் நடத்தப்படுகிறது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக நின்று அரசியற் பணிகளில் ஈடுபட்ட எமது போராளிகள் கொலைசெய்யப்படுவதையும், எமது அரசியற் செயலகங்கள் தாக்கியழிக்கப்படுவதையும் நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். ஆனால், சிங்கள அரசு எமது ஆட்சேபனைகளைப் பொருட்படுத்தவில்லை. இதனால் இறுதியில் எமது அரசியற் போராளிகளை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் மீள அழைக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

போருக்கு ஓய்வுகொடுத்ததால் உருவாகிய சமாதானச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஒரு வித்தியாசமான மென்தீவிர யுத்தம் எம்மீது தொடுக்கப்பட்டிருக்கிறது. போர் நிறுத்த விதிகளுக்கு அமையத் தமிழ்க் கூலிப்படைகளின் ஆயுதங்களைக் களையவேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடு. இந்த முக்கிய கடப்பாட்டை நிறைவுசெய்யத் தவறிய சிங்கள அரசு, இந்த ஆயுதக் குழுக்களையே கருவிகளாகப் பயன்படுத்தி எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராக வன்முறையை ஏவிவிட்டிருப்பது ஒரு பாரதூரமான போர்க்குற்றமாகும். ஒரு கையால் அரவணைப்பதுபோல நடித்து மறுகையாற் குத்தும் நம்பிக்கைத் துரோகச் செயலிது. சமாதான முயற்சியிலும் சமரசத் தீர்விலும் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு உண்மையான ஆர்வமும் அக்கறையும் இருக்கவில்லை என்பதையே இச்செயற்பாடு எடுத்துக்காட்டுகிறது. இராணுவ அணுகுமுறையை

(16ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

# 2005 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

இவர்கள் இன்னும் கைவிட்டதாகத் தெரியவில்லை. சமாதானச் சூழலிலும் ஒரு புதிய வடிவிற் போரை உருமாற்றம் செய்து இராணுவப் பயங்கரவாதத்தைத் தொடர்கிறது சிங்கள அரசு. இந்த நிழல் யுத்தத்தின் நிஜ வடிவத்தையும் அதன் அசிங்கமான முகத்தையும் அந்தரங்க நோக்கத்தையும் சர்வதேச சமூகம் கண்டுகொள்ளும் என நாம் நம்புகிறோம்.

சமாதானம், போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன எல்லாம், தமிழ்மக்களைப் பொறுத்தவரை, அர்த்தமற்ற சொற்பதங்களாக, யதார்த்த மெய்ந்நிலைக்குப் பொருந்தாத வார்த்தைப் பிரயோகங்களாக மாறிவிட்டன. சமாதானச் சூழலில் நிகழ்த்தப்படும் மறைமுக யுத்தம், போர்நிறுத்த விதிகளுக்கு முரணாகத் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, சமரசப் பேச்சுக்களைப் பயன்படுத்திப் பின்னப்படும் சர்வதேசச் சதிவலைப் பின்னல் - இப்படியாக அமைதி முயற்சி திரிவுபடுத்தப்பட்டுத் தவறான முறையிற் பயன்படுத்தப்படுகிறது. இதனால் எமது மக்களுக்கு எல்லாவற்றிலுமே நம்பிக்கை இழந்துவிட்டது.

நிலையான அமைதியையும் நிம்மதியான வாழ்வையும் பெற்றுத்தராத சமாதானத்தில், வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை அகற்றமுடியாத போர்நிறுத்தத்தில், தீராது தொடரும் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடித்தராத பேச்சுக்களில், எமது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

நிலையற்ற வாழ்வையும், நிச்சயமற்ற எதிர்காலத்தையும் இனியும் எமது மக்கள் பொறுத்துக்கொள்ளத் தயாராக வில்லை. பொறுத்துப் பொறுத்து பொறுமையிழந்த தமிழ் மக்களின் பொங்குணர்வாகவே அவர்களது அரசியல் அபிலாசைகளின் ஆவேச வெளிப்பாடாகவே தமிழீழத் தாயகமெங்கும் வெகுசனப் போராட்டங்கள் வெடித்துவருகின்றன. சமீப காலமாக, தமிழ்மாவட்டங்கள் தோறும் மாறி, மாறி அரங்கேறிவரும் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வுகளிற் சமுத்திரமாக மக்கள் திரண்டெழுந்து உரிமை முழக்கம் செய்து வருகிறார்கள்.

சுயநிர்ணய உரிமைகோரி, தம்மைத் தாமே ஆட்சி புரியும் அரசியற் சுதந்திரங்கோரி, தமிழீழ மக்கள் எழுப்பும் உரிமைக் குரலானது உலக மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டத் தொடங்கியுள்ளது. ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட தேசமாக அணிதிரண்டு நிற்கும் தமிழினத்தின் உரிமைக் குரலைச் சர்வதேசச் சமூகம் இனியும் அசட்டை செய்யமுடியாது. தமது அரசியல் தகைமையைத் தாமாகவே நிர்ணயித்துக் கொள்ள எமது மக்கள் விரும்புகிறார்கள். காலங்காலமாக அரச ஒடுக்குமுறைக்கு ஆளாகிய ஒரு தேசிய மக்கள் சமுதாயம் என்ற ரீதியில், தமது அரசியல் அபிலாசைகளைச் சர்வதேசச் சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்பதே எமது மக்களின் அறைகூவலாகும்.

எமது சுயநிர்ணயப் போராட்டப் பயணத்தில் நாம் இன்று ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்புமுனையை அடைந்துள்ளோம். தென்னிலங்கை அரசியல் அதிகார வர்க்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை என்றுமே அங்கீகரிக்கப் போவதில்லை. சிங்களப் பௌத்தப் பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டத்திலும், அந்தச் சட்டத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆட்சியமைப்பிலும் தமிழினத்தின் சுயநிர்ணயத்திற்கு என்றுமே இடமிருக்கப் போவதில்லை. நாமாகவே போராடி, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்பதை எமது மக்கள் இன்று உணர்ந்துவிட்டார்கள். சுயநிர்ணயம் என்பதே சுயமாக, சுதந்திரமாக, மற்றவர்களின் தலையீடின்றி, எமது அரசியல் வாழ்வை நாமாகத் தீர்மானிப்பது தான். அந்தக் காலமும் சூழலும் இப்போது கனிந்துவிட்டது.

தமிழரின் தேசியத் தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களுக்கு ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்தளித்து, அவர்களை அரவணைத்து வாழச் சிங்களத் தேசம் மறுத்துவருகிறது. இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு, கடந்த 57 ஆண்டுகளாக இந்த அரசியற் புறக்கணிப்புத் தொடர்கிறது. வேண்டப்படாத இனத்தவராக, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறந்தள்ளி வைக்கப்பட்ட மக்களாக வாழ்ந்து சலித்துப்போன தமிழர், சிங்கள ஆட்சியமைப்பையும் அதன் அதிகாரபீடத்தையும் ஒதுக்கிப் புறக்கணிக்கத் தீர்மானித்துவிட்டனர். சிறீலங்காவின் அரச அதிபர் தேர்தலில், பெரும்பான்மையான தமிழ்மக்கள் வாக்களிக்காதமை இந்தப் புறக்கணிப்பின் காத்திரமான வெளிப்பாடாகும். சிங்களத்தின் அரச அதிபரைத் தீர்மானிக்கும் வாக்குப் பலம் இருந்தபோதும் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்த எமது மக்கள் விரும்பவில்லை. வேட்பாளர்கள் மீதான தனிப்பட்ட விருப்பு வெறுப்பாகவோ அவர்களது கட்சிகள், கொள்கைகள் மீதான தீர்ப்பாகவோ இதனைக் கருதுவது தவறு. ஒட்டுமொத்தமாகச் சிங்கள ஆட்சியமைப்பில் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆழமான விரக்தியினதும் நம்பிக்கையீனத்தினதும் வெளிப்பாடாகவே இத்தேர்தற் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது. தமிழரின் அரசியற் போராட்ட வரலாற்றில் இதுவொரு பாரதூரமான திருப்பத்தை சுட்டிக்காட்டுகிறது. சிங்கள அரசியல் ஆட்சிமுறையில் நம்பிக்கையிழந்த தமிழீழ மக்கள், தனிவழி சென்று தமது அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் துணிந்துவிட்டனர் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

சிங்களத் தேசமானது ஒரு புதிய தேசத் தலைவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்தத் தலைவனின் கீழ் ஒரு புதிய ஆட்சிபீடம் பதவி ஏறியுள்ளது. இந்த ஆட்சியமைப்பானது பிரத்தியேகமாகச் சிங்களப் பெரும்பான்மை மக்களால், அவர்களது வாக்குப் பலத்தால் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியமைப்பிற் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் பங்களிப்பு இருக்கவில்லை. இது முற்றுமுழுதாகவே ஒரு சிங்களப் பௌத்த ஆட்சிபீடமாகும். இதனால் மகிந்த ராஜபக்சா இலங்கை வாழ் மக்கள் சமூகங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. அவர் சிங்கள - பௌத்த மக்களின் நலனைப்பேணும் அரச அதிபராகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அரச அதிபர் மகிந்தாவின் சிந்தனைகளையும் கொள்கைகளையும் நாம் நன்கறிவோம். தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக அவரது அரசியல் தரிசனத்திற்கும் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் மத்தியிலான இசைவற்ற இடைவெளிகளையும் இணங்காத முரண்பாடுகளையும் நாம் அறிவோம். இவைபற்றி நான் இங்கு ஒப்பீட்டு மதிப்பாய்வு செய்ய விரும்பவில்லை.

சமீபத்திய அரச அதிபர் தேர்தலும் அதனை எமது மக்கள் புறக்கணித்ததால் ஏற்பட்ட ஆட்சிமாற்றமும் தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில், அரசியல் ரீதியாக, ஆழமான ஒரு பிளவை ஏற்படுத்தியுள்ளன. தென்னிலங்கையில், சிங்கள - பௌத்தம் மேலாண்மை பெற்றுள்ள அதே சமயம், தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியம் நிலைப்பட்டு, பலப்பட்டு, எழுச்சி பெற்று வருகிறது. சிங்களத்தில் மகிந்த ராஜபக்சாவின் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. தமிழீழத்திலும் தமிழ்த் தேசிய எழுச்சியின் திண்ணிய வடிவமாக எமது விடுதலை இயக்கத்தின் ஆட்சியமைப்பு விரிவடைந்து, வலுவடைந்து இயங்கி வருகிறது.




சிங்கள இராணுவ ஆதிக்கத்திலிருந்து எமது தாயக நிலத்தின் பெரும் பகுதியை நாம் மீட்டெடுத்து, அங்கு தன்னாட்சி அதிகாரமுள்ள ஆட்சியமைப்பை நிறுவி, அதனை நேர்த்தியாக நிர்வகித்து வருகிறோம் என்பது இன்று உலகறிந்த உண்மை. பெருந்தொகை மக்கள் வாழும் நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் அதனைக் கட்டிக்காக்க பலம் பொருந்திய படைத்துறையையும் சட்டம் ஒழுங்கைப் பேணக் காவல்துறையையும் நீதித்துறையையும் அத்தோடு ஒரு நிழல் அரசாங்கத்திற்குரிய அடித்தளக் கட்டுமாணங்களையும் கொண்டதாக பிரமாண்டமான நிர்வாக அமைப்பை நாம் இயக்கி வருகிறோம். பெரும் தொகையான எமது மக்கள் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த போதும், உணர்வாலும் இலட்சியத்தாலும் அவர்கள் எமது விடுதலை இலட்சியத்திற்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள். இந்தக் கள யதார்த்தத்தை, அரசியல் மெய்ம்மையைச் சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், எமது விடுதலை இயக்கத்தை ஒரு 'பயங்கரவாதக் குழு' என உலகத்திற்குச் சிறுமைப்படுத்திச் சித்திரித்துக்காட்ட முனைந்து வருகிறார்கள். இந்தப் பொய்யான பரப்புரைகளை நம்பி, உலக நாடுகள் சில எமது இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் தொடர்ந்தும் வைத்திருப்பது எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது. சமாதான முயற்சியின் பாதுகாவலர் என உரிமைகோரி, இலங்கையின் இனப்பிரச்சினையில் ஆர்வமும் அக்கறையும் காட்டிய உலக வல்லாதிக்க நாடுகள், ஒரு தரப்பினரான எமது விடுதலை இயக்கத்தைப் 'பயங்கரவாதிகள்' என ஓரங்கட்டி ஒதுக்கிவிட்டு, மறுதரப்பினரான சிறீலங்கா அரசின் நலன்களுக்குச் சார்பாக நிலைப்பாடு எடுத்தன. இது பேச்சுக்களிற் பங்குகொண்டோரது சமநிலை உறவை வெகுவாகப் பாதித்தது. அத்தோடு எமது அரசியல் தகைமையை நாமே தீர்மானிக்கும் சுதந்திரத்தையும் பாதித்தது. இந்நாடுகளின் ஒருதலைப்பட்சமான நிலைப்பாடும் குறுக்கீடும் சமாதானப் பேச்சுக்கள் முறிந்துபோவதற்கும் ஒரு காரணமாக அமைந்தன. பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான, தீர்க்கமான வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழிதழுவி நிகழும் நியாயமான அரசியற் போராட்டங்களும் பயங்கரவாதமாகத் திரிவுபடுத்தப்படுகின்றன. இந்தவகையில் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதச் சேறு பூசப்படுகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடிமறைக்கப்படுகிறது. ஆயினும் அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர்கள் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது. இந்தத் துர்ப்பாக்கிய நிலைதான் எமது விடுதலை இயக்கத்திற்கும் ஏற்பட்டிருக்கிறது.

நோர்வே நாட்டின் அனுசரணையுடனும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் கடந்த நான்கு ஆண்டு காலம்வரை இழுபட்ட சமாதான முயற்சியின்போது சிங்கள அரச தரப்பினால் ஏற்பட்ட சிக்கல்கள், போடப்பட்ட முட்டுக்கட்டைகள், இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்கள் எல்லாவற்றையுமே உலகம் நன்கறியும். எத்தனையோ இம்சைகள், ஆத்திரமூட்டல்கள் மத்தியிலும் நாம் பொறுமையை இழந்து, சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை என்பதையும் சர்வதேசச் சமூகம் அறியும். நான்கு ஆண்டுக்கால அமைதிப் பயணத்திற் சமாதானத்தின் மீதான எமது பற்றுறுதியை நாம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துக் காட்டிவிட்டோம்.

எனது அன்பான மக்களே,

எமது போராட்ட இலட்சியத்தை அடையும் அணுகுமுறை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய காலத்தை நாம் நெருங்கிவிட்டோம். இந்த வரலாற்றுத் திருப்புமுனையான கட்டத்தில், எமக்கு ஒரு புதிய சவாலாக, சிங்களத் தேசத்தில் ஒரு புதிய அரச அதிபரின் தலைமையில், ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது. இந்தப் புதிய அரசு எமக்கு நேசக்கரம் நீட்டுகிறது. எமது விடுதலை இயக்கத்துடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவிக்கிறது. போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து அமைதி பேணப் போவதாகச் சொல்கிறது. தமிழ்மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்து வருகிறது. ஜனாதிபதி மகிந்தாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சிந்தனைகளை ஆழமாக அலசிப் பார்க்கும் பொழுது தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளையோ அதன் மூலக் கோட்பாடுகளையோ அவர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. கொள்கைரீதியாக எமக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப்பெரிது. எனினும் அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கைகொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால், சமாதான வழிமுறையை எவ்விதம் கையாளப் போகிறார் என்பதையும், தமிழ்மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப் போகின்றார் என்பதையும் முதலில் நாம் அறிந்துகொள்வது அவசியம். ஆகவே, ஜனாதிபதி ராஜபக்சாவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சிறிதுகாலம் நாம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவு செய்துள்ளோம்.

பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து, விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள், எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்திசெய்யும் வகையில், ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான, அவசர வேண்டுகோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும்போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்.

எமது மாவீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும், எமது மண்ணின் விடுதலைக்காக அவர்கள் புரிந்த மகத்தான தியாகங்களையும் நினைவுகூரும் இப்புனித நாளில், எத்தகைய இடர்களையும் எத்தகைய துன்பங்களையும் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்போமென உறுதிபூணுவோமாக.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**